பக்கங்கள் : பதினெட்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 10 வியாழக்கிழமை (27.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 335

# தமிழர் தாயகத்தில் தேர்தலைத் தடுக்க கோரும் வழக்கு இன்று உயர்நீதிமன்றத்தில்

## ஆட்சேபித்து ரணிலும் நேற்று இடையீட்டு மனுத் தாக்கல்

கொழும்பு, ஒக்ரோபர் 27

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பை அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத தமிழர் தாயகப் பிரதேசத்தில் நடத்தக் கூடாது என உத்தரவிடக்கோரித் தாக்கல்செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு உயர்நீதிமன்றத்தில் இன்று எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.**

**இந்த மனுவை ஆட்சேபித்துள்ள எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க, இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பான வழக்கில் தம்மையும் ஓர் எதிர்மனுதாரராகச் சேர்த்துக் கொள்ளக்கோரி இடையீட்டு மனு ஒன்றை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.**

**மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையமும் இதேபோன்ற ஓர் இடையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளது.**

மேற்படி அடிப்படை உரிமை மீறல் மனுக்களோடு சேர்த்து இந்த இடையீட்டுக் கோரிக்கை மனுக்களும் இன்று உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, நிமால் காமினி அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன.

ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் சார்பில் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நெல்ஸன் பெரேரா என்பவரே இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

"அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத பிர

(18ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் எழுச்சி மாநாடு அடுத்தமாதம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.27

குடாநாட்டில் உள்ள அனைத்து உயர்தர வகுப்பு மாணவர் பிரதிநிதிகளையும் ஒன்று சேர்த்து மாணவர் எழுச்சி மாநாடு ஒன்றை நடத்துவதற்கு தமிழ் மாணவர் ஒன்றியம் ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

அடுத்தமாதம் முற்பகுதியில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இம்மாநாட்டை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிரனேட் வீச்சு!

வவுனியா, ஒக்.27

வவுனியா நகரின் மத்தியில் பார்க்வீதியில் அமைந்துள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகம் கிரனேட் வீச்சுக்கு இலக்கானது. அலுவலகத்தின் பின்புறத்திலிருந்தே கிரனேட் வீசப்பட்டுள்ளது.

நேற்று மாலை 4.20 மணியளவில் பின்புறமாக இருந்து வந்து விழுந்த கிரனேட், உள்

(18ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இன்று மீண்டும் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு

வவுனியா, ஒக். 27

கடந்த ஜூலை மாத இறுதியில் நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட பிரகடனத்திற்கு ஆதரவு தெரிவித்தும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்று கோரியும் வவுனியாவில் மீண்டும் இன்று தேசிய எழுச்சி நிகழ்வு இடம் பெறவுள்ளது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் பிற்பகல் 4.00 மணிக்கு எழுச்சி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

நிகழ்வு குறித்து கடந்த சில வாரங்களாக பல்கலைக்கழக மாணவர்களும் கல்வியியல் கல்லூரி மாணவர்களும் நேரடியாக மக்களிடம் சென்று பரப்புரைகளை மேற்கொண்டு வந்தனர்.

இன்றைய எழுச்சி நிகழ்வையொட்டி வவு

(18ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தன கொலை வழக்கு: புலி உறுப்பினர் கோபி நேற்று விடுவிப்பு

கொழும்பு, ஒக். 27

யாழ். இணுவில் பகுதியில் வைத்துக் கடத்திக் கொலைசெய்யப்பட்ட பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவின் வழக்கில் முக்கிய சந்தேகநபராகக் கருதப்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினர் வீரபாண்டியன் கோபி, நேற்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்குப் போதிய சாட்சியங்கள் இல்லை என்பதால்

(18ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் அரச ஊடகங்கள் மற்றும் அரச ஊழியர்களின் செயற்பாட்டு நடைமுறை குறித்து ஜனாதிபதி சுற்றறிக்கை

### இன்னும் ஓரிரு நாள்களில் வெளிவரும்

கொழும்பு, ஒக்.27

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது அரச ஊடகங்கள், முப்படையினர் மற்றும் அரச ஊழியர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறை தொடர்பில் விசேட சுற்றறிக்கையொன்றை வெளியிடுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தீர்மானித்திருக்கிறார் என ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

முன்னதாக, கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி சந்திரிகாவிற்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகளின்போது, எதிர்வரும் தேர்தலில் ஊழியர்களை சுயாதீனமாகச் செயற்படவைப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதன்படி, ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அரச ஊடகங்கள் பாரபட்சமின்றி செயற்படவும், முப்படையினர் மற்றும் அரச ஊழியர்கள் சுயாதீனமாகச் செயற்படவும் வழிகோலும் கொள்கைகள் அடங்கிய சுற்றறிக்கை ஜனாதிபதியினால் வெளியிடப்படவுள்ளது.

ஏற்கனவே, அரச ஊடகங்கள் நடுநிலையாகச் செயற்படவேண்டுமென அரச ஊடகங்களின் தலைவர்களை ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## வடபகுதி இளைஞர்கள் நால்வர் கொழும்பில் திடீரெனக் காணோம்!

### பொலீஸார் கைதுசெய்தனர் என்று சந்தேகம்

கொழும்பு, ஒக். 27

பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டதாகக் கருதப்படும் - வடபகுதியைச்சேர்ந்த - நான்கு இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து தெரியவில்லையெனக் கூறப்படுகிறது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் செல்வதற்காக யாழ். நெல்லியடியைச் சேர்ந்த சுரேந்திரன், பிரசன்னா, ஞானசீலன், கிரிஷாந்தன் ஆகிய நான்கு தமிழ் இளைஞர்களும் வெள்ளவத்தையிலிருந்து வான் ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு புறப்பட்டனர்.

தெமட்டகொடவில் இவர்கள் சென்றுகொண்டிருந்தபோது இவர்களின் வாகனத்தை வழிமறித்த பொலீஸ் ஜீப் ஒன்றில் இருந்தவர்கள் எனக் கருதப்படும் பொலீஸார் இவர்களை விசாரணைக்குட்படுத்திய பின்னர் இவர்களைக் கைதுசெய்தனர் எனக் கருதப்படுகின்றது.

பொலீஸார் கைதுசெய்த விடயம் தொடர்பில் இளைஞர்களில் ஒருவர் உறவினர்களுக்கு கைத்தொலைபேசி ஊடாக அறிவித்தார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## நடைபாதை வியாபாரிகள் திரண்டு மாநகரசபை முன்பாக மறியல்!

### யாழ்.நகரில் வியாபாரத்துக்கு அனுமதிக்கக்கோரி

யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ். மாநகரசபை அலுவலகத்தின் முன்பாக நேற்று நடைபாதை வியாபாரிகள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். நகரப்பகுதியின் மின்சார நிலைய வீதிப் பகுதியில் பண்டிகைக்கால வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு தம்மை அனுமதிக்க வேண்டும் என்று ஆணையாளரிடம் கோரியே இந்த ஆர்ப்பாட்டத்தை அவர்கள் நடத்தினர்.

நேற்று நண்பகல் பெரும் எண்ணிக்கையான வியாபாரிகள் ஒன்றுதிரண்டு யாழ்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## சோமாலியாவில் விடுவிக்கப்பட்ட கப்பல் கப்டன் இன்று திரும்புகிறார்

கொழும்பு, ஒக்.27

சோமாலியாவில் கொள்ளையர்களால் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழரான கப்பல் கப்டன் செல்லத்துரை மகாலிங்கம் நேற்று விடுவிக்கப்பட்டார்.

கென்யாவில் தங்கியிருக்கும் மகாலிங்கம் அங்கிருந்து புறப்பட்டு நாளை வெள்ளிக்கிழமை காலை 6.25 மணிக்கு கொழும்பு வந்து சேர்வார் என அவரின் மனைவி 'உதயன்' இற்குத் தெரிவித்தார்.

இலங்கையரான மகாலிங்கம் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தின் கீழ் உணவுப் பொதிகள் ஏற்றிக் கொண்டு செல்லும் கப்பலின் கப்டனாகக் கடமை புரிந்தார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். குடாநாட்டில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளின் வாடிக்கையாளர் தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி மக்கள் வங்கியின் உயரதிகாரிகள், கிளை முகாமையாளர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்றுமாலை 6 மணியளவில் யாழ். பஸ்தியான் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் து.ரகு உரையாற்றுவதையும் மக்கள் வங்கியின் தலைமையகத்திலிருந்து வருகைதந்த உயரதிகாரி எஸ்.வசந்தகுமார் மற்றும் ஏனைய அதிகாரிகள் வாடிக்கையாளர்களுடன் கலந்துரையாடுவதையும், யாழ். குடாநாட்டு மக்கள் வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள் நிற்க வாடிக்கையாளர்கள் சிலர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: தேவா)

# மாவீரர் தினத்தை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கத் தயாராகிறது குடாநாடு

## ஏற்பாட்டுக் குழுக்கள் அமைப்பு; பணிகள் பகிர்ந்தளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.27

ஈழத்தமிழர்களின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரத் தியாகிகளை உணர்வெழுச்சியுடன் நினைவு கூருவதற்கு யாழ்ப்பாணக் குடாநாடு தயாராகிவருகிறது.

நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் தினம். முன்னதாக 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை மாவீரர் வாரமாக அனுஷ்டிப்படுவது வழக்கம். அந்த வகையில் இம்முறையும் மாவீரர் வாரத்தை மிகுந்த உண்ர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் குடாநாடு தழுவிய ரீதியில் தொடங்கப்பட்டிருக்கின்றன. பிரதேச ரீதியாக ஏற்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுப் பணிகள் பகிர்ந்தளிக்கப் பட்டு முன்னெடுக்கப்படுகின்றன.

துயிலும் இல்லங்கள் அனைத்திலும் புனரமைப்புப் பணிகள்,மெருகூட்டும் வேலைகள், சிரமதானப் பணிகள் என்பன துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்முறையும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு, வீதிகள் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்படல், வளைவுகள் அமைத்தல் மற்றும் நினைவுப் பந்தல்களை அமைத்து மாவீரர்களின் திருவுருப்படங்களை வைத்தல் போன்றபணிகள் பிரதேச ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் நடத்தப்படுவதற்குரிய வேலைகள் தெரிவு செய்யப்பட்ட குழுக்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக மாவீரர்தின ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். பொதுமக்கள் இப்பணிகளில் தாமாகவே முன்வந்து செயற்படத் தொடங்கியிருக்கின்றனர் என்றும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (த-12)

## யாழ். மாநகரசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ். மாநகர சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாநாகர சபையின் செயலாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும், கௌரவ விருந்தினராக மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானமும் கலந்கொள்ளவுள்ளனர்.

இதில் உள்ளூராட்சி வாரத்தையொட்டி மாநகர சபையினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில் வழங்கலும் இடம்பெறும். (த-13)

# உருக்குலைந்த நிலையில் சிசுவின் சடலம் மீட்பு

## நாரந்தனைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.27

ஊர்காவற்றுறை - நாரந்தனைப் பகுதியில் உள்ள கைவிடப்பட்ட கிணறு ஒன்றில் இருந்து நேற்றுக்காலை சிசு ஒன்றின் சடலம் மீட்கப்பட்டது.

மிகவும் உருக்குலைந்த நிலையில் துர்நாற்றம் வீசிய இந்தச் சடலம் பின்னர் ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்துத் தெரிவிக்கப்படுவதாவது:-

நாரந்தனை பண்டவாளிக் குளத்துக்குச் சமீபமாகவுள்ள கைவிடப்பட்ட கிணறு ஒன்றில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக பொதுமகன் ஒருவர் அப்பகுதி கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இதனை அடுத்து கிராம அலுவலரால் ஊர்காவற்றுறைப் பொலீஸாருக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

பொலீஸாரின் முறைப்பாட்டை அடுத்து அப்பகுதிக்குச்சென்ற ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் பா.சுப்பிரமணியம் விசாரணை நடத்தியதுடன் சிசுவின் சடலத்தை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

மிகவும் உருக்குலைந்த நிலையில், ஆண், பெண் என்றே அடையாளம் காணமுடியாதவாறு காணப்பட்ட சிசுவின் சடலம் யாழ். ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-7-12)

# மூத்த ஓவியர் கனகசபையின் ஓவியங்கள் கண்காட்சிக்கு

ஈழத்தின் மூத்த ஓவியர்களில் ஒருவராகிய முத்தையா கனகசபையின் ஓவியங்களின் கண்காட்சி இன்று தொடக்கம் நான்கு தினங்களுக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கின்றது. அவரது ஓவியங்களின் தொகுப்பு காட்சிக்கு 'கடந்த காலமும் கழிவிரக்கமும்' எனப் பெயரிடப்பட்டிருந்தது.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் தலைவட்டம் - முதுசம் - 9 நிகழ்வாக இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் கண்காட்சி ஆரம்பமாகும்.

ஆரம்ப நிகழ்வில் யாழ். பல்கலைகழகத் துணைவேந்தர் பேராசியர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ். பல்கலைக் கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ-204)

## விஞ்ஞான தினவிழா நாளையே நடக்கும்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விஞ்ஞான மன்றத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டு இன்று நடைபெறவிருந்த விஞ்ஞான தினவிழாவும், 'இந்து விஞ்ஞானி' நூல் மற்றும் இறுவட்டு வெளியீட்டு விழாவும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இன்றைய தினம் நடைபெற மாட்டாதென்றும் - இந்த நிகழ்வுகள் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு திட்டமிட்ட ஒழுங்கில் நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஊர்காவற்றுறையில் நாளை வலுவிழந்தோர் தினவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.27

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை ஏற்பாடு செய்துள்ள சர்வதேச சிறுவர், முதியோர், வலுவிழந்தோர் தினவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் யாழ். மாவட்ட செயலகத் திட்டப்பணிப்பாளர் க. கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற சமூகசேவை உத்தியோகத்தர் திருமதி ஆர். கந்தப்பா, ஊர்காவற்றுறை பல.நோ.கூ. சங்கப் பொதுமுகாமையாளர் என்.ஜெயராஜா, ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் எம்.யோகராசன், ஊர்காவற்றுறை வணிகர் கழகத் தலைவர் பி.அஞ்சலோ ஆகியோரும் கலந்து சிறப்பிப்பர்.

வரவேற்புரையை கிராம அலுவலர் க.சகாதேவனும், ஆசியுரையை சிவஸ்ரீ ஜெ.சந்திரகாந்தக்குருக்கள், வண.ஜே.ஏ.ஜேசுதாஸ் அடிகளார் ஆகியோரும் நிகழ்த்துவர். தொடர்ந்து முதியோர் கௌரவிப்பு, வலுவிழந்தோர் கௌரவிப்பும், சிறுவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறும். பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் வே.சிவராசா நன்றியுரை வழங்குவதுடன் நிகழ்வுகளை நெறிப்படுத்துவார். (எ)

#### வாக்குச் சீட்டுக்கள் எடுத்துவரப்பட்டதையடுத்து

# யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு விசேட பொலீஸ் பாதுகாப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.27

ஜனாதிபதித் தேர்தலையொட்டி யாழ். மாவட்ட செயலகத்துக்கு விசேட பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அடுத்து மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் யாழ். மாவட்டச் செயலகத்தில் இயங்கும் யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் நடைபெற்றுவருகின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகள் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இருந்து விமானம் மூலம் எடுத்து வரப்பட்டு யாழ். செயலகத்தில் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளன.

இதனையடுத்து யாழ். மாவட்ட செயலகத்தில் தற்காலிக பொலீஸ் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த தற்காலிக பொலீஸ் நிலையத்தில் சுமார் பத்திற்கு மேற்பட்ட பொலீஸார் கடமையாற்றுகின்றனர் என குறிப்பிட்ட பொலீஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (எ-7)

# தேர்தல் சுவரொட்டிகள், பதாகைகளை உடன் அகற்ற பொலீஸாருக்கு உத்தரவு!

## தேர்தல் ஆணையாளர் விடுத்தார்

கொழும்பு,ஒக்.27

நாட்டின் பல இடங்களிலும் உள்ள தேர்தல் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை உடனடியாக அகற்றுமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க நேற்று நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களினதும் பொறுப்பதிகாரிகளுக்கு கடிதம் ஒன்றின் ஊடாக அறிவித்துள்ளார்.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் - குறிப்பாகத் தென்மாகாணத்தின் பல இடங்களில் - ஜனாதிபதித் தேர்தலையொட்டிய சுவரொட்டிகளும் பதாகைகளும் அகற்றப் படாமல் இருக்கின்றன என்றும், அரசியல் அழுத்தங்களே இதற்குக் காரணமென்றும் பல்வேறு பிரதேசங்களிலிருந்து தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

இதனையடுத்தே பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையாளர் இந்த அவசர உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். இந்த உத்தரவிற்கமைய தேர்தல் சுவரொட்டிகள், பதாகைகள் அனைத்தையும் அகற்றுவதற்கான முழு அதிகாரம் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த செயற்பாட்டின்போது ஏற்படும் இடையூறுகள் குறித்துத் தமக்கு முறையிடுமாறும் தேர்தல் ஆணையாளர் மேலும் கேட்டுள்ளார். (எ-க)

# பட்டதாரிகள் போராட்டம் காரணமாக கல்விப் பணிமனை நேற்றும் இயங்கவில்லை

யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ். வலயக் கல்வி அலுவலகத்திற்கு நேற்றுக்காலை கடமைக்குச் சமுகமளித்த கல்வித்திணைக்கள ஊழியர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பயிலுநர் அல்லாத பட்டதாரிகளால் திரும்பியனுப்பப்பட்டனர்.

வடக்கு - கிழக்கு மாகாணசபை, மாகாண சபை பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட ஆசிரியர் நியமனப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியும், நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளித்தும் நிரந்தர நியமனம் கிடைக்கப் பெறாத பயிலுநர் அல்லாத பட்டதாரிகள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் எனக் கோரி கடந்த மூன்று நாள்களாக யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் பணிகளை முடக்கி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுவருவதுதெரிந்ததே.

வலயக் கல்வி அலுவலகத்திற்கு கடமைக்கு வந்த கல்வித் திணைக்கள உதியோகத்தர்கள் அலுவலகத்திற்குள் நுழைய முற்பட்டபோது போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தடுத்தனர்.

இதனையடுத்து பட்டதாரிகளுக்கும் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு மிடையே முறுகல் நிலை தோன்றியது.

சுமார் ஒரு மணி நேரம் வரை காத்திருந்த கல்வித் திணைக்கள ஊழியர்கள் பின்னர் திரும்பிச் சென்றனர். (எ-7)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.27

அராலி இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் வே.மோகனநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்விவலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராஜா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் உப செயலாளர் திருமதி ப.தயாபரன் கலந்துகொள்வார். (எ-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சர்வதேசத்தின் முன் கிழிபடும் இலங்கை அரசின் முகமூடி!

பிந்துனுவெவ தடுப்பு முகாமில் புனர்வாழ்வளித்தல் என்ற பெயரில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 28 தமிழ் இளைஞர்கள் 2000ஆம் ஆண்டு கொடூரமான முறையில் - மிகக் குரூரமான விதத்தில் - வெட்டியும், சுட்டும், அடித்தும் படுகொலைசெய்யப்பட்டனர். மேலும் பலர் படுகாயப்படுத்தப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட அதிகாரிகள் தண்டிக்கப்படுவதற்குப் பதிலாக இலங்கை அரசால் பதவி உயர்வுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு விடயத்தை அம்பலப்படுத்தி இலங்கை அரசை நேரடியாகக் குற்றம் சுமத்தியிருக்கின்றது ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு.

இந்தப் படுகொலைகள் குறித்து விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அந்த ஆணைக்குழு தனது விசாரணைகளை முடித்து அறிக்கையையும் சமர்ப்பித்தது. ஆனால், அந்த அறிக்கை வெளியிடப்படவில்லை. அரசுத் தலைமையால் மறைப்பில் போடப்பட்டுவிட்டது. உண்மையை அமுக்கி, தனது தரப்பின் கொடூரப் பேரினவாதப்போக்கை ஒழிக்கும் வழமையான பாணியில் அரசுத் தரப்பு நடந்துகொண்டது.

அரசு அந்த அறிக்கையை 'அமுக்கி' விட்டதால் அதனை இலங்கையில் அம்பலப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டது. இலங்கையில் நடைமுறையில் உள்ள இரகசியக் காப்புச் சட்டம் அரசுக்கு இது விடயத்தில் நன்கு உதவியது.

ஆனால், ஆசிய மனித உரிமைகள் அமைப்போ அந்த அறிக்கையை புதுடில்லியில் வைத்து வெளியிட்டு தென்னிலங்கை சிங்கள அரசின் முகமூடியைக் கிழித்தெறிந்திருக்கின்றது.

சட்டரீதியான - ஜனநாயக ரீதியில் தெரிவான - மனித உரிமைகளை மதிக்கின்ற - அரசு என்று சர்வதேச சமூகத்தின் முன்னால் தனக்குத் தானே புகழாரம் சூட்டிக்கொள்ளும் சிங்கள அரசு, அந்த அறிக்கையை மறைத்ததன் மூலம் தன்னை 'நியாயமான' அரசாகக் காட்டிக்கொண்டது. அது மட்டுமல்ல, பிந்துனுவெவத் தடுப்பு முகாமில், நிராயுத பாணிகளாகக் காவலில் இருந்த தமிழ் இளைஞர்கள் இருபத்தியெட்டுப் பேரின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்ட அதிகாரிகள் அனைவரையும் தண்டிப்பதற்குப் பதிலாக அவர்களுக்குப் பதவி உயர்வுகளையும் வழங்கி அவர்களை 'கௌரவப்படுத்தியிருக்கிறது' அரசு என்பதையும் ஆசிய மனிதஉரிமைகள் ஆணைக்குழு அம்பலப்படுத்தியிருக்கின்றது.

இந்தப் படுகொலைகள் தொடர்பாக சில அதிகாரிகளுக்கு எதிராகத் தென்னிலங்கை நீதிமன்றத்தில் இதே அரசினால் குற்றம் சுமத்தப்பட்டதும் -

இந்த அதிகாரிகளுக்கு எதிராக இதே அரசினால் தொடரப்பட்டு, நடத்தப்பட்ட வழக்குகளின் முடிவில் போதிய ஆதாரங்கள் இல்லை என்ற பெயரில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் அனைவருமே விடுவிக்கப்பட்டனர் என்பதும் - தெரிந்தவையே.

இருபத்தியெட்டுக் கொடூரக் கொலைகள் தொடர்பாக நீதிமன்றத்தில் குற்றம்சுமத்தப்பட்டவர்கள் ஒருபுறம் விடுவிக்கப்பட, மறுபுறம் இக்கொலைகள் தொடர்பாக விசாரணைகள் நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை ஒளித்து மறைத்துவிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மெச்சிப் பாராட்டப்பட்டு, பதவி உயர்வு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதுதான் இந்த நாட்டில் நீதி நிலைநாட்டப்படும் சீத்துவம்!

"இலங்கையில் பொலிஸ் சித்திரவதைகள் பேரழிவின் மட்டத்துக்கு வளர்ந்துவிட்டிருக்கின்றன. எனவே, இதனைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்." - இப்படி ஹொங்கொங்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் பாதுகாப்பு இயக்கங்களில் ஒன்றான ஆசிய சட்டவள நிலையம், ஐ.நா.வின் சித்திரவதைகளுக்கெதிரான குழுவுக்கு நீண்ட அறிக்கை ஒன்றை அனுப்பிக் கோரியிருந்தது. அது பற்றிய செய்தி வெளியாகி மூன்று தினங்களுக்குள் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைகள் தொடர்பான விசாரணை அறிக்கையை அமுக்கிய அரசின் படுபாதகப் போக்கு அம்பலமாகியிருக்கின்றது.

"இலங்கைப் பொலீஸார் காடையர்கள், குண்டர்கள் போலவே செயற்படுகின்றார்கள். அவர்கள் புரியும் சித்திரவதைகள், பேரழிவுகள் தலைவிரித்தாடும் மட்டத்துக்கே உயர்ந்துவிட்டன.

"இலங்கையின் பிரதான அரச நிறுவனங்களான பொலீஸ், நீதி, பரிபாலனத்துறைகள் போன்றவற்றின் செயற்பாடுகள் முற்றாகச் செயலிழந்து கிடக்கின்றன" - இவ்வாறு ஆசிய சட்டவள நிலையம் சுட்டிக்காட்டியிருந்தது.

அந்தக் குற்றச்சாட்டின் உண்மைத் தன்மையை நிரூபிப்பதற்கான நல்லதொரு உரைகல்தான் - உதாரணம்தான் - பிந்துனுவெவ தொடர்பான இலங்கை அரசினதும் நீதித்துறையினதும் செயற்பாடுகளும் அவை தொடர்பாக அம்பலமான தகவல்களுமாகும்.

கொடூரமாக - குரூரமாக - தனது படைகளும் பொலீஸாரும் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்களை மறைத்துக் கொண்டு -

அச்செயலில் ஈடுபடும் தனது அதிகாரிகளைத் தண்டிக்காமல் - தண்டனைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றி - அவர்களுக்குப் பதவிஉயர்வுகள் வழங்கிப் பாராட்டும் போக்கைக் கைக்கொண்டபடி -

தமிழர் தாயகத்தில் தமிழரின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றனர் என்று இலங்கை அரசுத் தரப்பு சர்வதேச ரீதியாகப் பிரசாரம் செய்வது வேடிக்கையாகும். அத்தகைய பரப்புரைகளுக்கு சர்வதேச சமூகம் இலகுவாக எடுபடுவது அதிலும்விட விந்தையாகும்.

### தாயகம், தேசியம், தன்னாட்சி ஆகிய

# தமிழர் அபிலாசைகளை உலகம் அங்கீகரிக்க வவுனியாவில் இன்று கூடி குரல்கொடுப்போம்!

## தேசிய எழுச்சி நாள் ஏற்பாட்டுக்குழு அழைப்பு

புளியங்குளம்,ஒக்.27

தாயகம்,தேசியம், தன்னாட்சி ஆகிய ஈழத்தமிழர் அபிலாசைகளைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க இன்று வவுனியாவில் நடைபெறும் எழுச்சி நிகழ்வில் பொங்கி எழுந்து குரல்கொடுப்போம்.

- இவ்வாறு வவுனியா மாவட்டத் தமிழ்த்தேசிய எழுச்சி நிகழ்வு ஏற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்த அறிக்கையில் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைத் தீவில் சிங்கள- பௌத்த பேரினவாத மேலாண்மைக்குள் நீண்டகாலம் வாழ்ந்து, நொந்து போய் விடுதலைக்காய் போராடி வருகின்ற இனம் தமிழினம். எமது மூத்த தலைவர்கள் வன்முறைகளற்ற அகிம்சை வழியில் போராடியும் சிங்களத் தலைமைகளோடு ஒப்பந்தங்களைச் செய்தும் உரிமைகள் பெறமுடியாத நிலையில் ஏமாற்றம் அடைந்தனர்.

சிங்கள- பௌத்த பேரினவாதம் அகிம்சை வழிகளில் இருந்து தமிழ்த் தேசிய இனத்தைப் புறந்தள்ளி மிரட்டியது.

தமிழர்களை இந்த மண்ணில் இருந்தே விரட்டியடிப்பதற்காய் இன வன்முறைகளையும் இராணுவ அடக்கு முறைகளையும் கட்டவிழ்த்துவிட்டு தமிழர் தாயகத்தைச் சூறையாடியது.

அந்தக் காலகட்டத்தில்தான் எமது இனத்தை ஆயுதமுனையில் அழிக்க வந்த இராணுவத்தைத் திருப்பி அதே முறையில் தாக்கவேண்டிய ஒரு பெரும் தர்மத்தைத் தான் நெஞ்சிலே தாங்கியபடி கைகளில் ஆயுதம் தரித்த விடுதலைப் போராளியாய் தமிழ்த் தேசிய ஆன்மாவின் குறியீடாய் தமிழ் பேசும் மக்களின் தேசியத் தலைவராய் மேதகு வே.பிரபாகரன் உருவெடுத்தார்.

தமிழினம் அந்த ஒப்பற்ற தலைவரின் பின் திரண்டது. சிங்கள இராணுவத்தைத் திணறவைத்தது எமது பலம்.

தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைக்கான மொழியைச் சரியாகப் படிக்கத் தவறிய சர்வதேச சமூகம் எமது விடுதலை இயக்கத்தைத் தடைசெய்வதிலும் ஈடுபட்டது.

அப்போது நாங்கள் பொங்கு தமிழர்களாய் கிளர்ந்தெழுந்தோம். விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர். அவர்கள் எமது விடுதலையை வென்றெடுப்பதற்கான ஏகபிரதிநிதிகள் என்று முரசறைந்தோம்.

இந்த நிலையில்தான் 2005 ஜூலை 27இல் எமது தாயகம், தேசியம், தன்னாட்சி என்பவற்றுக்கான போராட்டத்தை அங்கீகரிக்குமாறு சர்வதேச சமூகத்தைக் கோரும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க வவுனியாப் பிரகடனம் செய்யப்பட்டது.

அதற்கு வலுச்சேர்க்கும் விதத்தில் தமிழர் தாயகம் எங்கும் மக்கள் எழுச்சி கொள்கின்றனர்.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா வாழ் மக்கள் நகரசபை மைதானத்தில் தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்காய் பொங்கி எழுந்து குரல் கொடுப்போம்.

(ஒ-355)

# வாழ்வாதாரத் திட்டங்களைத் தீட்டும் நிறுவனங்கள் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் மெத்தனம்

## யாழ். அரச அதிபர் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.27

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. ஆனால், அவை நடைமுறைப் படுத்தப்படுவது குறைவு.

- இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் கவலை தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வந்தன. அவற்றில் சில நிறுவனங்கள் மட்டுமே ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கான திட்டங்களை நடை முறைப்படுத்துகின்றன.

பல நிறுவனங்கள் வாழ்வாதாரத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டுகின்றன. ஆயினும், அவற்றை நடைமுறைப் படுத்துவதில் அந்த நிறுவனங்கள் அக்கறை காட்டுவதில்லை - என்றார்.

இதேவேளை -

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கென மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்களும் ஓரளவு திருப்திகரமாக நடைமுறைப்படுத்தப் படுகின்றன - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-202-204)

**நாளை**

ஐப்பசி 11
வெள்ளிக்கிழமை
28.10.2005
திதி: ஏகாதசி
பின்னிரவு : 03.32 வரை
நட்சத்திரம் : மகம்
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 06.03 - 07.33
ராகுகாலம்: 10.33 - 12.03
(யாவும் பழைய நேரப்படி)

### நாட்டில் உள்ள பாடசாலைகளில்

# 9 சதவீதமான மாணவர்கள் எழுத்தறிவின்றி உள்ளனராம்!

வலி.தெற்கு,ஒக்.27

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் மாணவர்களில் சுமார் 9 சதவீதமான மாணவர்கள் எழுத்தறிவு, வாசிப்பு அறிவு அற்றவர்களாகக் காணப்படுகின்றனர் என்று தெரியவந்துள்ளது.

நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் ஆயிரம் மாணவர்களில் குறைந்தது 150 மாணவர்கள் இவ்வாறு எழுத்தறிவு, வாசிப்பு அறிவு அற்றவர்களாக உள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையினை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாகக் கல்வியியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

நாட்டிலுள்ள பாடசாலை மாணவர்களில் 91 சதவீதமானவர்கள் எழுத்தறிவுடையவர்களாக உள்ளனர். ஆயினும், ஏனைய ஒன்பது சதவீதத்தினர் எழுத, வாசிக்கத் தெரியாதவர்களாகவே காணப்படுகின்றனர் என்று ஆய்வுத் தரவுகள் தெரிவிக்கின்றன.

(ஒ-152)

**உதயவாக்கு**

எப்போது உன்னையே நீ கேலிசெய்து கொண்டு சிந்திக்கத் தொடங்குகிறாயோ அன்றுதான் நீ வளர்ச்சியடைய ஆரம்பிக்கிறாய்.

- ஏ தெல் பனிமூர்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி மற்றும் கோப்பாயில் 120 வீடுகள் அமைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.27

தென்மராட்சி மற்றும் கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுகளில் மக்களின் பங்களிப்புடன் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினர் 120 வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளனர்.

இதுதொடர்பான கலந்துரையாடலொன்று அண்மையில் யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

தலா 5 லட்சம் ரூபா செலவில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் 60 வீடுகளும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 60 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான பயனாளிகள் தெரிவு இடம்பெற்றுவிட்டது. அந்தப் பிரதேச செயலர் பிரிவில் திட்ட முகாமையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஊடாகப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

கட் டடப் பொருள்கொள்வனவும் அத்திபாரம் நடுதலும், கட்டடம் பூர்த்தி, கூரை வேலை, கதவு, யன்னல் வேலைகள், நில வேலை என ஐந்து பிரிவுகளாக இந்தக் கொடுப் பனவுகள் வழங்கப்படவுள்ளன எனவும் -

வீடமைப்புக்குத் தேவையான சில கட்டடப் பொருள்களையும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-203-204)


## அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான கோதுமை மா கேள்வி கோரல்**

**ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் - 2005**

1. யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்குக் கீழ்க் குறிப்பிட்ட அளவிலான மெற்றிக் தொன் கோதுமை மா விநியோகிப்பதற்காகக் கேள்விகள்பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. மாவை பின்வரும் அடிப்படையில் விநியோகம் செய்யப்படல் வேண்டும்.

| விநியோகிக்க வேண்டிய தொகை | அளவு |
|---|---|
| 2005 ஒக்ரோபர் | 400 Mt |
| 2005 நவம்பர் | 400 Mt |
| 2005 டிசெம்பர் | 400 Mt |

கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2005-10-26ஆம் திகதி தொடக்கம் 2005-11-10 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் முற்பகல் 10 மணிதொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு பந்தி 01இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி -**Bid Bond**) மெற்றிக்தொன் ஒன்றிக்கு (01Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விவரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)
3. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவத்தினை **தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரச அதிபர், யாழ்ப்பாணம்)** என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ / தபால் மூலமோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2005.11.11ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றையதினம் பிற்பகல் 3.30 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம்பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.
4. நீள தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கோதுமை மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்படவேண்டும்.
5. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயற்படுத்தல் முறிக்காக - **PERFORMANCE BOND**) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் (விவரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)
6. கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து 30 நாள்கள் வலுவுடையதாக இருக்கும்.

**க.கணேஸ்,**
**தலைவர், அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச்சபை/ மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
25/10/2005 (சி/45949) (24-18-45-15)


## வினாடிவினாப் போட்டி

சாவகச்சேரி,ஒக்.27

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 10, 11, 12, 13 ஆகிய வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான வணிகம், சைவ சமயம் ஆகிய பாடங்களில் வினாடி - வினாப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களும் கோலம்போடல், மாலைகட்டல் போட்டிகளிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கும் நிகழ்வு நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனை உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்கள் வழங்குவார். (ஒ-31)

## சிறுவர் கழகம் அங்குரார்ப்பணம்

கொழும்புத்துறை,ஒக்.27

யாழ். புதிய சோனகத் தெரு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் அண்மையில் சிறுவர் கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.மாலினியின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஜே/ 88 கிராம அலுவலர் பிரிவில் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் கௌரவிக்கப்பட்டதாகச் சங்கத் தலைவர் க.தம்பிராசா தெரிவித்தார். (ஒ-30)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசலை அதிபர் கா.தருமரத்தினம் அவர்களின் ஏக புத்திரி

செல்வி **பைரவி**

தரம் 05 புலமைப்பரிசில் - 2005 பரீட்சையில் 187 புள்ளிகள் பெற்று சித்தி பெற்றமைக்காக வாழ்த்துவதோடு, மேலும் பல பரீட்சைகளில் சித்தியடைந்து பல்லாண்டுகாலம் வாழ்க வென வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
யா/வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம், புத்தூர்

(42026)(18-45-15)

## பிற்போடப்பட்டுள்ளது

இன்று (27.10.2005) வியாழக்கிழமை நடைபெறவிருந்த 'சாரதா இல்லம்' புதுமனைப் புகுவிழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்

**க.நித்தியானந்தம்**
**(ஆனந்தன்)**

பன்னாலை,
திருப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி. (42025)(21)



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 725 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 25-10-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 4836270-4851475 |

லக்கினம் இடபம்

வெற்றி இலக்கங்கள்

**03 14 35 44**

ஜக்பொட் பரிசு ரூபா. 17,51,050/- வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை ரூபா. 24,83,700/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,28,098 | 10/- | 32,80,980/- |
| 2.இலக்கங்கள் | 30,179 | 20/- | 6,03,580/- |
| 1.இல லக்கினம் | 29,798 | 30/- | 8,93,940/- |
| 2.இல லக்கினம் | 2,729 | 100/- | 2,72,900/- |
| 3.இலக்கங்கள் | 808 | 500/- | 4,04,000/- |
| 3.இல லக்கினம் | 66 | 5,000/- | 3,30,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 17,51,050/- | - |
| | | மொத்தம் | 61,85,400/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 4,21,575/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 72,37,650/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 72,37,650/- தொடர் இல. 5785802 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 ஒக்டோபர் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 4844018-9-56 |
| நுவரெலியா | 4841246-1-44 |
| ஹம்பாந்தோட்டை | 4844595-4-55 |
| புத்தளம் | 4844134-5-24 |
| களுத்துறை | 4850525-[illegible] |



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

### இராமநாதன் நுண்கலைக்கழகம்

**நுண்கலைமாணி (இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்)**

**கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி - 2005/2006**

**1.நுண்கலைமாணி (இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்)** பட்டப் படிப்பிற்கான கற்கைநெறிகளுக்கு அனுமதி பெறவிரும்பும் கீழ்வரும் தகுதியுடையவர்களிடமிருந்து 18.11.2005 திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**2.கற்கை நெறிக்காலம் - நான்கு வருடங்கள்**

**3. அனுமதிக்கான ஆகக் குறைந்த தகுதியும் தகைமைகளும்**

***(a) நுண்கலைமாணி - இசை (வாய்ப்பாட்டு)***

2005ஆம் ஆண்டு ஜூன் மாத க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு ஆகக் குறைந்த தகைமையாக கர்நாடக சங்கீதத்தில் திறமைச் சித்தி (C) ஏனைய ஏதாவது இரு பாடங்களில் சாதாரண சித்திகளையும் (S) பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

***(b) நுண்கலைமாணி - இசை (வயலின்)***

மேலே (a) இல் குறிப்பிட்ட தகுதியும் தகைமைகளும் பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

***(c) நுண்கலைமாணி - இசை (வீணை)***

மேலே (a) இல் குறிப்பிட்ட தகுதியும் தகைமைகளும் பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

***(d) நுண்கலைமாணி - இசை (மிருதங்கம்)***

மேலே (a) இல் குறிப்பிட்ட தகுதியும் தகைமைகளும் பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

***(e) நுண்கலைமாணி - இசை (பண்ணிசை)***

2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு ஆகக்குறைந்த தகைமையாக சித்திபெற்ற பாடங்களில் கர்நாடக சங்கீதத்தில் திறமைச் சித்தியும் (C) பின்வரும் பாடங்களில்-

தமிழ்/இந்துநாகரிகம்/இந்துசமயம்/வரலாறு ஏதாவதுதொன்றில் சாதாரண சித்தியும் (s) வேறு ஏதாவதொரு பாடத்தில் சாதாரண சித்தியும். (s) பெற்றுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

***(f) நுண்கலைமாணி - நடனம் (பரதநாட்டியம்)***

2005 ஆம் ஆண்டு ஜூன் மாத க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு ஆகக் குறைந்த தகைமையாக பரதநாட்டியத்தில் திறமைச்சித்தியும் (C) ஏனைய ஏதாவது இரு பாடங்களில் சாதாரண சித்தியையும் (S) பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

***(g) நுண்கலைமாணி - சித்திரமும் வடிவமைப்பும்***

(I) 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின்கீழ்பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு ஆகக் குறைந்த தகைமையாக சித்திரக்கலையில் திறமைச் சித்தியும்(c) ஏனைய ஏதாவது இரு பாடங்களில் சாதாரண சித்தியையும் (s) பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவார்.

**அல்லது**

(II) 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட் சையில் ஆகக் குறைந்த தகைமையாக சித்திரத்தில் திறமைச் சித்தி(c) பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவார்.

4. மேற்படி கற்கை நெறிகளில் வாய்ப்பாட்டு/வயலின்/வீணை/மிருதங்கம்/பண்ணிசை/பரதநாட்டியம் ஆகிய கற்கை நெறிகளுக்கான தெரிவு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியன உள்ளடங்கிய தகுதிகாண் பரீட்சை மூலம் நடைபெறும்.

5. சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிக்கு பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சை, செயல்முறைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவை உள்ளடங்கிய தகுதிகாண் பரீட்சை மூலம் தெரிவு நடைபெறும்.

6. 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பெற்ற **Z** புள்ளி மற்றும் சங்கீதம்/நடனம்/சித்திரக்கலை ஆகியவற்றில் பெற்ற தரம் (**Grade**) க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்திரத்தில் பெற்ற தரம் (**Grade**) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழக மூதவை ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டியவர்கள் பற்றி எடுக்கும் தீர்மானத்திற்கு அமையவே விண்ணப்பதாரிகள் இத்தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

7. விண்ணப்பதாரி ஒருவர் ஒன்றிற்கு மேற்பட்ட கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பினால் தெரிவுசெய்யும் ஒவ்வொரு கற்கைநெறிக்கும் தனித்தனியான விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவேண்டும்.

8. விண்ணப்பதாரிகள் அனைவரும் பாடசாலை அதிபரால் அல்லது சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சை பத்திரத்தின் (Z பெறுபேறு, பொதுச்சாதாரண வினாத்தாளின் புள்ளிகள், பல்கலைக்கழக அனுமதி பெறும் தகுதி ஆகியன உள்ளடக்கிய)பிரதியொன்றை விண்ணப்பத்துடன் தவறாது இணைத்தல் வேண்டும்.

9. சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிக்கு 3.(g) II இன் கீழ் விண்ணப்பிப்பவர்கள் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த சாதாரண தர சான்றிதழையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

10. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்குறிப்பிடப்பட்ட கற்கைநெறிகளில் ஏதாவதொன்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டு, பதிவினை மேற்கொண்ட மாணவரொருவர் இனிவரும் ஆண்டுகளிலான க.பொ.த. உயர்தரப் பெறுபேற்றின் அடிப்படையில் (அதாவது 2005 ஆம் ஆண்டின் பின்னர்) பல்கலைக்கழக அனுமதிகளுக்காக எக்காரணம் கொண்டும் விண்ணப்பிக்க முடியாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

மேற்குறித்த கல்வித் தகைமைகளுக்கு அமையாத, பூரணப்படுத்தப்படாத மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதிகள் இணைக்கப்படாத, தெளிவில்லாத, விண்ணப்ப முடிவு திகதிக்குள் கிடைக்கப் பெறாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**26.10.2005** (சி-45939) (18-16-45-24) **பதிவாளர்.**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தலைவர் பிரபாகரனை அழைத்துப் பேசுவதற்கு பகற்கனவு காண்கிறார் மஹிந்த ராஜபக்ஷ!

## ஈழவேந்தன் எம்.பி.காட்டம்

குடியரசுத் தலைவராக வெற்றிபெற்ற நிலையில் இலங்கையில் எழுந்துள்ள இனச் சிக்கலைத் தீர்க்க பிரபாகரனை தான் அழைத்துப்பேச இருப்பதாக மஹிந்த ராஜபக்ஷ கூறியதாக ஊடகங்கள் ஊடாக அறிகிறோம். இது அவரது பகற் கனவாகவே இருக்கும். இவ்வாறு காட்டமாகத் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் இனச்சிக்கல் 50 ஆண்டுகளுக்கும் மேலாக புரையோடிய புண்ணாக விளங்குகிறது. புரையோடிய புண்ணாக விளங்குவதற்கு அடிப்படைக் காரணம் ஒற்றையாட்சி அமைப்பே. பல்லினம், பல்மொழி, பல்சமயம் உள்ள ஒரு நாட்டில் தொடர்ந்து ஒற்றையாட்சி கடைப்பிடிக்கப்படின் காலப் போக்கில் சிறுபான்மை இனங்கள் சீரழிவுக்குள்ளாகி ஒழிந்துபோவது தவிர்க்க முடியாததாகும்.

நாடாளுமன்ற நாளாந்த நடவடிக்கைகளும், நாளும் பொழுதும் நடைபெறும் நாட்டின் நிகழ்ச்சிகளும் எம்மை உறுத்தியபடி உள்ளன. அதிகாரப் பரவலுக்கு மருந்தளவும் இடந்தராத ஒற்றையாட்சி அமைப்பே எம் இனத்தின் அழிவிற்கு காரணமாக அமைவதை நாம் அறிவோம்.

ஆனால், நீண்ட காலமாக அரசியலிலும், இன்று தலைமை அமைச்சராகவும் விளங்கும் மஹிந்த ராஜபக்ஷ இந்த அரிச்சுவடி அரசியலைக்கூட அறியாதிருப்பது எமக்கு வியப்பைத் தருகிறது. தமிழ் பேசும் இனத்தின் பேரழிவிற்கும், நாட்டின் அரசியலில் ஒரு நிலையற்ற தன்மை நிலவுவதற்கும், நாட்டின் பொருளாதாரம் படுகுழியில் இன்று விழுவதற்கும் அடிப்படைக் காரணம் ஒற்றையாட்சி அமைப்பே என்பதற்கு நாம் பெரும் ஆய்வு செய்யத் தேவையில்லை.

ஆனால், ஒற்றையாட்சி அடிப்படையில் தான் இனச் சிக்கலுக்குத் தீர்வுகாண்பேன் என்று அவர் கொக்கரிப்பது எமக்குப் புரிய முடியாத புதிராக இருக்கிறது. அவர் இன்று எடுத்துள்ள முடிவு இலங்கையில் எழுந்துள்ள இனச் சிக்கலுக்குத் தீர்வாக அமையப்போவதில்லை. மாறாக தமிழினத்தைப் பூண்டோடு தீர்த்துக்கட்டும் முயற்சியாகும். தீர்வு வேறு; தீர்த்துக்கட்டுவது என்பது வேறு.

அனைத்துச் சிக்கலுக்கும் ஒற்றையாட்சியில் தான் தீர்வுகாண்போம் என்று கூறும் இவர் மேலும் ஒருபடி சென்று தமிழர் ஒரு தேசிய இனம் என்பதைத் தாம் ஏற்கவில்லை என்றும், தமிழர் தாயகக் கோட்பாட்டை மறுப்பதாகவும், தமிழரின் தன்னுரிமை (சுயநிர்ணய) கோட்பாட்டை தாம் முற்றாக எதிர்ப்பதாகவும் கூறுகிறார்.

சிங்கள வல்லாண்மையின் பேரிலும் வெறியாட்டம் ஆடுகின்ற மஹிந்த ராஜபக்ஷ தான் குடியரசுத் தலைவராக வெற்றி பெற்ற நிலையில் பிரபாகரனுடன் பேசப்போவதாக கூறும் கூற்று ஒரு பொறுப்பு வாய்ந்த தலைவனின் பேச்சாக இருக்கமுடியாது. மாறாக சிங்கள - பௌத்த வல்லாண்மையின் முழு வடிவமாகவே அவர் விளங்குகிறார். இப்படிப்பட்ட ஒருவருடன் எங்கள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பேச வருவார் என்று மஹிந்த ராஜபக்ஷ காண்கின்ற கனவு வெறும் பகற்கனவே ஆகும்.

### தந்தை செல்வா தந்த உயில்!

ஈழத் தமிழினம் பல தமிழ்த் தலைவர்களைத் தோற்றுவித்துள்ளது. ஆனால், அவர்கள் பல தடவைகள் தடம் புரண்ட தலைவர்களாக மாறியதன் விளைவுதான் இன்று இத் தமிழினம் கதிகலங்கிய நிலையில்எம் மண்ணிலேயே வேரோடு சாய்க்கப்பட்ட நிலைக்கு ஆளாகி உள்ளது. தந்தை செல்வா போன்ற சில தலைவர்கள் தொலை நோக்குடன் சிந்தித்து செயலாற்றியது உண்மை. ஆனால், அவர்களுடைய அறவழிப்போராட்டம் வெறிபிடித்த சிங்களத் தலைமைப் பீடத்திடம் எடுபடவில்லை. எனவே, தான் 1976 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி தந்தை செல்வா நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய இறுதி உரையில் - தமிழ் மக்களுக்கு அளித்த இறுதி உயிலில் ' சிங்கள மக்களின் ஆட்சியில் இருந்து நாம் விடுபடாத நிலையில் தமிழினம் பூண்டோடு அழிந்துவிடும். எனவே, தமிழீழம் தான் எமது இறுதித் தீர்வு' என்று கூறிய கூற்று இங்கு நாம் நினைவு கொள்ளத்தக்கது.

### மஹிந்தவை புறக்கணிக்கும் நாம் ரணில் மீது காதல் கொள்ளவில்லை

மஹிந்த ராஜபக்ஷவின் ஞானத்தை - இல்லை அரசியல் அஞ்ஞானத்தை இவ்விதம் புட்டுக்காட்டி விளக்கியுள்ள நாம் ஐ.தே. கட்சியைச் சார்ந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது எமக்கு ஏதோ தீராத காதல் என்று எவரும் எண்ணி ஏமாற வேண்டாம். ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் அறிக்கையில் இனச்சிக்கலைத் தீர்க்க இணைப்பாட்சி என்ற சொல் கையாளப்பட்டிருப்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால், அதே அறிக்கையில் இணைப்பாட்சியின் 'சாயல் கொண்டுள்ள இந்திய அரசியல் அமைப்பை பின்பற்றலாம் என்று கூறும் சொற்றொடர்கள் எமக்கு எவ்வளவு ஆபத்தை உண்டாக்கும் என்பதை எம்மில் எத்தனை பேர் உணர்வோமோ நாமறியோம்.

பிரிவு 356 ஐ வைத்துக்கொண்டு மாநில அரசுகளைக் கலைக்கின்ற அதிகாரம் இந்திய மைய அரசுக்கு உண்டு. இதனை ஸ்ரீலங்கா அரசும் கடைப்பிடிக்கின்ற எத்தகைய சீரழிவு ஈழத் தமிழருக்கு உருவாகும் என்பதை எம்மில் எத்தனை பேர் எண்ணிப்பார்க்கிறார்கள்.

இரு தலைவர்களுடைய தேர்தல் அறிக்கைகளிலும் படைப்பலப் பெருக்கம் பேசப்படுகிறது. படைப் பயிற்சி பற்றியும் பேசப்படுகிறது. அத்தோடு அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் போதுபாதுகாப்பு நிதியாக கோடிக்கணக்கை அரசாங்கம் ஒதுக்கிய போது ஐ.தே.கட்சி அதற்கு ஆமோதித்து வாக்களித்தது.

அவசர காலச்சட்டம் நீடிப்பதைப் பற்றி நாடாளுமன்றத்தில் மசோதா கொண்டு வந்த போது கூட அரசுக்கு ஆதரவாகத்தான் ஐ.தே.கட்சி வாக்களித்தது. இவை அண்மைக் கால நிகழ்ச்சிகள். தமிழர்களை அழிப்பது என்று வரும் போது இரு கட்சிகளும் ஒன்றுபடுவர்.

### தமிழ்த் தேசியம் பேசும் நாம் தேசிய நீரோட்டத்தில் எப்படிக் கலப்பது?

வருகிற குடியரசுத் தேர்தலில் நாம் உணர்ந்தோ உணராமலோ எந்தக் குடியரசுத் தலைவருக்காவது வாக்களிப்போமாயின் நாம் தேசிய நீரோட்டத்தில் இரண்டறக் கலந்து கொள்கிறோம் என்றுதான் பொருள் கொள்ளப்படும்.

தமிழ்த் தேசியத்தை பேசுகிற நாம் 'தமிழீழம் தான் எங்கள் முடிந்த முடிவென்று கூறுகின்றநாம்' 'தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று எம் விடுதலைப் புலிகளுடன் நாம் எழுப்புகின்ற குரல் பொருள் பொதிந்த குரலாக விளங்க வேண்டின் நடைபெறும் குடியரசுத் தலைவர் தேர்தலை நாம் புறக்கணித்தே ஆகவேண்டும். வழக்காற்றில் உள்ள குரியும் பிறமொழியில் கூறின் நாம் இத்தேர்தலைப் பகிஷ்கரித்தே ஆகவேண்டும். " மக்களெல்லாம் பிரபாகரன் பக்கம் என்று" நாம் வாயளவில் கூறுவதானால் எதுவித பயனுமில்லை. அதற்கு செயல் வடிவம் கொடுக்கிறமுறையில் வருகிறதேர்தலையொட்டி நாம் அளிக்கின்ற தீர்ப்புத்தான் உலகின் கவனத்தை எம்பால் ஈர்க்கும் செயலாகும். (த)

## சாயி சிந்தனை

### உண்மையான அன்பு



இன்று காணப்படும் பௌதிகமான அன்பு உலகியலான அன்பு எல்லாம் தங்களது சுயநலத் தேவைகளை எல்லா இடத்திலும் பூர்த்திசெய்து கொள்வதற்காகவே உருவானவை. அவையெல்லாம் உண்மையான அன்பல்ல. உண்மையான அன்பு புனிதமானது. தெய்வீகமானது. சுயநலமற்றது. அது இதயத்திலிருந்து ஊற்றெடுத்துப் பெருகக்கூடியது.

அத்தகைய தெய்வீக அன்பை வளர்த்துக்கொண்டே, அதில் உறுதியாக இருக்கவேண்டும். மேலும் அந்த அன்பு மனதில் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். அத்தகைய அன்பை வளர்த்துக்கொண்டால் உங்களிடம் இல்லாதது எதுவுமே இல்லை. அத்தகைய மேன்மையான அன்பை உருவாக்கிக்கொள்ளும் போதுதான் நான் உங்களை அன்பின் வடிவங்கள் என அழைப்பது பொருத்தமானதாக இருக்கும். இறைவன் எங்கும் நிறைந்து இருக்கிறான். யார் கடவுள்? உண்மையிலேயே நீங்கள்தான் கடவுள். நீங்கள் அந்த நிலையை அடைய முயற்சிக்க வேண்டும். இறைவன் எங்குமிருந்தாலும் நீங்கள் எப்போதும் உங்களினுள் உறையும் இறைவனை மறக்கக்கூடாது.

*(ஆதாரம்: சனாதன சாரதி - 2004)*

# 'பிளான் ஸ்ரீலங்கா' நிறுவனத்தின் சிறுவர்களுக்கான இணையத்தளம்




'பிளான் ஸ்ரீ லங்கா' சிறுவர்களுக்கான அதன் 25 வருட சேவையை பூர்த்தி செய்திருக்கும் இத்தருணத்தில் இந்நாட்டில் அதன் செயற்பாடுகளை விவரித்துக் கூறும் இணையத்தளம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. www.plan-lanka.lk என்பதே இந்த புதிய இணையத்தளமாகும். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சமூகங்களை மீளக்கட்டியெழுப்பும் பொருட்டு, பிளான் ஸ்ரீலங்கா தற்பொழுது மேற்கொண்டு வரும் வேலைத்திட்டங்களுக்கு இந்த இணையத்தளத்தில் விசேட முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

பிளான் ஸ்ரீலங்கா இணையத்தளம் வழமையான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதிலிருந்து விலகி, சிறுவர்கள் குறித்து முக்கிய கவனம் செலுத்தியுள்ளது. சிறுவர்களுக்கு உகந்த கண்கவர் பக்கங்கள், ரசனை மிக்க காட்டூன்கள், புகைப்படங்கள் ஆகியன இந்த இணையத்தளத்தில் இடம்பெறுகின்றன. பிளான் ஸ்ரீலங்கா சேவையாற்றும் கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள், அவர்களால் வரையப்பட்ட ஓவியங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சிறுவர்களுக்கான பக்கங்கள் இந்த இணையத்தளத்தில் இடம்பெறுவது விசேட அம்சமாகும்.

இலங்கையில் உள்ள சிறுவர்களுக்கு அனுசரணை வழங்கும் முகமாக அனுசரணையாளர்கள் தமது இலங்கை விஜயங்கள் தொடர்பாக எழுதியுள்ள கதைகள் பிளான் ஸ்ரீலங்காவின் அண்மைய செய்தி அறிக்கைகள், ஆய்வு அறிக்கைகள், கல்விசார் விடயங்கள் மற்றும் சமூக எழுச்சி இயக்கத் தகவல்கள் ஆகியனவும் இந்த இணையத் தளத்தில் இடம்பெற்றுள்ளன.

பிளான் ஸ்ரீலங்கா அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் மிங்மிங் இவோரா இதுபற்றிக் கருத்து தெரிவிக்கையில் -

ஆழிப்பேரலை சம்பந்தப்பட்ட திட்டங்கள் பற்றி பெருமளவு விழிப்புணர்வை உருவாக்குவதற்கும் உள்ளூர் நிலைமைக்கும் ஏற்ற தகவல்களை வழங்குவதற்குமான உடனடி தேவை ஏற்பட்டுள்ளமை, நாம் எமது சொந்த இணையத்தளத்தை உருவாக்கத் தீர்மானித்தமைக்கான காரணமாகும். எமது நன்கொடையாளர்களுடனும், சிறுவர் மற்றும் சமூக மற்றும் அபிவிருத்தித் துறையில் சம்பந்தப்பட்ட ஏனைய அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இலங்கையில் வசதி குறைந்த சிறுவர்களுக்கு உதவுவதில் அக்கறையுள்ள அனைவருடனும் எமது பணி தொடர்பான மேலும் தகவல்களை பரிமாறிக் கொள்ளவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம் -

குறிப்பாக ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் நன்கொடையாளர்கள் வழங்கிய பணம், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு செலவிடப்படுகின்றது. இதன்மூலம் எந்தளவு நன்மைகள் அவர்களுக்குக் கிடைக்கின்றன என்பது போன்ற தகவல்களை நன்கொடையாளர்களுக்கு வழங்குவது முக்கியமானதாகவுள்ளது. எமது வேலைத்திட்டத்தில் சிறுவர்களே மிக முக்கிய இடத்தை வகிக்கின்றனர். எனவே, இந்த இணையத்தளம் சிறுவர்களுக்கு விசேடத்துவமிக்கதாக விளங்க வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம் -

இலங்கையின் பிளான் ஸ்ரீலங்கா மேற்கொள்ளும் வேலைத்திட்டங்கள் பற்றிய பெருமளவு தகவல்களும் இந்த இணையத் தளத்தில் அடங்கியுள்ளன. இலங்கை சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரத்தியேக பிரச்சினைகள், அவர்களின் நிலைமையை விருத்தி செய்வதற்கும் சிறுவர்களின் உரிமைகளை ஊக்குவிப்பதற்கும் உதவும் வகையில் பிளான் ஸ்ரீலங்கா செயற்படுத்தும் வேலைத் திட்டங்கள் ஆகியன பற்றிய விவரங்களை கொண்டபிரிவுகளும் இந்த இணையத்தளத்தில் உள்ளன -

சிறுவர்களை மையமாகக் கொண்ட ஒரு சமூக அபிவிருத்தி ஸ்தாபனம் என்ற வகையில் நாம் எப்பொழுதும் திட்டமிடல், அமுலாக்கல் ஆகிய விடயங்களில் சிறுவர்களை ஈடுபடுத்தி அவர்களுக்குத் தமது சொந்தக் கருத்துகளைத் தெரிவிப்பதற்கான வாய்ப்புகளை வழங்கி அவர்களது எதிர்கால அபிலாஷைகளை அடைவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றோம் - என்று தெரிவித்தார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் பிளான் ஸ்ரீலங்கா, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வது குறித்து கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. பிளான் ஸ்ரீலங்கா 1996ஆம் ஆண்டு தொடக்கம் இம்மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டமொன்றை செயற்படுத்தி வருகின்றது. பிளான் ஸ்ரீலங்கா ஸ்தாபனம் அதன் ஆழிப்பேரலை நிவாரணத் திட்டங்களுக்கு ஏற்கனவே 170 கோடி ரூபா ஒதுக்கியுள்ளது. நிவாரணப் பணிகள் முன்னேற்றமடைந்ததும் இந்த நிதி ஒதுக்கீட்டை மேலும் அதிகரிப்பதற்குப் பிளான் ஸ்ரீலங்கா உத்தேசித்துள்ளது.

இந்த இணையத் தளத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் தப்பியவர்களுக்கு உதவு வது பற்றிய விவரங்கள் அடங்கிய பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று ஆழிப்பேரலையால் வீடுகளை இழந்த 365 குடும்பங்களுக்கு இருப்பிடங்களை வழங்கு முகமாக மூன்று கிராமங்களை நிர்மாணிப்பது தொடர்பான வேலைகள் இதுவரை ஆரம்பமாகியுள்ளன. யாயவத்தை (200 வீடுகள்) எகொடபெத்த (38 வீடுகள்), பட்ட - ஹட்ட (127 வீடுகள்) ஆகியனவே இந்த மூன்று கிராமங்களுமாகும்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்கருதி பல்வேறு திட்டங்களையும், பிளான் ஸ்ரீலங்கா அமுல் செய்துள்ளது. ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் உளவியல் ரீதியில் ஏற்பட்ட தாக்கத்திலிருந்து விடுபடுவதில் சிறுவர்களுக்கு உதவும் முகமாக நூல்களை வெளியிட இருப்பதுடன் வீடியோ படங்களையும் பிளான் ஸ்ரீலங்கா தயாரித்துள்ளது.

கிளிஞ்ச் பிறைவேட் நிறுவனம் யுரேக்கா டெக்னோலஜி பார்ட்னஸ், யுரேக்கா டெக்னோலஜி பார்ட்னர்ஸ் நிறுவனங்களுடன் இணைந்து பிளான் ஸ்ரீலங்கா ஸ்தாபனத்திற்கான இந்தப் புதிய இணையத் தளத்தை உருவாக்கியுள்ளது.

பிளான் இன்டர்ஷனல் அமைப்பு சிறுவர்களை மையமாகக்கொண்டு இயங்கும் உலகின் மிகப் பெரிய சமூக அபிவிருத்தி ஸ்தாபனங்களில் ஒன்றாகும். இது தற்பொழுது உலகின் 60 நாடுகளில் இயங்கி வருகின்றது. அம்பாந்தோட்டை, மொனராகலை, கண்டி, பதுளை, மாத்தளை, அநுராதபுரம்,குருணாகல், நுவரெலியா ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள 22 பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழும் 24 ஆயிரத்திற்கும் அதிகமான சிறுவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களிற்கும், சமூகத்திற்கும பிளான் ஸ்ரீலங்கா தற்பொழுது சேவையாற்றி வருகின்றது. பிளான் ஸ்ரீலங்கா, மத, அரசியல், அரசாங்க சார்பற்ற ஒரு ஸ்தாபனமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருமணக் கார் (குளிரூட்டியதும்)
## வாடகைக்கு



+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (41278)

தொடர்பு: நடனம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (21.15.34)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2005 இல் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யா/தந்தைசெல்வா தொடக்கநிலைப் பள்ளி மாணவச் செல்வங்களான

| | |
|---|---|
| தேவதயாளன் ராகுலன் | - 149 புள்ளி |
| சிவராசா கிரிசுதன் | - 144 புள்ளி |
| விஜயநிர்மலன் சுவேதா | - 128 புள்ளி |

இவர்களோடு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

| | | | |
|---|---|---|---|
| பூ.நிரோஜன் | - 123 | தே.கீர்த்தனா | - 123 |
| க.கிரிகரன் | - 122 | ப.ருசாந்தன் | - 114 |
| க.பிரணவன் | - 113 | இ.கரிராம் | - 110 |
| மு.கோமசுதா | - 110 | செ.லனுசன் | - 101 |
| த.விதுசன் | - 101 | க.ஜேம்சன் | - 101 |

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களுக்கு கற்பித்து ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

(41980) பாடசாலைச் சமூகம், (21.15.34)
தெல்லிப்பழை. யா/தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி


## B.Sc. (வெளிவாரி) காமராஜர் பல்கலைக்கழகம்

- மேற்குறிப்பிட்ட பாடநெறிக்கு A/L இல் குறைந்த சித்தி எய்தியவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- இக்கற்கை நெறிக்குரிய பதிவுகளும் பரீட்சை விண்ணப்பங்களும் எமது நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படும்
- இவற்றுக்குரிய விரிவுரைகள் ஆரம்பம்: 29.10.2005 (9 மணி)

குறிப்பு இக்கற்கை நெறிக்குரிய பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

யாழ்.இணைப்பாளர், S.அருள்நங்கை.
புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(41963)(21.15.34)


ஓம் விராட்விஸ்வப் பிரமனே நமஹ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஐப்பசி மாதம் 10ஆம் நாள் (27.10.2005)வியாழக்கிழமை காலை 6.33 மணிதொடக்கம் 7.57 மணிவரையுள்ள தசமி திதியும் மக நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய துலா லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறைசெல்வன்
**கண்ணதாசன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறைசெல்வி
**கௌசலா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு **நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில் மண்டபத்தில்** திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

**திரு.திருமதி இ.கோபாலகிருஷ்ணன்**
"கோபாலகம்"
மாலி சந்தி, அல்வாய் தெற்கு, அல்வாய்.

**திருமதி சி.கணேஸ்**
பிரதான வீதி,
சங்கானை மேற்கு, சங்கானை.

(சி/45929) (24-21-15-34)
(இரு வீட்டார் அழைப்பு)


## UNIVERSITY OF MADRAS
INSTITUTE OF DISTANCE EDUCATION
சென்னை பல்கலைக்கழகம்

தேசிய தரமதிப்பீட்டு குழுவால் ஐந்து நட்சத்திர தகுதியும், பல்கலைக்கழக நல்கை ஆணையத்தால் உயர்திறன் மையம் என்ற தகுதியும் பெற்றது'

2005 - 2006 கல்வி ஆண்டிற்கான அனுமதி சேர்க்கை அறிவிப்பு

**Post Graduate Degree**
சென்னை பல்கலைக்கழகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் (இலங்கை) 3 ஆண்டு இளமானி பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவர்கள் தொலைதூரக் கல்வி நிலையம் மூலம் முதுமானி பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**POSTGRADUATE**
**2 Year Degree Programme**

| | |
|---|---|
| M.Com | Master of Commerce |
| M.Sc. | Psychology |
| M.Sc. | Mathematic |
| M.A. | Economics |
| M.A. | Tamil |
| M.A. | English |
| M.A. | Christian Studies |
| M.A. | Human Rights & Studies Edu |

தகவல் மற்றும் நேரடி அனுமதி சேர்க்கை மையம்
**ASIAN COMPUTER SYSTEMS**
2G, Stanley Road, Jaffna. Tel : 021 222 5677


# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 29 - 09 - 1934



விண்ணில் 07 - 11 - 2004

அகில இலங்கை வானொலிப்புகழ்
அமரர் கலாபூசணம், இசை நடிகமணி

## V.N. செல்வராஜா

திதி: 27.10.2005

அன்பின் சிகரமாய் பண்பின் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய் பார்போற்றும்
பாடகனாய் நாடறிந்த நடிகனாய் வாழ்ந்த
எம் அன்புத் தெய்வமே! ஆண்டொன்று சென்றாலும்
யுகம் ஒன்று மாறினாலும் என்றென்றும் மறக்க
மாட்டோம் உங்கள் நினைவுகளை
உங்கள் ஆத்மா சீரணி நாமகளின் பாதடியில் சாந்தியடைய
வேண்டி நிற்கின்றோம்

(41957)(21.15.34)

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் நினைவுகளுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்

'துளசி வாசம்',
சீரணி நாகம்மாள் வீதி,
சண்டிலிப்பாய்.


# MBBS / MD
## BECOME A DOCTOR

Medical Degree (Doctor of Medicine MD) offered by



**CRIMEA MEDICAL INSTITUTE**
(CRIMEA STATE MEDICAL UNIVERSITY)
East **EUROPE** (Ukraine)

**Recognized by the SRI LANKAN MEDICAL COUNCIL**

**M.B.B.S Degree Program (6 years)**
Eligibility : G.C.E A/L passes in Biology Physics and Chemistry

**Premedical Program + MBBS (7 years)**
Eligibility : G.C.E O/L passes in All subjects including English, Maths and Science

UKRAINE ஆனது கிழக்கு ஐரோப்பிய நாடென்பதால், UKRAINE STUDENT VISA உடையமாணவர்கள் ஐரோப்பாவில் உள்ள அயல்நாடுகளாகிய Poland Romania, Austria, Italy, France, Spain, Germany, U.K, ஆகியநாடுகளுக்கு மருத்துவ கல்வி மற்றும் பயிற்சி நிமித்தம் சென்றுவருவதற்கான அரியவாய்ப்புண்டு.

## யாழ்ப்பாணத்தில்.......

30ஆம் திகதி (ஞாயிற்று கிழமை) எமது காரியாலய பிரதிநிதிகளை சந்தித்து சகல விபரங்களைப்பெற்றுக்கொள்வதுடன் விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்கலாம்

இடம் : COSY Restaurant, 15 Sirampiadi Lane, (Stanley Road) Jaffna.
நேரம் : 30ம் திகதி ஞாயிற்றுகிழமை-மாலை 3.30 pm - 6.30 pm

**Authorized Agents for Asian Region:**
M/s. MAJU INDRA SDN BHD, Kuala Lumpur Malaysia.

**Admissions Co-ordinated in Sri Lanka by**
Scholars Information Center,
2nd Floor, 'Colombo Plaza', 50, Galle Road, Wellawatta, Colombo - 06.
e-mail : peter@scholars-info.com Tel: 0777-767818

ஐரோப்பிய நாடொன்றிற்கு சட்டபூர்வமாக செல்வதற்கு அரியவாய்ப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை மீள் நடுகைத் திட்டம் வன்னிப் பகுதியில் ஆரம்பம்

பரந்தன், ஒக்.27

வன்னிப் பெருநிலப்பரப்பில் பனை மீள் நடுகைத் திட்டத்தினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்தத் திட்டத்துக்கு அமைவாக வட்டக்கச்சி, மாயவனூர் கிராமத்திலுள்ள மாவீரர் முன்பள்ளியிலும் வட்டக்கச்சி அ.த.க. பாடசாலையிலும் கடந்த 21 ஆம் திகதி 4 ஆயிரத்து 500 பனம் விதைகள் நடப்பட்டன.

கடந்த காலங்களில் போர் இடம்பெற்ற பகுதிகளிலும், இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த பகுதிகளிலும் பெருமளவான பனை மரங்கள், வடலிகள் அழிவடைந்திருந்தன.

அவ்வாறு அழிவடைந்த பனைவளத்தை மீண்டும் வளர்த்தெடுப்பதை நோக்கமாகக் கொண்டே இந்த மீள் நடுகைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதியும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் முகமாகவும் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்துக்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. (த-352)

## தேர்தல் தொடர்பான பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.27

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள தலைமை வகிக்கும் சிரேஷ்ட அலுவலர்கள், தலைமை வகிக்கும் கனிஷ்ட அலுவலர்கள், எழுதுவினைஞர்கள் ஆகியோர்களுக்கான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 3ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குக் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வகுப்பில் அலுவலர்களுக்கான கடமைகள் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

(த-204-202)

## கலைக்கூறு IV பயிற்சி தொடர்பாக சாரணர்களுக்கு கலந்துரையாடல்

முழங்காவில்,ஒக்.27

கிளி.மாவட்டப் பாடசாலைகளின் சாரணர்களுக்கான கலைக்கூறுIV பயிற்சி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தால் நடத்தப்படவுள்ள இக்கலந்துரையாடலுக்கான ஏற்பாடுகளை மாவட்ட ஆணையாளர் கலாநிதி மா.புவனேந்திரன் மேற்கொண்டுள்ளார்.

கலைக்கூறுII முடித்து கலைக்கூறு III புத்தகம் பூரணப்படுத்தியவர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளலாம் என்றும் தகுதியுடையவர்கள் ஆணையாளருடன் தொடர்புகொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-323)

## தமிழ் - முஸ்லிம் சிறார்களுக்கு நாச்சிக்குடாவில் முன்பள்ளி !

வெள்ளாங்குளம்,ஒக்.27

நாச்சிக்குடாவில் உள்ள தமிழ் - முஸ்லிம் சிறார்களின் ஆரம்பக் கல்வியை வளர்த்தெடுக்கும் முகமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அங்கு தமிழ் பேசும் மக்களின் சிறார்களுக்கான முன்பள்ளி ஒன்று அமைக்கப்படுகிறது.

அந்த முன்பள்ளிக்குக் கடந்த மாதம் அடிக்கல் நடப்பட்டது. இந்த அடிக்கல் நடும் விழாவில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதி, விடுதலைப் புலிகளின் பிரதேச அரசியல் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு அடிக்கற்களை நட்டுவைத்தனர். பொதுமக்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். அடிக்கல் நடும் வைபவம் முடிவடைந்ததும் அங்கு கூட்டமும் நடைபெற்றது. (த-415)

## நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்புகள் வழங்கப்படுவதில்லை

முல்லைத்தீவு, ஒக்.27

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வவுனிக்குளத்தில் நன்னீர் மீன்பிடித்தொழிலை மேற்கொள்ளும் மீனவர்களுக்கு எவ்வித ஊக்குவிப்பும் கொடுக்கப்படவில்லை என்று நன்னீர் மீன்பிடிச் சங்கத்தினர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

வவுனிக் குளத்தில் பல காலமாக நன்னீர் மீன்பிடி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இங்கு மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள், தொழில் முயற்சிக் கடன்கள் என்பன வழங்க எவரும் முன்வரவில்லை.

பலகாலம் பாவனையிலுள்ள மீன்பிடி வலைகள், வள்ளங்களைக்கொண்டு தொடர்ந்து தொழிலை மேற்கொள்ள தொழிலாளர்கள் பெரும் சிரமமடைந்து வருகின்றனர்.

மீன் பிடித் தொழிலைக் கைவிடவேண்டிய நிலைக்கு இந்த மீனவர்கள் தள்ளப்படுகின்றனர்.

இதனால் நன்னீர் மீன்பிடித் தொழில் பாதிப்படைய நேரிடும்.

இதனைக் கவனத்திற்கொண்டு குளங்களின் நன்னீர் மீன்பிடியை மேம்படுத்துவதற்கு பொது நிறுவனங்கள் உதவி புரியவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டது. (த-352-204)



முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டு விழாவின் போது எடுக்கப்பட்ட படம் இது.
(படம்:வெள்ளாங்குளம் செய்தியாளர்)

## வகுப்புக் கொட்டகையில் ஒழுக்கு; இதனால் கொட்டும் மழையில் மாணவர்கள் முழுக்கு!

### மன்னாகண்டல் பாடசாலையில் இப்படி ஓர் அவலம்

ஒட்டுசுட்டான்,ஒக்.27

முத்தையன்கட்டு, இடதுகரை மூன்றாம் கண்டம், மன்னாகண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தற்காலிக கொட்டகைகளிலேயே இயங்கிவருகின்றது. அந்தக் கொட்டகைகளின் கூரைகள் பெரிதும் சேதமடைந்து இருக்கின்றன. அவை திருத்தியமைக்கப்படவில்லை. இப்போது மழை காலம் தொடங்கிவிட்டது. மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இங்கு 76 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். நிரந்தரக் கட்டடங்கள் இல்லாததால் தற்காலிக கொட்டகைகளில் இருந்தே மாணவர்கள் கற்கவேண்டிய நிலை இருக்கிறது.

அந்தத் தற்காலிக கொட்டகைகள் கூட உரிய காலத்தில் வேயப்படாததால் கொட்டும் மழையில் மாணவர்கள் நனையவேண்டிய அவலம் ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி, இரவு வேளைகளில் இந்த வகுப்பறைக் கொட்டகைகள் கால்நடைகளின் தங்குமிடமாகவும் மாறுகின்றன.

இந்தப் பாடசாலையின் நிலை குறித்து உரிய தரப்புகளுக்கு அறிவித்திருந்தும் பலன் கிட்டவில்லை என்று பாடசாலைச் சமூகத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த நிலைமைகளை மாற்றி இப்பாடசாலை மாணவர்கள் எவ்வித இடையூறுமின்றி கல்வியைத் தொடர்வதற்குத் தொண்டு நிறுவனங்கள் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று பெற்றோர்களும் ஆசிரியர்களும் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

(த-341)

## இரணைப்பாலையில் பொது மண்டபம்


புதுக்குடியிருப்பு,ஒக்.27

புதுக்குடியிருப்பு, இரணைப்பாலைக் கிராமத்தில் நியாப் II திட்டத்தின் கீழ் பொது நோக்கு மண்டபம் ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது. இந்த மண்டபத்துக்கான அடிக்கல் கடந்த 22 ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் நடப்பட்டது.

புதுக்குடியிருப்பு, இரணைப்பாலைக் கிராமத்தில் நியாப் II திட்டத்தின் கீழ் பொது நோக்கு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றது.

கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு.ந. சிறிரஞ்சன் தலைமையில் நடைபெற்ற அடிக்கல் நாட்டுவிழாவில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் சி.தயாணந்தா அடிக்கல் நாட்டிவைத்தார்.

புதுக்குடியிருப்புப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.பிறையாளன், பங்குந்தந்தை, கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-353)



உலக கனேடிய பல்கலைக்கழக சேவையின் நிதி உதவியுடன் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் முழங்காவில், இரணைமாதா நகர், நாச்சிக்குடா பகுதி இளைஞர்களுக்கு வெளிஇணைப்பு இயந்திரம் (அவுட் போர்ட் ) தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பயிற்சி வைபவத்தின் ஆரம்பநிகழ்வு முழங்காவிலில் நடைபெற்றது. இதில் வடக்கு - கிழக்கு 'பூஸ்ற்' செயற்திட்ட இணைப்பாளர் சீலன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பூநகரி, முழங்காவில் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சிவசாமி நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)




## புலமைப்பரிசில் பரீட்சையில் துணுக்காய் வலயத்தில் 14 மாணவர்கள் சித்தி!

மல்லாவி.ஒக்.27

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 14 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**மல்லாவி மத்திய கல்லூரி**

புஸ்பலிங்கம் தர்சன் (129), சிவஞானம் பிரசாந்தன் (132), பரராஜசிங்கம் தயாளினி (142).

**யோகபுரம் ம.வி.**

கிருஷ்ணபிள்ளை பிரியங்கன் (150), தவநாதன் தட்சாயினி (143), சிங்கநாயகம் [illegible]

**அனிஞ்சியன் குளம் தமிழ் வித்தி.**

மகாலிங்கம் சுமித்திரா (133), சூரியகுமார் கர்ணன் (142).

**திருநகர் தமிழ் வித்தி.**

விக்கினேஸ்வரன் நிவேதிகா (134), நாகேந்திரராஜா விதுசன் (131).

**பாலிநகர் ம.வி.**

கயிலாயஇந்திரன் கபிலேஷ் (141), ஜெயவீரசிங்கம் ஜெனனி (138).

**நட்டாங்கண்டல் அ.த.க.பா.**

நாகேஸ்வரன் உமேஸ் (129).

**விநாயகபுரம் அ.த.க.பா.**

சத்தியமூர்த்தி ஜோஜிதா (131). (த-322)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனாதிபதித் தேர்தல் 2005.11.17

## உடற்றகுதியீனம் காரணமாக விசேஷ வாகனத்தினைப் பயன்படுத்துவதற்கான விண்ணப்பம்

1981 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 82(4)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் உடற்றகுதியீனம் காரணமாக எவரேனுமொருவர் நடந்தோ அன்றி இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் அல்லது பிரதேச போக்குவரத்துச் சபையினால் அல்லது இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சேவையிலோ வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய்வர முடியாதவராக இருந்தால், தான், வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய்வரும் நோக்கத்திற்காக தனது தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தானாகவோ அல்லது அவ்வாறு முடியாதிருப்பின் தனக்குப் பதிலாக வேறொருவர் வேட்பாளர் அல்லாத வேறு எவரேனும் ஆளினால் விண்ணப்பிக்கலாம்.

02. இவ்வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணபத்தினை வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு ஏழு நாள்களுக்கு முன்னதாக (அதாவது 2005 நவம்பர் மாதம் 10ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக) தெரிவத்தாட்சி அலுவலருக்கு கிடைக்கும்படியாக சமர்ப்பித்தல் சட்டமுறையான தேவையொன்றாகுமென்பதோடு தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடைந்தால் இந்நோக்கத்திற்கென அந்நபருக்கு விசேஷ போக்குவரத்து வசதியினைப் பெற்றுக்கொள்வதற்குகான உத்தரவுப் பத்திரத்தை வழங்கலாம்.

03. விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் நபர் நடந்து அல்லது பொது வாகனங்களில் போக முடியாதவாறு உடற்றகுதியீனம் உற்றிருப்பதன் தன்மையை விவரித்து (மேல்நாட்டு அல்லது சுதேச வைத்தியர்) பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட வைத்திய அத்தாட்சிப் பத்திரமொன்றின் மூலம் தமது விண்ணபத்தை உறுதிப்படுத்துவாரெனில் அதற்கான முடிவை மேற்கொள்வதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு இலகுவாகவிருக்கும். தன்னைப் பரிசோதித்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு ஒருவர் அரசாங்க வைத்தியரிடம்/பதிவுசெய்த அல்லது உதவி வைத்திய தொழில் புரியும் ஒருவரிடம் அல்லது ஆயுள்வேத வைத்தியரிடம் விண்ணப்பிக்குமிடத்து அவர் அவ்வைத்திய அறிக்கையினை கட்டணமெதுவுமின்றிப் பெற்றுக்கொள்ளலாம். தனியார் (மேல்நாட்டு அல்லது சுதேச) வைத்தியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளில் அவ்வைத்தியரின் பெயரையும் பதிவுசெய்யப்பட்டுள்ள இலக்கத்தையும் குறிப்பிடவேண்டும்.

04. 2ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்குமாறு இதற்கென இத்துடனுள்ள மாதிரிப்படிவத்திற்கிணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பித்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| I. | கிளிநொச்சி மாவட்டத்தின் விண்ணபதாரிகள் | தெரிவத்தாட்சி அலுவலர் (மாவட்டச் செயலாளர், அரசாங்க அதிபர்) கச்சேரி, யாழ்ப்பாணம். |
| II. | முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் விண்ணபதாரிகள் | தெரிவத்தாட்சி அலுவலர் (மாவட்டச் செயலாளர், அரசாங்க அதிபர்) கச்சேரி, வவுனியா. |
| III. | ஏனைய சகல மாவட்டங்களினதும் விண்ணபதாரிகள் | அவரவர் வதியும் தேர்தல் மாவட்டங்களின் (நிர்வாக மாவட்டங்களின்) தெரிவத்தாட்சி அலுவலர்கள் (மாவட்டச் செயலாளர்கள்) |

தேர்தற் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2005 ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி.
DCI/w/in/Pre05-49

**தயானந்த திசாநாயக்க,**
*தேர்தல்கள் ஆணையாளர்.*

### *1981 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்*
### சனாதிபதித் தேர்தல் - 2005.11.17
### 82(4)(ஈ) ஆம் பிரிவின் கீழ் வாகனத்தைப் பயன்படுத்துவதற்கென உடற்தகுதியீனமுள்ள ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்

.................................................. தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு

1) உடற்றகுதியீனம் உள்ளவரின் விவரம்:..................................................

(அ).முழுப்பெயர்:..................................................

(ஆ). அஞ்சல் முகவரி:..................................................

(இ). தேருநர் இடாப்பிலுள்ளவாறு வாக்கெடுப்புப் பிரிவு, வாக்கெடுப்பு மாவட்டம், தொடர் இலக்கம் (தெரியுமாயின்):..................................................

2) உடற்றகுதியீனம் பற்றிய சுருக்கமான விவரம்:..................................................

3) உடற்றகுதியீனம் உற்றவருக்காக வேறு எவராலும் விண்ணப்பப்படிவம் அனுப்பப்படுமாயின் அவரது பெயரும் முகவரியும்:..................................................

4) இவ்விண்ணப்பத்தைப் பரிசீலனைக்கெடுப்பதற்கேதுவாக அரசாங்க வைத்தியர் ஒருவரின் / பதிவுசெய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியத் தொழில்புரியும் ஒருவரின் / ஆயுள்வேத வைத்தியர் ஒருவரின் / தனியார் வைத்தியரொருவரின் அறிக்கை ஒன்றை இத்துடன் அனுப்புகின்றேன்.

வைத்தியரின் பெயர்:..................................................
பதிவிலக்கம்:..................................................

5) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2ஆம் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ளவாறு உடற்றகுதியீனம் காரணமாக எனக்கு/உடற்றகுதியீனம் உற்றுள்ள மேலே காணப்படுபவருக்கு நடந்து அல்லது இலங்கை மத்திய போக்குவரத்துசபை அல்லது இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் பொதுப்போக்குவரத்து சேவை எதனிலும் ஏற்பாடுசெய்யப்பட்ட போக்குவரத்து வசதி மூலம் ஒரு வாக்கெடுப்புக்குப் போக முடியாதென இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

6) மேற்கூறப்பட்ட வாக்கெடுப்பின்போது வாக்கினைப் பிரயோகிக்கும் பொருட்டு வாக்கெடுப்பு நிலையத்திற்கு போய்வருவதற்கென நான்/உடற்றகுதியீனம் உற்ற மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ளவர் ஏதுமொரு வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு எழுத்து மூலமான உத்தரவினை வழங்குமாறு இத்தால் கேட்டுக்கொள்கின்றேன்.

திகதி:..........................
DCI/w/in/Pre05-49

..................................................
உடற்றகுதியீனமானவரின்/ அவருக்காக விண்ணப்பிக்கும் வேறொருவரின் ஒப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.

# பிரசாரத்துக்கு அரச வளங்கள்: இதுவரை எழுபது முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 27

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளுக்கு அரச வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் தேர்தல்கள் திணைக்களத்திற்கு இதுவரை 70 முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சாரசபை, கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம் போன்ற அரச நிறுவனங்களின் வாகனங்களே கூடுதலான அளவில் பயன்படுத்தப்படுவதாக இந்த முறைப்பாடுகளில் சுட்டிக்காட்டிப்பட்டிருப்பதாக தேர்தல்கள் திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தல் காலத்தில் அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிற்கும், பொலிஸ் ஆணைக் குழுவின் தலைவர் ரஞ்சித் அபேசூரியவிற் குமிடையே இன்று முக்கிய பேச்சு நடைபெற வுள்ளது.

தேர்தல்கால வன்முறைகளை கட்டுப்படுத்துவது குறித்தும் இந்த சந்திப்பின்போது ஆராயப்படவுள்ளது. (க-3)

# வாக்களிப்பு நிலையங்கள் கொழும்பில் இம்முறை அதிகரிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது கொழும்பு மாவட்டத்தின் வாக்களிப்பு நிலையங்களை 29ஆல் அதிகரிப்பதற்குத் தேர்தல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி இம்முறை கொழும்பு மாவட்டத்தில் 987 வாக்களிப்புநிலையங்கள் அமையவுள்ளன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் 958 வாக்களிப்பு நிலையங்களே இருந்தன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 14 லட்சத்து 68 ஆயிரத்து 537 பேர் கொழும்பு மாவட்டத்தில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் டி.எஸ். சேனனாயக்க கல்லூரி, இஸபத்தன கல்லூரி போன்வற்றில் தேர்தல் வாக்குகளை எண்ணும் பணி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-3)

# வாக்களிக்க ஊழியர்களுக்கு விடுமுறை தேவை

கொழும்பு, ஒக்.27

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் நவம்பர் 17ஆம் திகதி தேர்தலில் வாக்களிப்பதற்காக ஊழியர்களுக்கு உரிய நேரவிடுமுறை வழங்காத நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதென தேர்தல் ஆணையாளர் தீர்மானித்திருக்கிறார்.

கடந்த தேர்தலின்போது ஊழியர்களுக்கு வாக்களிக்க விடுமுறை வழங்கவில்லையெனத் தெரிவித்து சுமார் இருபது தனியார் நிறுவனங்களுக்கெதிராக தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலில் வாக்களிப்பதற்காக பாரபட்சமின்றி அனைத்து ஊழியர்களுக்கும், அவர்களது வசிப்பிடங்களின் தூரத்திற்கமைய குறுகிய கால விடு முறை, சம்பளத்து டன் வழங்கப்பட வேண்டு மென்பது கட்டாயமென்று தேர்தல் திணைக்களத்தின் அதிகாரியொருவர் கூறினார்.

இந்தச் சட்டத்தை மீறுவோருக்கெதிராக நீதிமன்றத்திற்கு சென்றும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அவர் மேலும் கூறினார். (க-3)

## தேர்தல் வன்முறைகள் இதுவரை 500

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட கடந்த 7ஆம் திகதியிலிருந்து நேற்று வரை 500 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு எதிராகவே அதிகளவான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள்ளும் அதிகமானவை அரச வாகனங்களைத் தேர் தல் கடமைக்குப் பயன்படுத்துவது தொடர்பானது என்று அதிகாரிகள் கூறினர். ஜே.வி. பியினரும் அதிகளவான முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். (க)

# சனாதிபதித் தேர்தல் 2005.11.17

## தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல்

தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்குவது தொடர்பான 1981 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 110ஆம் பிரிவின் ஏற்பாடுகள் தொழிலாளர்களினதும் தொழில் தருநர்களினதும் தகவலுக்காக இங்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

01. (1) தேர்தல் ஒன்றில் நேரடியாக வாக்களிப்பதற்கு உரித்துடையவரான வேறெவரேனும் ஆளின் தொழில் தருநராகவுள்ள ஆள் எவரும் அத்தகைய வேறு ஆள் ஒருவரால் அதற்கென எழுத்து மூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் அத்தேர்தலில் அத்தகைய வேறு ஆள் நேரடியாக வாக்களிக்க இயலச் செய்வதற்குப் போதுமானதென கருதக்கூடியவாறான இடையாறாது தொடர்ந்து செல்லும் அத்தகைய நேரத்திற்கு நான்கு மணித்தியால கால நீட்சிக்கு குறையாத எழுத்திலான சம்பள இழப்பில்லாத விடுமுறையை அத்தகைய வேறு ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

(1அ) தொழில்தருநர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைத் தருகின்ற கூற்றொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(அ) உட்பிரிவு (1) இன் கீழ் விடுமுறைக்கு விண்ணப்பிக்கின்ற ஆள்களின் பெயர்கள்அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் கீழ் விடுமுறை வழங்கப்பட்ட ஆள்களின் பெயர்களும் அத்தகைய ஆள்களுக்கு எக்காலப்பகுதிகளுக்கு அத்தகைய விடுமுறை வழங்கப்பட்டுள்ளதோ அக்காலப் பகுதிகளும்

அத்துடன் அத்தகைய கூற்றை தொழில் இடத்தில் துலாம்பரமாக வெளிக்காட்டி செய்தலும் வேண்டும்.

2) ஓராம் உட்பிரிவின் அல்லது (1அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் எவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின் குற்றத் தீர்ப்பு அளிக்கப்படுவதன் மேல் 500/=ஐ விஞ்சாத ஒரு குற்றப் பணத்திற்கு அல்லது ஒரு மாதத்திற்கு மேற்படாத காலப் பகுதிக்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

02. மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய தனது வாக்கையளிப்பதற்காக விடுமுறைகோரி எழுத்துமூலம் விண்ணப்பம் செய்கின்ற எல்லா ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்கவேண்டும். அவ்வாறு வழங்கும் விடுமுறை காலம் அமைய ஊழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறையொன்றாக கருதப்பட வேண்டியதுடன் அது ஊழியர்களின் சாதாரண லீவுகளிலிருந்து புறம்பானதாகவிருக்க வேண்டும்.

03. இவ்விடயம் தொடர்பாக ஊழியர்களுக்கு வழங்கப்படும் விடுமுறை காலத்தை அந்த ஊழியர் தொழில் புரியும் இடத்திலிருந்து அவரது வாக்கெடுப்பு நிலையத்திற்கு போகவும் அங்கிருந்து திரும்பி வரவும் உள்ள தூரத்தை கருத்திற்கொண்டு தொழில் தருநரால் தீர்மானம் செய்தல் வேண்டும். சட்டத்தின் படி லீவுபெற்றுக்கொள்வது தொடர்பாக இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களின் போது ஊழியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதனால் இவ்வாக்கெடுப்பின் போது வாக்களிக்க உரித்துள்ள தனது ஊழியர்களுக்கு சட்டத்தின் கீழ் உரிமையுள்ள இவ்விடுமுறையை தனியார், அரசாங்க துறைகளில் உள்ள தொழில்தருநர்கள் தமது ஸ்தாபனத்தில் தொழில் புரியும் ஊழியர்களுக்கு வருகின்ற சனாதிபதித் தேர்தலில் தமது வாக்கை அளிப்பதற்கு சட்டமுறையான இவ்விடுமுறையை வழங்குமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன்.

04. மேற்கூறப்பட்ட சனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு 2005.11.17ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 7 மணியிலிருந்து பி.ப.4 மணிவரை நடைபெறும்.

05. இது தொடர்பாக சகல தொழில் தருநர்களிடமிருந்தும் கிடைக்கும் ஒத்துழைப்பை மிகவும் மெச்சுகின்றேன்.

**தேர்தல்கள் செயலகம்,**
**சரண மாவத்தை, இராஜகிரிய,**
**2005 ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி.**
AOC/PRE-05-Staff Leave-TA

**தயானந்த திசாநாயக்க,**
*தேர்தல்கள் ஆணையாளர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு

தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புப் பெறவுள்ள மேலும் 5 ஆயிரத்து 800 பேரின் பெயர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் வெளியிட்டுள்ளனர். நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில் தெரிவானோரில் எஞ்சிய பகுதியினரின் பெயர்களும் கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் ஒரு தொகுதியினரின் பெயர்களும் வருமாறு:-

| | |
|---|---|
| 577யா/ந/9852 | திருமதி கமலரத்தினம் ஐயாத்துரை |
| 578யா/ந/9853 | திருமதி கனகேஸ்வரி கனகசிங்கம் |
| 579யா/ந/9858 | திரு. செல்லத்துரை இராஜேந்திரன் |
| 580யா/ந/9862 | திருமதி மாசிலாமணி நடேசன் |
| 581யா/ந/9900 | திருமதி இலட்சுமிப்பிள்ளை இராசலிங்கம் |
| 582யா/ந/9911 | திருமதி புஸ்பமணி துரைராசா |
| 583யா/ந/9912 | திருமதி பரமேஸ்வரி அம்பலவாணர் |
| 584யா/ந/9935 | திருமதி சரஸ்வதி குமாரசாமி |
| 585யா/ந/9939 | திருமதி பாக்கியம் வேலாயுதம் |
| 586யா/ந/9964 | திருமதி மகேஸ்வரி இராசையா |
| 587யா/ந/9982 | திரு. சுப்பர் நடேசு |
| 588யா/ந/10013 | திரு. ஆழ்வார் நாகலிங்கம் |
| 589யா/ந/10015 | திரு. முருகேசு பரராசசிங்கம் |
| 590யா/ந/10021 | திரு. கதிரவேலு செல்வரத்தினம் |
| 591யா/ந/10022 | திரு. தம்பு பத்மநாதன் |
| 592யா/ந/10024 | திரு. கனகநாயகம் நல்லைநாதன் |
| 593யா/ந/10029 | திருமதி இலட்சுமி மகாலிங்கம் |
| 594யா/ந/10077 | திரு. சுப்பையா ஜெகசோதி |
| 595யா/ந/10085 | திருமதி அன்னம் இராசையா |
| 596யா/ந/10090 | திரு. முத்துத்தம்பி சபாநாயகம் |
| 597யா/ந/10099 | திருமதி பொன்னம்மா சிவசுப்பிரமணியம் |
| 598யா/ந/10119 | திருமதி பரமேஸ்வரி சதாசிவம் |
| 599யா/ந/10133 | திரு. கனகசபாபதி காசிநாதன் |
| 600யா/ந/10135 | திருமதி இரத்தினம் சண்முகம் |
| 601யா/ந/10159 | திருமதி மாகிறேற் பாக்கியநாதர் |
| 602யா/ந/10171 | திரு. செல்லையா நாராயணசாமி |
| 603யா/ந/10175 | திரு. சங்கரப்பிள்ளை சண்முகலிங்கம் |
| 604யா/ந/10179 | திருமதி சோதிப்பிள்ளை அப்பையா |
| 605யா/ந/10237 | திருமதி சரஸ்வதி இராசையா |
| 606யா/ந/10289 | திருமதி ஜெயமணி சுப்பிரமணியம் |
| 607யா/ந/10293 | திருமதி தங்கராணி பழனிச்சாமி |
| 608யா/ந/10351 | திருமதி பூரணம் தம்பு |
| 609யா/ந/10388 | திரு. சிவசம்பு குலசபாநாதன் |
| 610யா/ந/10393 | திரு. சின்னப்பிள்ளை பாலசிங்கம் |
| 611யா/ந/10491 | திருமதி இராசம்மா சிவசாமி |
| 612யா/ந/10519 | திருமதி செல்வநாயகி இராசலிங்கம் |
| 613யா/ந/10537 | திரு. சுப்பிரமணியம் திருவள்ளுவர் |
| 614யா/ந/10552 | திருமதி இராஜபூபதி இரட்ணராஜா |
| 615யா/ந/10592 | திரு. சுப்பையா குணநாயகம் |
| 616யா/ந/10627 | திரு. நடராசா கருணையானந்தன் |
| 617யா/ந/10660 | திருமதி வள்ளியம்மா கந்தசாமி |
| 618யா/ந/10704 | திருமதி நாகம்மா செல்லையா |
| 619யா/ந/10776 | திரு. சின்னத்தம்பி அழகதுரை |
| 620யா/ந/10791 | செல்வி. புளோசம் இராஜதுரை |
| 621யா/ந/10821 | திரு. நவரத்தினம் விஜயரத்தினம் |
| 622யா/ந/10861 | திரு. வேலுப்பிள்ளை ஐயாத்துரை |
| 623யா/ந/10863 | திருமதி இராசலட்சுமி கனகரெத்தினம் |
| 624யா/ந/10903 | திரு. குமாரசாமி பாலசிங்கம் |
| 625யா/ந/10904 | திருமதி பாலாம்பிகை சின்னத்துரை |
| 626யா/ந/10947 | திரு. செல்லத்துரை வைத்தியநாதன் |
| 627யா/ந/10979 | திருமதி இலட்சுமி சரவணமுத்து |
| 628யா/ந/10997 | திருமதி விமலாதேவி சர்வேஸ்வரசர்மா |
| 629யா/ந/11017 | திருமதி இராசலட்சுமி பத்மநாதன் |
| 630யா/ந/11059 | திரு. இராசநாயகம் யோகநாயகம் |
| 631யா/ந/11075 | திரு. கதிரவேலு கணேசலிங்கம் |
| 632யா/ந/11089 | திரு. ஆசைப்பிள்ளை சிவசுப்பிரமணியம் |
| 633யா/ந/11099 | திருமதி பாக்கியலெட்சுமி சுந்தரலிங்கம் |
| 634யா/ந/11149 | திருமதி சரஸ்வதி காசிப்பிள்ளை |
| 635யா/ந/11203 | திரு. சோமசுந்தரம் பாலசுப்பிரமணியம் |
| 636யா/ந/11209 | திருமதி மங்கையர்கரசி கணேசபிள்ளை |
| 637யா/ந/11245 | திருமதி செல்லம்மா வேலாயுதம் |
| 638யா/ந/11254 | திரு. பொன்னம்பலம் பாலசுப்பிரமணியம் |
| 639யா/ந/11261 | திரு. கனகசபை சிவசுந்தரம் |
| 640யா/ந/11295 | திரு. வைரமுத்து மார்க்கண்டு |
| 641யா/ந/11302 | திரு. கந்தையா பரமநாதன் |
| 642யா/ந/11315 | திருமதி இராசமலர் இராசேந்திரம் |
| 643யா/ந/11344 | திருமதி வள்ளியம்மாள் சிதம்பரப்பிள்ளை |
| 644யா/ந/11351 | திரு. வீரகத்தி கணபதிப்பிள்ளை |
| 645யா/ந/11352 | திருமதி இரத்தினம் வேலாயுதம் |
| 646யா/ந/11364 | திருமதி நாகேஸ்வரி சுப்பிரமணியம் |
| 647யா/ந/11371 | திரு. கந்தசாமி சண்முகம் இராசு |
| 648யா/ந/11473 | திரு. கந்தையா யோகநாதன் |
| 649யா/ந/11496 | திரு. நாகேஸ் சோமசுந்தரம் |
| 650யா/ந/11503 | திருமதி சண்முகம் சீனிவாசகம் |
| 651யா/ந/11555 | திருமதி புஸ்பராணி வேலாயுதம் |
| 652யா/ந/11560 | திருமதி நவமணி மார்க்கண்டு |
| 653யா/ந/11608 | திருமதி விஜயலட்சுமி செல்லத்துரை |
| 654யா/ந/11629 | திரு. சின்னத்துரை நவரத்தினம் |
| 655யா/ந/11634 | திருமதி மகேஸ்வரி நவரத்தினம் |
| 656யா/ந/11637 | திருமதி மகாலட்சுமி பொன்னம்பலம் |
| 657யா/ந/11655 | திரு. சிவகுரு சண்முகலிங்கம் |
| 658யா/ந/11678 | செல்வி. பாரதி வேதநாயகம் |
| 659யா/ந/11694 | திருமதி நாகேஸ்வரி தாமோதரம்பிள்ளை |
| 660யா/ந/11711 | திருமதி. பத்மாவதி அருளானந்தம்பிள்ளை |
| 661யா/ந/11725 | திரு. வல்லி சின்னராசா |
| 662யா/ந/11739 | செல்வி. தங்கலட்சுமி செல்லத்துரை |
| 663யா/ந/11743 | திருமதி குணவதி புண்ணியசிங்கம் |
| 664யா/ந/11747 | திரு. கந்தையா நல்லையா |
| 665யா/ந/11790 | செல்வி. மகேஸ்வரி துரையப்பா |
| 666யா/ந/11823 | திரு. குட்டி வைத்தி |
| 667யா/ந/11833 | திரு. கந்தையா ஜெயரத்தினம் |
| 668யா/ந/11837 | திருமதி கனகம்மா ஐயாத்துரை |
| 669யா/ந/11911 | திரு. குட்டியன் தங்கராசா |
| 670யா/ந/11927 | திருமதி கமலா நல்லதம்பி |
| 671யா/ந/11965 | திரு. சுப்பிரமணியம் ஆறுமுகம் |
| 672யா/ந/11988 | திரு. தேசிங்கம் குணசிங்கம் |
| 673யா/ந/11990 | திரு. சின்னத்தம்பி இரத்தினசிங்கம் |
| 674யா/ந/11994 | திருமதி அருந்தவநாயகி செல்லத்துரை |
| 675யா/ந/12015 | திருமதி தங்கரத்தினம் சின்னத்துரை |
| 676யா/ந/12018 | திரு. வேலன் நடேசன் |
| 677யா/ந/12044 | திரு. வல்லி கோபாலசிங்கம் |
| 678யா/ந/12058 | திரு. செல்வன் இராசையா |
| 679யா/ந/12064 | திரு. செந்தில்நாதன் கணேசன் |
| 680யா/ந/12078 | திருமதி சறோஜினிதேவி தர்மலிங்கம் |
| 681யா/ந/12095 | திரு. செல்லையா கதிரவேலு |
| 682யா/ந/12136 | திரு. மனுவேல் சின்னத்துரை |
| 683யா/ந/12145 | திரு. ஆறுமுகம் சிவகுரு |

## கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| 1யா/கோ/22 | திரு. சிதம்பரநாதன் கணபதிப்பிள்ளை |
| 2யா/கோ/50 | திரு. சிற்றம்பலம் மகேந்திரன் |
| 3யா/கோ/61 | திரு. இராமர் நாகலிங்கம் |
| 4யா/கோ/79 | திருமதி புனிதவதி கணபதிப்பிள்ளை |
| 5யா/கோ/110 | திரு. அம்பலவாணர் சுப்பிரமணியம் |
| 6யா/கோ/119 | திரு. தம்பையா சின்னத்துரை |
| 7யா/கோ/130 | திரு. இராமையா செல்லத்துரை |
| 8யா/கோ/140 | திரு. சின்னையா சேனாதிராசா |
| 9யா/கோ/144 | திரு. கந்தையா சண்முகலிங்கம் |
| 10யா/கோ/159 | திருமதி இரத்தினம் துரைசாமி |
| 11யா/கோ/162 | திரு. கந்தையா தேவராசா |
| 12யா/கோ/163 | திரு. நாகலிங்கம் துரைசிங்கம் |
| 13யா/கோ/199 | திரு. இராமுப்பிள்ளை முருகையன் |
| 14யா/கோ/202 | திருமதி நவமணி கனகரத்தினம் |
| 15யா/கோ/204 | திரு. செல்லையா நடராசா |
| 16யா/கோ/221 | திரு. பொன்னுத்துரை சிவேந்திரன் |
| 17யா/கோ/227 | திரு. சதாசிவம் சண்முகநாதன் |
| 18யா/கோ/236 | திரு. இளையதம்பி திருநாவுக்கரசு |
| 19யா/கோ/265 | திரு. அம்பலவி இராசையா |
| 20யா/கோ/274 | திருமதி செல்லம்மா செல்லையா |
| 21யா/கோ/287 | திரு. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு |
| 22யா/கோ/290 | திரு. அப்பாக்குட்டி வேலுப்பிள்ளை |
| 23யா/கோ/339 | திரு. மூத்ததம்பி ஆநந்தகிஷ்ணன் |
| 24யா/கோ/368 | திரு. சின்னத்தம்பி காசித்தம்பி |
| 25யா/கோ/371 | திரு. செல்லையா கந்தசாமி |
| 26யா/கோ/380 | திரு. சிவகுரு குகதாசன் |
| 27யா/கோ/399 | திரு. பரமு முத்துலிங்கம் |
| 28யா/கோ/410 | திருமதி நல்லம்மா பொன்னுத்துரை |
| 29யா/கோ/448 | திரு. சிதம்பரம் மூத்தார் |
| 30யா/கோ/449 | திருமதி சிவபாக்கியம் சண்முகலிங்கம் |
| 31யா/கோ/464 | திரு. வேலன் சின்னத்தம்பி |
| 32யா/கோ/468 | திரு. வேலன் செல்லக்கண்டு |
| 33யா/கோ/470 | திரு. ஆறன் சின்னத்தம்பி |
| 34யா/கோ/498 | திரு. பரமு தேவராசா |
| 35யா/கோ/555 | திருமதி செல்லம்மா நாகலிங்கம் |
| 36யா/கோ/568 | திருமதி இராசம்மா ஆறுமுகம் |
| 37யா/கோ/570 | திரு. இளையதம்பி செல்வராசா |
| 38யா/கோ/643 | திருமதி கண்மணி சுந்தரம் |
| 39யா/கோ/646 | திரு. நாகலிங்கம் கணபதிப்பிள்ளை |
| 40யா/கோ/662 | திரு. மாணிக்கம் குமரேசு |
| 41யா/கோ/681 | திரு. கதிரமலை மாணிக்கம் |
| 42யா/கோ/690 | திரு. பொன்னர் நடேசன் |
| 43யா/கோ/697 | திரு. தம்பு நாகமுத்து |
| 44யா/கோ/804 | திருமதி தங்கரத்தினம் சின்னப்பு |
| 45யா/கோ/881 | திருமதி ஜெயராணி சபாரத்தினம் |
| 46யா/கோ/916 | திருமதி மகேஸ்வரி அம்மா அருமைத்துரை |
| 47யா/கோ/928 | திரு. கணபதி நடராசா |
| 48யா/கோ/932 | திரு. கனகசபை நாகராசா |
| 49யா/கோ/965 | திரு. தம்பிப்பிள்ளை சிவலிங்கம் |
| 50யா/கோ/974 | திரு. செல்வம் சதாசிவம் |
| 51யா/கோ/982 | திரு. கயிலாயப்பிள்ளை சிவலிங்கம் |
| 52யா/கோ/983 | திரு. நாகலிங்கம் சிவநேசன் |
| 53யா/கோ/1002 | திரு. கந்தர் சின்னையா |
| 54யா/கோ/1044 | திருமதி வள்ளிப்பிள்ளை இராசா |
| 55யா/கோ/1074 | திரு. தம்பிப்பிள்ளை நடராசா |
| 56யா/கோ/1080 | திரு. செல்லப்பா மகாலிங்கம் |
| 57யா/கோ/1081 | திரு. மாணிக்கம் பொன்னுத்துரை |
| 58யா/கோ/1118 | திரு. கந்தையா தில்லாந்துரை |
| 59யா/கோ/1131 | திருமதி ஞானசவுந்தரி பாலசுப்பிரமணியம் |
| 60யா/கோ/1148 | திரு. தம்பு ஜெயச்சந்திரன் |
| 61யா/கோ/1162 | திரு. தம்பையா கனகசபை |
| 62யா/கோ/1192 | திருமதி கனகம்மா இராசலிங்கம் |
| 63யா/கோ/1240 | திரு. கயிலாசபிள்ளை நாகராசா |
| 64யா/கோ/1245 | திரு. கந்தன் நல்லான் |
| 65யா/கோ/1266 | திருமதி பார்வதி முத்து |
| 66யா/கோ/1270 | திருமதி பார்வதி தம்பிப்பிள்ளை |
| 67யா/கோ/1289 | திருமதி இராசலட்சுமி குட்டித்தம்பி |
| 68யா/கோ/1354 | திரு. பஞ்சாட்சரஐயர் சோமசேகரன் |
| 69யா/கோ/1375 | திரு. கணபதிப்பிள்ளை சிவஞானம் |
| 70யா/கோ/1390 | திரு. முருகுப்பிள்ளை சின்னராசா |
| 71யா/கோ/1411 | திருமதி செல்லமுத்து பழனிவேல் |
| 72யா/கோ/1413 | திரு. சுப்பிரமணியக்குருக்கள் சோமசுந்தரஐயர் |
| 73யா/கோ/1415 | திரு. தில்லையம்பலம் செல்வரட்ணம் |
| 74யா/கோ/1439 | திருமதி தெய்வானைப்பிள்ளை ஐயாத்துரை |
| 75யா/கோ/1440 | திரு. இளையதம்பி துரைராசா |
| 76யா/கோ/1453 | திரு. அன்ரனி அரியரட்டினம் தோமஸ் |
| 77யா/கோ/1460 | திரு. கந்தையா தருமராசா |
| 78யா/கோ/1500 | திரு. சுப்பிரமணியம் கணேசலிங்கம் |
| 79யா/கோ/1512 | திரு. அம்பலவாணர் குமாரவேலு |
| 80யா/கோ/1535 | திரு. கந்தையா நவரத்தினம் |
| 81யா/கோ/1544 | திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன் |
| 82யா/கோ/1546 | திருமதி பார்வதி சின்னத்துரை |
| 83யா/கோ/1557 | திரு. சின்னப்பா பரமநாதன் |
| 84யா/கோ/1625 | திரு. செல்லையா தம்பிராசா |
| 85யா/கோ/1648 | திருமதி தெய்வேந்திரராணி வேலாயுதர் |
| 86யா/கோ/1668 | திரு. குட்டிஐயா யோகீஸ்வரன் |
| 87யா/கோ/1690 | திரு. வேலுப்பிள்ளை முத்துத்தம்பி |
| 88யா/கோ/1702 | திருமதி. பாக்கியம் சோமசுந்தரம் |
| 89யா/கோ/1703 | திருமதி பரமேஸ்வரி கதிர்காமநாதன் |
| 90யா/கோ/1713 | திருமதி பரமேஸ்வரி இராசரத்தினம் |
| 91யா/கோ/1722 | திரு. இளையதம்பி இராசரத்தினம் |
| 92யா/கோ/1732 | திரு. வேலுப்பிள்ளை செல்வரத்தினம் |
| 93யா/கோ/1759 | திரு. பொன்னுத்துரை சிவநேயன் |
| 94யா/கோ/1766 | திருமதி திலகவதி கிருஷ்ணானந்தம் |
| 95யா/கோ/1792 | திரு. முத்தையா அப்பையா |
| 96யா/கோ/1831 | திருமதி இலட்சுமிபிள்ளை கந்தசாமி |
| 97யா/கோ/1844 | திரு. சின்னக்குட்டி மார்க்கண்டு |
| 98யா/கோ/1851 | திரு. அம்பலவாணர் நெல்லிநாகலிங்கம் |
| 99யா/கோ/1863 | திருமதி பராசக்தி வரதராசன் |
| 100யா/கோ/1872 | திருமதி புஸ்பவதி குமாரசாமி |
| 101யா/கோ/1879 | திரு. இளையதம்பி பழனி |
| 102யா/கோ/1900 | திரு. செல்வன் சீனியன் |
| 103யா/கோ/1929 | திருமதி சிவபாக்கியம் சின்னத்தம்பி |
| 104யா/கோ/1954 | திரு. யோசேப் தம்பிஐயா |
| 105யா/கோ/1974 | திருமதி அன்னப்பிள்ளை கந்தன் |
| 106யா/கோ/1995 | திரு. நடராசா ஈஸ்வரநாதன் |
| 107யா/கோ/1996 | திருமதி இலச்சுமி தம்பையா |
| 108யா/கோ/2008 | திரு. சுப்பிரமணியம் யோகலிங்கம் |
| 109யா/கோ/2050 | திருமதி மகாதேவி அலகேந்திரன் |
| 110யா/கோ/2066 | திருமதி நாகரத்தினம் வேலுப்பிள்ளை |
| 111யா/கோ/2076 | திரு. சபாரத்தினம் பத்மநாதன் |
| 112யா/கோ/2102 | திருமதி இராசலட்சுமி சிவநேசன் |
| 113யா/கோ/2163 | திரு. நாகலிங்கம் சுந்தரலிங்கம் |
| 114யா/கோ/2176 | திருமதி செல்வரத்தினம் நடராசா |
| 115யா/கோ/2210 | திருமதி தவயோகம் சிற்றம்பலம் |
| 116யா/கோ/2217 | திருமதி தங்கச்சிஅம்மா அருளம்பலம் |
| 117யா/கோ/2250 | திரு. இரத்தினம் கந்தசாமி |
| 118யா/கோ/2268 | திரு. கந்தன் பசுபதி |
| 119யா/கோ/2272 | திரு. வேலுப்பிள்ளை இராசரத்தினம் |
| 120யா/கோ/2287 | திரு. கணபதிப்பிள்ளை சுவாமிநாதன் |
| 121யா/கோ/2288 | திரு. சின்னையா சிவகுருநாதன் |
| 122யா/கோ/2295 | திரு. தம்பிமுத்து செல்வரத்தினம் |
| 123யா/கோ/2316 | திரு. சின்னத்தம்பி ஐயாத்துரை |
| 124யா/கோ/2331 | திரு. சதாசிவம் மகேந்திரன் |
| 125யா/கோ/2372 | திரு. நல்லதம்பி சின்னத்தம்பி |
| 126யா/கோ/2388 | திரு. நல்லதம்பி வீரசிங்கம் |
| 127யா/கோ/2405 | திரு. சரவணை கிஸ்ணபிள்ளை |
| 128யா/கோ/2431 | திரு. இராமலிங்கம் செல்லையா |
| 129யா/கோ/2432 | திருமதி முத்தம்மா சிவானந்தன் |
| 130யா/கோ/2440 | திரு. மாணிக்கம் தியாகராசா |
| 131யா/கோ/2472 | திரு. கணபதிப்பிள்ளை கந்தசாமி |
| 132யா/கோ/2473 | திரு. முத்துசாமி கணேசன் |
| 133யா/கோ/2522 | திரு. சின்னவன் அப்பையா |
| 134யா/கோ/2568 | திரு. கிருஷ்ணபிள்ளை வீரசிங்கம் |
| 135யா/கோ/2577 | திரு. நாகலிங்கம் பாலகிருஷ்ணன் |
| 136யா/கோ/2608 | திரு. கணபதிப்பிள்ளை குலநாயகம் |
| 137யா/கோ/2634 | திரு. நாகமுத்து கந்தப்பு |
| 138யா/கோ/2640 | திரு. செல்லத்துரை கணபதிப்பிள்ளை |
| 139யா/கோ/2650 | திருமதி மகேஸ்வரி வல்லிபுரம் |
| 140யா/கோ/2663 | திரு. சிவனடியார் மச்சகேந்திரன் (சிவபாதம்) |
| 141யா/கோ/2699 | திருமதி பொன்னம்மா கந்தையா |
| 142யா/கோ/2709 | திரு. மாதர் இராசா |
| 143யா/கோ/2720 | திரு. சரவணமுத்து இரத்தினம் |
| 144யா/கோ/2723 | திருமதி இராசமணி சதாசிவம் |
| 145யா/கோ/2735 | திருமதி இராசமணி நவரத்தினம் |
| 146யா/கோ/2755 | திரு. சித்திவினாயகம் சிவசுப்பிரமணியம் |
| 147யா/கோ/2759 | திருமதி செல்லபாக்கியம் குமார் |
| 148யா/கோ/2784 | திரு. சந்தன் சின்னத்தம்பி |
| 149யா/கோ/2802 | திருமதி சிலோஜனா சபாவதி |
| 150யா/கோ/2834 | திருமதி. தவமணி நாகலிங்கம் |
| 151யா/கோ/2836 | திருமதி. தவமணி இராசையா |
| 152யா/கோ/2837 | திரு. மாதர் தம்பித்துரை |
| 153யா/கோ/2844 | திரு. நாகலிங்கம் தம்பிராசா |
| 154யா/கோ/2851 | திரு. சின்னத்தம்பி தர்மலிங்கம் |
| 155யா/கோ/2861 | திருமதி. தனபாக்கியம் பாலசிங்கம் |
| 156யா/கோ/2875 | திருமதி. விஜயலக்சுமி ரட்ணம் |
| 157யா/கோ/2879 | திரு. வேலுப்பிள்ளை வீரசிங்கம் |
| 158யா/கோ/2894 | திருமதி. அன்னலட்சுமி சுப்பிரமணியம் |
| 159யா/கோ/2919 | திரு. மயிலு கதிர்காமு |
| 160யா/கோ/2943 | திருமதி. புண்ணியவதி சிங்கரத்தினம் |
| 161யா/கோ/2951 | திருமதி. இரத்தினாம்பிகை துரைநாயகம் |
| 162யா/கோ/3007 | திரு. சுப்பிரமணியம் தருமலிங்கம் |
| 163யா/கோ/3029 | திருமதி. யோகமலர் பாலசிங்கம் |
| 164யா/கோ/3040 | திருமதி. அன்னம்மா செல்லன் |
| 165யா/கோ/3063 | செல்வி. ஜெயலக்சுமி நாகராஜா |
| 166யா/கோ/3098 | திரு. சின்னத்தம்பி காங்கேஸ்வரன் |
| 167யா/கோ/3120 | திரு. நாகர் மாணிக்கம் |
| 168யா/கோ/3166 | செல்வி. பரமேஸ்வரி கதிரேசு |
| 169யா/கோ/3168 | திருமதி. பூமாதேவி மதியாபரணம் |
| 170யா/கோ/3215 | திரு. சீனிவாசகம் நவரத்தினம் |
| 171யா/கோ/3217 | திரு. கந்தையா சிவலிங்கம் |
| 172யா/கோ/3280 | திருமதி. தெய்வானை பொன்னர் |
| 173யா/கோ/3298 | திரு. செல்லப்பா தெட்சணாமூர்த்தி |
| 174யா/கோ/3305 | செல்வி. விமலாஜனி கந்தையா |
| 175யா/கோ/3312 | திரு. இளையதம்பி பத்மநாதன் |
| 176யா/கோ/3330 | திரு. மார்க்கண்டு காங்கேசு |
| 177யா/கோ/3342 | திருமதி. பராசக்தி கார்த்திகேசு |
| 178யா/கோ/3383 | திருமதி. பரஞ்சோதி சிவஞானம் |
| 179யா/கோ/3406 | திருமதி. றோசம்மா கணேசு |
| 180யா/கோ/3423 | திரு. தம்பு சுப்பிரமணியம் |
| 181யா/கோ/3439 | திருமதி. செல்லமுத்து அருளானந்தம் |
| 182யா/கோ/3458 | திரு. இராசசிங்கம் சகாதேவன் |
| 183யா/கோ/3479 | திரு. இரத்தினம் தவராசா |
| 184யா/கோ/3506 | திரு. இராசையா அழகரத்தினம் |
| 185யா/கோ/3547 | திரு. நடேசர் கண்ணலிங்கம் |
| 186யா/கோ/3550 | திரு. தம்பிஐயா கந்தநாதன் |
| 187யா/கோ/3574 | திரு. கந்தையா முத்துக்குமாரசாமி |
| 188யா/கோ/3579 | திருமதி. மனோன்மணி சின்னராசா |
| 189யா/கோ/3591 | திருமதி. சிவபாக்கியம் நடராசா |
| 190யா/கோ/3628 | திருமதி. இராசமணி இராசரத்தினம் |
| 191யா/கோ/3748 | திருமதி. சின்னம்மா நடேசன் |

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
### பெருந்தெருக்கள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை வ/கி (வடமாகாணம்)

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல் - 2006

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாண பரிபாலனத்தின் கீழ் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா பிரதம பொறியியலாளர் பிராந்தியங்களுக்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள்/உற்பத்தியாளர்கள்/ ஒப்பந்த காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. வழங்கல்கள்**

1.1 ஆற்றுமணல்,கடற்கரை மணல்
1.2 சீர்செய்யப்படாத கற்கள்/கல்லுடைக்கும் ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட கற்கள்
1.3 கட்டடப் பொருள்கள் (செங்கட்டி, சீமெந்து, செரமிக்ஸ், அஸ்பெற்றோஸ்சீற், மாபிள்வகைகள், இரும்புக்கம்பி, மரம், மின்சார உபகரணங்கள்) கண்ணாடி, பெயின்ற், வாணிஸ்
1.4 கொங்கிறீற் பைப்ஸ்
1.5 றோட் மாக்கிங் பெயின்ற்
1.6 வீதி அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் (வீல்பரோ, மண்வெட்டி, சவல், கத்தி, காட்டுக்கத்தி போன்றன)
1.7 வாகனங்களுக்கு பயன்படுத்தப்படும் ரயர், ரியூப், பற்றறிகள், ஒயில்,டீசல்
1.8 காரியாலய வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் காகிதாதிகள் போன்றன
1.9 வாகன உதிரிப்பாகங்கள்
1.10 காரியாலய உபகரணங்களும், தளபாடங்களும்

**2.சேவைகள்**

2.1 வீதி அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்தப்படும் வாடகை வாகனங்கள். (டோசர், மோட்டர் கிறேடர், லோடர்ஸ், பக்கோ, றோட் றோலர்,ரிப்பர் லொறி, ரக்ரர்,வைபிறேட்டிங் றோலர்) வாகன வாடகை சேவை வழங்க இருக்கும் வழங்குநர்கள், வாகனங்களுக்கு உரிய அனைத்து ஆவணங்களும் (வாகன புத்தகம், வரி, காப்புறுதி) உரிமையாளர் பெயரில் காணப்படல் வேண்டும்.
2.2 வாகன த்திருத்த வேலைகளும் சுத்திகரிப்பும்

**3 பதிவுதொடர்பாக பொதுநிபந்தனைகள்**

3.1விண்ணப்பிக்க விரும்பும் வழங்குநர்களும்/ஒப்பந்தகாரர்களும் கீழ்குறிப்பிட்ட விண்ணப்பப் படிவ மாதிரியினை தயார்செய்து பூரணப்படுத்தி அதற்குரிய ஆவணங்களுடன் மாகாணப் பணிப்பாளர், வ.கி(வடக்கு), கண்டி வீதி,வவுனியா என முகவரியிடப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 2006 ..................... பிராந்தியம் (3.3 இல் குறிப்பிடப்பட்டபடி பிரிவுகள் குறிப்பிடப்பட வேண்டும்) எனக் குறிப்பிட்டு 18.11.2005 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
3.2 ஒவ்வொரு பிரதம பொறியியலாளர் பிராந்தியத்திற்கும் தனித்தனி வழங்கல், சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் பொழுது பிரிவு ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 230 வீதம் காசுக்கட்டளையாகவோ அன்றி வங்கிக் கட்டளையாகவோ (பெறுமதி சேர் வரி உட்பட) *மாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா* அவர்களின் பெயரில் எடுக்கப்பட்டு, விண்ணப்பப்படிவங்களுடன் இணைத்து அனுப்புதல்வேண்டும்.
3.3 ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனி வழங்கல்களிற்கும் சேவைகளிற்கும் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பும் போது ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
3.5 விநியோகஸ்தர்கள் தமது பெயர்களை இவ் அதிகாரசபையில் பதிவுசெய்ததன் பின்னர் நாம் கோரும் கேள்விப் பத்திரங்களுக்கு தொடர்ந்து மூன்று முறை விலை மதிப்பினை சமர்ப்பிக்காவிடினும், விநியோகிக்க ஒப்புக்கொண்ட பொருள்களையோ/சேவைகளையோ குறிப்பிட்ட கால எல்லைக்குள் விநியோகிக்காவிடினும், கேள்விப் பத்திரத்தில் குறிப்பிட்ட மாதிரிப் பொருள்களையோ/சேவைகளையோ வழங்காவிடினும் தங்கள் பதிவு எவ்வித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும். இவ்வாறான சேவைக்கோ, பொருள்களுக்கோ எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படாது.
3.6 2006ஆம் ஆண்டிற்கான கேள்விப்பத்திரங்கள் யாவும், பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும் விநியோகஸ்தர்களிடமிருந்துமே கோரப்படும். இருப்பினும், அவசியம் ஏற்படும் பட்சத்தில் வேறு ஸ்தாபனங்களில் இருந்து பொருள்களையோ விநியோகங்களையோ பெற்றுக் கொள்வதற்கான மீள் பரிசீலனையைச் செய்வதற்கு கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
3.7 எவ்விண்ணப்பங்களையும் எவ்வித கொடுப்பனவுமின்றி தள்ளுபடி செய்வதற்கு கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.

**எந்திரி மோசஸ் மரியதாசன்**
மாகாணப் பணிப்பாளர் வ.கி(வ),
வீ.அ.அ.சபை,
வவுனியா.
☎ 024 2222942

வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் 2006 ஆம் ஆண்டுக்கு பதிவு செய்வதற்கான

### மாதிரி விண்ணப்பப்படிவம்

........................................................ *பிராந்தியம்*

1. பெயரும் முகவரியும்:...........................................................
2. பண்டங்கள் சேவைகள் வரி பதிவு செய்யப்பட்டதற்கான இலக்கம்:...........................................
3.என்ன வகையான வழங்கல்/சேவைக் காக விண்ணப்பிக்கிறீர்கள் (பிரிவுஇலக்கத்தினை குறிப்பிடவும்):.......................................
4. தொலைபேசி இலக்கம்/ தொலைநகல் இலக்கம்:...........................................................
5.தங்கள் கணக்கிருக்கும் வங்கியின் பெயர்:...........................................
6.பணக்கொடுப்பனவுக்கான காலஎல்லை:...........................................
7. 2005 ஆம் ஆண்டில் எந்தெந்த அரசாங்க திணைக்களங்களுக்கு வழங்கல்களும் சேவைகளும் செய்ததற்கான விவரம்.

.....................................................
**விண்ணப்பதாரியின் கையொப்பம்**
**(வியாபார அலுவலக முத்திரை).**

...................................
திகதி

(சி-45932)(42-19-45)

## சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.27

கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்தார் எனத் தெரிவித்து காரைநகரைச் சேர்ந்த ஆண் ஒருவரது சடலம் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் யாழ்.மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குடும்பத்தகராறுகளே இச்சம்பவத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (3-ரி)


## தேவை

பிரபல காப்புறுதிக் கம்பனிக்கு பிரதேச பிரதிநிதிகள் தேவை.
*வயது:* 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்
*தகைமை:* O/L சித்தி
*முடிவுதிகதி:* 07.11.2005 முன் விண்ணப்பிக்கவும்.
(42.19.45) விளம்பர இல: 2728 (41984)
C/o. உதயன், யாழ்ப்பாணம்.


# மாவட்டச் செயலக பொதுத் தொலைபேசி சேவை

மேற்படி யாழ்.மாவட்டச் செயலகத்தில் 08.09.2005 ஆம் திகதி தொடக்கம் பொதுத் தொலைபேசி இலக்கம் 021 222 2233, 021 222 2234 மூலம் சகல பதவிநிலை அலுவலர்களுடனும் கிளைகளுடனும் தொடர்பு கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, மாவட்டச் செயலகத்துடன் தொடர்புகொள்ள வேண்டிய தேவை உள்ளோர் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தங்களுடைய தேவையை/ சேவையை/ தகவல்களை நிறைவேற்றிக் கொள்ள இயலும்.

மேலேயுள்ள பொதுத் தொலைபேசி இணைப்பு முறையுடன் பின்வரும் நேரடித் தொலைபேசி இலக்கங்கள் மூலமும் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 01. பொது அலுவலகம் | மாவட்டச் செயலகம் | 021 222 2233<br>021 222 2234 |
| 02. அரசாங்க அதிபர் | அலுவலகம்<br>வதிவிடம்<br>தொலைநகல் | 021 222 2235<br>021 222 2205<br>021 222 2355 |
| 03. மே.அரசாங்க அதிபர் | அலுவலகம்<br>வதிவிடம் | 021 222 2236<br>021 222 4158 |
| 04. மே.மா.செயலர் (நிதி) | அலுவலகம்<br>வதிவிடம்<br>தொலைநகல் | 021 222 2398<br>021 222 3301<br>021 222 2398 |
| 05. நிர்வாக உத்தியோகத்தர் | அலுவலகம்<br>தொலைநகல் | 021 222 2775<br>021 222 2775 |
| 06. உ.அ.அ. (த.பி) | அலுவலகம் | 021 222 2771 |
| 07. திட்டப்பணிப்பாளர் | அலுவலகம்<br>தொலைநகல் | 021 222 2774<br>021 222 2774 |
| 08. கணக்காளர் (மா.பு.பு.கிளை) | அலுவலகம் | 021 222 2648 |
| 09. பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் | அலுவலகம் | 021 222 2427 |
| 10. சுனாமி தகவல் நிலையம் | அலுவலகம் | 021 222 7921 |
| 11. சமுர்த்தி உ.ஆ | அலுவலகம் | 021 222 6421 |
| 12. உ.மா.பதிவாளர் | அலுவலகம் | 021 222 2475 |
| 13. ஆட்பதிவுத் திணைக்களம் | அலுவலகம் | 021 222 5052 |
| 14. மாவட்ட புள்ளி விபரவியலாளர் | அலுவலகம் | 021 222 3330 |
| 15. மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் | அலுவலகம்<br>தொலைநகல் | 021 222 3789<br>021 222 8271 |
| 16. மோட்டார் வாகனப் பரிசோதகர் | அலுவலகம் | 021 222 7552 |
| 17. பி.திட்டப் பணிப்பாளர் வட- கிழக்கு வீடமைப்பு புனரமைப்புத் திட்டம் (NEHRP) | அலுவலகம் | 021 222 8028 |
| 18. பி.திட்டப் பணிப்பாளர் வட-கிழக்கு நீர்ப்பாசனத் விவசாயத் திட்டம் (NEIAP) | அலுவலகம் | 021 222 5068 |
| 19. நிகொட் (NECORD) | அலுவலகம்<br>தொலைநகல் | 021 222 5163<br>021 222 3625 |
| 20.மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு | அலுவலகம் | 021 222 3886 |
| 21. உதவி ஆணையாளர் தேர்தல் | அலுவலகம் | 021 222 2655 |
| 22. பொறியியல் ஆலோசகர் | அலுவலகம் | 021 222 7583 |
| 23. கணக்காய்வு அத்தியட்சகர் | அலுவலகம் | 021 222 5949 |
| 24. UNHCR - Office | அலுவலகம் | 021 222 5593 |
| 25. உதவி மாவட்டச் செயலர் (மனிதவள அபிவிருத்தி) | அலுவலகம் | 021 222 6725 |
| 26. மேலதிக மாவட்டப் பதிவாளர் நாயகம் (வட-கிழ மாகாணம்) | அலுவலகம் | 021 222 2475 |
| 27. இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு | அலுவலகம் | 021 222 3625 |
| 28. NORAD | அலுவலகம் | 021 222 6752 |
| 29. மத்திய சுற்றாடல் அதிகார்சபை | அலுவலகம் | 021 222 5693 |
| 30. NECCDEP | அலுவலகம் | 021 222 7900 |

**க.கணேஷ்,**
அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலரும்,
யாழ்ப்பாணம்.

(சி-45926)(39-19-45-42)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள உதைபந்தாட்ட நிபுணர் கொல்கர் ஒயமன் நேற்றுமுன்தினம் காலை யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட வீரர்களுக்கு செயன்முறைப் பயிற்சிகளை வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
(படங்கள்: தமிழினியன்)

# யாழ்.மாவட்ட வீரர்களுக்கு திறமை உண்டு; ஆர்வம் உண்டு அவர்களுக்கு தொடர்ந்து பயிற்சி வழங்குவதே என் நோக்கம்

## யாழ்.வந்த உதைபந்தாட்ட ஜேர்மன் நிபுணர் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட வீரர்களிடம் திறமை உண்டு. அவர்களுக்கு ஆர்வம் உண்டு. அவர்களின் திறமையை வெளிக்கொணர்ந்து அவர்களை சிறந்த வீரர்களாக உருவாக்கத் தொடர்ந்து இங்குவந்து பயிற்சி வழங்குவேன்.

- இப்படிக் கூறினார் ஜேர்மன் உதைபந்தாட்ட நிபுணர் கொல்கர் ஒயமன்.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இப்படிக் கூறினார்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகள் மற்றும் விளையாட்டுக் கழகங்களின் வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக அவர் இங்கு வந்துள்ளார்.

நேற்றுமுன்தினமும் நேற்றும் யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் அவர் பயிற்சிகளை வழங்கினார்.

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட நிலை தொடர்பாக அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் விவரித்தார்.

அவர் கூறியதாவது:-

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் உதைபந்தாட்டத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஜேர்மன் அரசு இலங்கை உதைபந்தாட்ட லீக்குடன் இணைந்து பயிற்சிகளையும் உபகரணங்களையும் வழங்க முடிவு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் களுத்துறை, காலி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்தேன். அங்கு வீரர்களுக்கு பயிற்சி அளித்தேன். விளையாட்டு உபகரணங்களையும் வழங்கினேன்.

யாழ்ப்பாணத்தில் பயிற்சி அளிக்க வந்துள்ளேன். இருநாள் பயிற்சிகளை வழங்க முடிவு செய்தேன். குறுகிய காலப் பயிற்சி அவர்களின் தரத்தை உயர்த்தப் போதுமானதாக இல்லை.

அவர்களிடம் திறமைகள் உண்டு. அவர்களின் திறமைகள் வெளிக்கொணரப்பட வேண்டும். அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கத் தொடர்ந்து இங்கு வருவேன்.

அவர்களுக்கு மேலங்கிகளையும், சப்பாத்துக்களையும் பந்துகளையும் வழங்கியுள்ளேன். தொடர்ந்தும் அவர்களுக்கு வழங்குவேன்.




சர்வதேச தரத்தில் இங்கு விளையாட்டு மைதானம் இல்லாத நிலையில் பயிற்சி எதற்கு என்று கேள்வி எழுப்பப்பட்டது. அது விடயமாக கொழும்பில் உதைபந்தாட்ட லீக் தலைவர் மணிலால் பெர்னாண்டோவுடன் கலந்துரையாடுவேன். அதன் அவசியம் குறித்து அவருக்குத் தெரியப்படுத்துவேன் - என்றார் அவர். (3-7-190)

# முள்ளியவளையில் நாளைமுதல் விளையாட்டுப் பயிற்சி முகாம்

புதுக்குடியிருப்பு,ஒக்.27

மாணவர்களுக்கு உதைபந்தாட்டம், வலைபந்தாட்டம் ஆகியவற்றில் புதிய பயிற்சிகளை வழங்குவதற்காக நாளை தொடக்கம் 30ஆம் திகதிவரை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் பயிற்சி முகாம் நடத்தப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்கள் சேவை மன்றத்தினரால் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

கரைதுறைபற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள உயர்தரப் பாடசாலை மாணவர்களும் இளைஞர்கழக அங்கத்தவர்களும் இந்தப் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களுக்கு மூன்று நாள்களும் உதைபந்தாட்டம், வலைபந்தாட்டம் உட்பட அனைத்து தடகள விளையாட்டுகளிலும் சிறப்பான முறையில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்றும் -

முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை இந்தப் பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் - முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் எஸ். சன் முகவடிவேல் தெரிவித்துள்ளார். (3-353-203)

# மென்பந்தாட்டத்தில் லெவன்ஸ்ரார் அணி சம்பியன்

யாழ்ப்பாணம்,ஒக்.27

ஆனைக்கோட்டை, பிடாரி அம்பாள் சனசமூக நிலையத்தின் 10ஆம் ஆண்டு நிறைவையொட்டி பிடாரி அம்பாள் விளையாட்டுக் கழகத்தினால் கடந்த 23ஆம் திகதி நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் லெவன்ஸ்ரார் அணி வெற்றி பெற்றது.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்திற்கு ஆனைக்கோட்டை லெவன்ஸ்ரார் வி.க. அணியும் ஜி.பி.எஸ்.வி.க. அணியும் தெரிவாகின.

ஆனைக்கோட்டை லெவன்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற லெவன்ஸ்ரார் வி.க. அணி முதலில் துடுப்பெடுத்தாடி 5 ஓவர்கள் நிறைவில் 34 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து களமிறங்கிய ஜி.பி.எஸ்.வி.க. அணி 4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 22 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இறுதியில் ஆனைக்கோட்டை லெவன்ஸ்ரார் அணி 12 ஓட்டங்களால் வெற்றிபெற்று வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது. (3-203-ரி)

## விளையாட்டு

### சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கொழும்பில்

யாழ்ப்பாணம்,ஒக்.27

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினின் 2004ஆம் ஆண்டு "சி" சான்றிதழுக்காக பயிற்றுநர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சி முகாமில் பங்குபற்றிச் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளைமறுதினம் சனிககிழமை இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளன அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி முகாமில் யாழ்ப்பாணத்தில் இருந்து கலந்துகொண்ட எம்.பேட்டி பெனிஸ்ரர், சி.நோலெஸ்கோ ஆகிய இருவரும் சித்தியடைந்துள்ளனர். (3-190-203)

# சண்டிலிப்பாய் கோட்டமட்ட உதைபந்தாட்டத்தில் இளவாலை ஹென்றிஸ் இருபிரிவுகளில் சம்பியன்

வலி.வடக்கு, ஒக்.27

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 14, 18 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றிஸ் கல்லூரி சம்பியனானது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இப்போட்டிகள் இடம்பெற்றன.

14 வயதுப் பிரிவு இறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மானிப்பாய் இந்துக்கல்லூரியும் மோதிக் கொண்டன. இரு அணிகளும் ஆட்டம் முடிவடையும்வரை கோல்கள் எதனையும் பெறாத நிலையில் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன.

8 உதைகள் உதைக்கப்பட்டும் இரு அணிகளும் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க முடியாத நிலையில் 9ஆவது உதையே புனித ஹென்றியரசர் கல்லூரி வெற்றிபெறக் காரணமாக அமைந்தது. 5:4 என ஹென்றியரசர் கல்லூரி வெற்றிபெற்றது.

16 வயதுப் பிரிவின் இறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயமும் மாதகல் புனித ஜோசப் வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் ஆட்டம் முடிவடையும் வரை கோல்களைப் பெறாது சமநிலையில் முடிவடைந்துள்ளது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை உடைப்பு உதை மூலம் 3:2 என்ற கோல் கணக்கில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் வெற்றிபெற்றது.

18 வயதுப் பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.


புனித ஹென்றியரசர் கல்லூரி முதல்பாதி ஆட்டத்தில் ஒரு கோலையும் இரண்டாம் பாதி ஆட்டத்தில மேலும் ஒரு கோலையும் அடித்து வெற்றிபெற்றது.

ஆட்டமுடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது. (3-86)

### வருடாந்த ஆட்டம் இன்று சென்.பற்றிக்ஸில்

யாழ்ப்பாணம்,ஒக்.27

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் சென்.ஹென்றிஸ் கல்லூரிக்கும் 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கான வருடாந்த உதைபந்தாட்டப் போட்டி இன்று வியாழக்கிழமை 2 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (3-190)





கண்டாவளைப் பிரதேச முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த திறனாய்வுப் போட்டிகள் அண்மையில் தர்மபுரம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் சிறுவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து தர்ம ஆசிரியர்களுக்கான

**போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்பு**

ஆரம்பம் :- 29.10.2005 (2 மணி)

ஆசிரியர் :- S.அருள்நங்கை

**புதிய உயர்கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(41966)
(32-19-16)


## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர்

அமரர் **க.சி.குகதாசன்** அவர்கள்

எமது கல்லூரியின் மாணவனாக, ஆசிரியராக, அதிபராக அரும்பணிகள் ஆற்றி தாவரவியலை தனியழகாய் போதித்த பேரறிஞன் க.சி.குகதாசன் அவர்கள் மறைந்த செய்தி எங்களை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்துகின்றது. அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குவதுடன் அவரது ஆத்மசாந்திக்காக அனைவரும் பிரார்த்திக்கின்றோம். அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதல் வார்த்தைகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்.**

(42005)
(21.16.18)

## கண்ணீர் அஞ்சலி

FWC



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 * 05 * 1931 | 23 * 10 * 2005 |

### அமரர் க.சி. குகதாசன் M.Sc. (USA)

**(President, Field Work Centre, Thondaimanaru.)**

தொண்டைமானாறு வெளிக்கள நிலைய நிறுவக உறுப்பினரும்

அப்பெரு நிலையத்தின் இன்றைய தலைவரும்

நீர்வள உயிரியல் ஆய்வின் முன்னோடியுமான

அமரர் சின்னத்தம்பி குகதாசன் அவர்களின்

காலம் முந்திய மரணம் அதிர்ச்சியைத் தந்துள்ளது.

அமரரின் ஆத்மா சாந்தி பெற அஞ்சலிப்பதோடு அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அநுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

27.10.2005

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்,
தொண்டைமானாறு.

## 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை மேலும் சில பெறுபேறுகளின் விவரம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை ரீதியான முடிவுகள் உதயனில் தொடர்ந்து வெளிவருகின்றன.

மேலும் சில பாடசாலைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு-

**வட்டுக்கோட்டை மத்தியகல்லூரி**
ம.பிரபு (142), வி.ஸ்ரீசுபாங்கி (141), சி.தாருகா (133), ஸ்ரீ.சொரூபிகா (131).

**ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன்**
பு.ஜனோஜ் (153), வி.பிரதீபன் (151), பா.ஷயந்தன் (148), க.சரணியா (137), க.ஆர்த்திகா (134), த.தர்சிகா (132), ப.மணிகாந் (130), சௌ.லக்சண்யா (125), தி.சசிகரன் (125), கு.ரகுராம் (124).

**செம்பியன்பற்று அ.த.க.பா.**
எஸ்.காயத்திரி (128)

**விக்னேஸ்வரா கல்லூரி**
இ.தர்ஷினி (124)

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**
வி.சர்மினா (131), கே.நிஷானா (124), எஸ்.சிந்துசா (144), எஸ்.கீர்த்தனா (138), ஜி.கிருஷாந்தினி (128), எஸ்.நீலாம்பரி (142), ரி.கம்சாறினி (130).

**ஞானசாரியார் கல்லூரி**
எஸ்.கௌசிகா (161), கே.சரண்ஜா (134).

**வல்வெட்டி இ.த.க.**
ரி.சன்சியா (129), எம்.சர்மிளா (132), எஸ்.செல்வநந்தினி (141).

**கம்பர்மலை வித்தி.**
கே.மகனீஸ் (133)

**தேவரையாளி இந்து**
பி.சந்தோஜன் (144)

**வதிரி திருஇருதயக் கல்லூரி**
ரி.எமிலின் சிந்தியா (138), மேரி ஜோசெப்தாஸ் றோகிதா (133)

**இமையாணன் அ.த.க.பா.**
எஸ்.கீர்த்தனா (130)

**கரவெட்டி மாணிக்கவாசகர்**
கே.பிரணவன் (126), கே.நிறோஜன் (143), ரி.மாலோகன் (142), எஸ்.வினோதன் (138), கே.நிவேதன் (147), பி.வைகுந்தன் (148), எஸ்.சதீஸ்வரன் (138), எஸ்.விதுர்ஷா (129), கே.ஆர்த்திகா (156), ஆர்.மதுசன் (139), ரி.பிறவீன் (138), கே.வைதேகி (132), எஸ்.ஜசீதா (156), ரி.கோகுலன் (153).

**கரணவாய் மணியகாரன் தோட்டம்**
ப.கௌதம் (130), வி.அகல்யா (138), ரி.வினோபா (137). (ஒ-12-70)


**விற்பனைக்கு**

எமது ஸ்தாபனத்தில் தயாரிக்கப்பட்ட றெறாஷோ மெஷின்கள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

**கமலா கராஜ் அன் இன்டஸ்றீஸ்**
**309, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(21.16.18) T.P.: 222 2092 (42010)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய

**செல்வி திருநாவுக்கரசு சின்மியா**

அவர்களை இறையருளால் சகலதும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்*
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்

(42012)(21.34.16)

## ஓராண்டு சிராார்த்த தினம்



எமது குடும்பத் தலைவி
திருமதி

**நடராசா ஐயர் கம்ஸநந்தினி**

அவர்களின் ஓராண்டு சிரார்த்த தினம் பார்த்திப வருடம் ஐப்பசி மாதம் 10ஆம் நாள் இன்று (27.10.2005) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நிகழவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து அவரின் இவ்வைபவத்தில் கலந்துகொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

- குடும்பத்தினர்.

சந்நிதி வீதி,
அச்சுவேலி.
(42020)(21.16.18)

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 30 - 03 - 1949 | 26 - 10 - 1997 |

### அமரர் தம்பு கந்தசாமி

(உரிமையாளர்,ஸ்ரீ விஸ்ணு அரிசி ஆலை )

**அன்பிற்கும் பாசத்திற்கும் ஆலமரமாய் இருந்த எம் அப்பாவே!**
**பாசத்தின் உறைவிடமாய் திகழ்ந்த எம் இனிய தெய்வமே!**
**எட்டு ஆண்டுகள் சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்**
**உம் நினைவுகள் தொடரும்... எம் இறுதி மூச்சு வரை.**

என்றும் உம் பிரிவால் துயருறும்:
மனைவி: **கண்ணாம்பாள்**
பிள்ளைகள்: **காண்டீபன், சங்கரன், லக்மினி, லாவண்யா, செந்தூரன்.**
மருமகள்: **அனோஜா.**

குடமியன்,
வரணி.
(41999) (21.16.34)

## மரண அறிவித்தல்

### பொன்னையா புலேந்திரன் (சீனன்)

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த பொன்னையா புலேந்திரன் 24-10-2005 திங்கட்கிழமை புத்தளத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சந்தானலட்சுமியின் (சரோ) அன்புக் கணவரும் சுரேந்திரன், ரவீந்திரன், சஞ்சீவன், கிருகோபன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சுபாசினி, யோகலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும் நவீன், லக்கா, சாருஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் பஞ்சலிங்கம், புவனேஸ்வரி, நகுலேஸ்வரி, அம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரனும் துரைராசா, ராசலட்சுமி, இராசரட்ணம், சுப்பிரமணியம், தவராசா, சிவம், ஜெயந்தன், காலஞ்சென்ற செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-10-2005) வியாழக்கிழமை புத்தளத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (26-21-16-18)

*தகவல்:*
**பு.சந்தானலட்சுமி (சரோ- மனைவி), பிள்ளைகள்.**

புத்தளம்.
0777 606016
(42002)


CROWN
STAINLESS STEEL KITCHEN SINK

எமது நாட்டில்---------
அதி கூடிய அளவில் விற்பனையாகும் கிட்சன் சிங்க்




ஏக விநியோகஸ்தர்கள்

சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிறைவேட்)லிமிட்டட்

காட்சியறை : 524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.

தொ.பே. 2324261-5, 2337283-5, 2436779 பெக்ஸ் : 2446554

விநியோகஸ்தர்:

நாராயணா கட்டிடப் பொருள்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



இரு அரசியல் தலைவர்களும் சித்தாலேப வைத்தியரின் அரசியல் தத்துவத்தை பின்பற்றுகிறார்கள். இவை நான் ஜனாதிபதியானவுடன் அரசியல் கட்சிகள் ஒன்றிணைவதற்கான முதல் அறிகுறி. நான் மகிழ்ச்சியடைகிறேன்.

போரை முடிவிற்கு கொண்டு வருவார் விக்டர் ஹெட்டிகொட சின்னம் கோப்பை

S.V.H.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்புக்கு ஈராக் மக்கள் அங்கீகாரம்

## தேர்தல் ஆணையம் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

பக்தாத், ஒக்.27

ஈராக்கில் புதிய அரசமைப்பை மக்கள் அங்கீகரித்துள்ளனர் என ஈராக்கிய தேர்தல் ஆணையம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஈராக்கில் புதிய அரசமைப்புக்கு மக்களின் ஆதரவு குறித்துக் கருத்தறியும் வாக்கெடுப்பு கடந்த 15ஆம் திகதி இடம்பெற்றது. இந்த வாக்கெடுப்பு தொடர்பான முடிவுகள் நேற்றுமுன்தினம் ஈராக் தேர்தல் ஆணையத்தால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

இந்தப் புதிய அரசமைப்புக்கு 78 சதவீதமான மக்கள் ஆதரவளித்துள்ளனர். 21 சதவீதமானோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இத்தேர்தல் முடிவுகள் மிகவும் சரியானவை, மோசடிகள் அற்றவை என ஈராக் தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர். தேர்தல் முடிவுகளை ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளும் சரிபார்த்து உறுதிப்படுத்தியுள்ளனர் என ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தேர்தல் முடிவுகள் டிசம்பரில் ஈராக்கில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத்துக்கான தேர்தலுக்கு வழிசமைத்துள்ளது என ஈராக் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ் அரசமைப்புக்கு ஷியா, குர்திஷ் இன மக்கள் பெரும் ஆதரவு வழங்கியுள்ளனர். 'சுனி' பிரிவு முஸ்லிம்கள் பெருமளவு நிராகரித்து வாக்களித்துள்ளனர்.

'சுனி' முஸ்லிம்கள் வாழும் இரண்டு மாகாணங்கள் அரசமைப்பை நிராகரித்தன. மூன்றாவது மாகாண மான நின்லாவ் மூன்றில் இரண்டு பெரும்பான்மையாக நிராகரிக்காத காரணத்தால் புதிய அரசமைப்பு நிராகரிக்கப்படுவதிலிருந்து தப்பிக்கொண்டது.

இந்தத் தேர்தல் முடிவுகளை ஏற்கமுடியாது எனவும் இது ஒரு கண்துடைப்பு நடவடிக்கை எனவும் 'சுனி' பிரிவு முஸ்லிம் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தேர்தல் முடிவுகளை ஐ.நா. அதிகாரிகள் வரவேற்றுள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி புஷ் கருத்து வெளியிடுகையில்:-

'வன்முறைகளிலிருந்து மீண்டும் ஈராக் ஜனநாயக வழிக்கு வந்துள்ளமை இதன்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்'.

ஈராக் பிரதமர் இப்ராஹிம் அல் ஜபாரி ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடுகையில், 'அரசியல் செயன்முறைகளுக்கு கிடைத்த வெற்றி' -எனத் தெரிவித்தார். (க)



ஈராக்கில் புதிய அரசமைப்பு மீதான மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பின் முடிவுகளை பக்தாத்தில் நேற்று முன் தினம் ஈராக்கிய தேர்தல் ஆணையக அதிகாரி பரீத் அயர் உத்தியோகபூர்வமாக அறிவிப்பதை முதலாவது படத்திலும், அச்செய்தியை அறிந்த ஈராக்கிய இராணுவத்தினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# ஜெயேந்திரர் மீதான வழக்கு புதுவை நீதிமன்றுக்கு மாற்றம்

புதுடில்லி, ஒக்.27

காஞ்சிபுரம் வரதராஜபெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமன் கொலை தொடர்பான வழக்கை புதுவை நீதிமன்றத்துக்கு மாற்ற உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த கொலை வழக்கு விசாரணையை தமிழகத்திலுள்ள நீதிமன்றத்தில் நடத்தினால் நீதி கிடைக்காது. எனவே, வேறு மாநிலத்துக்கு மாற்றவேண்டும் என்று கோரி காஞ்சி சங்கராச்சாரியார் ஜயேந்திரர் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆர்.லகோத்தி, நீதிபதி ஜி.பி. மாத்தூர் ஆகியோர் அடங்கிய குழு விசாரித்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள் வழக்கு விசாரணையை புதுவை நீதிமன்றத்துக்கு மாற்ற உத்தரவிட்டனர். (க)

# குஷ்பு மீதான பிடியாணையை இடைநிறுத்த நீதிமன்று உத்தரவு

சென்னை, ஒக்.27

பெண்களின் கற்பு குறித்து நடிகை குஷ்பு தெரிவித்த கருத்துத் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு ஒன்றில் விசாரணைக்கு ஆஜராகாததால் திருச்சி நீதிமன்றம் குஷ்புவைக் கைதுசெய்யப் பிறப்பித்த பிடியாணையை நிறுத்துமாறு இந்திய உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

திருச்சி நீதிமன்றத்தில் சமூக சேவை அமைப்பைச் சேர்ந்த ஒருவர் தொடர்ந்த வழக்கில் குஷ்பு நீதிமன்றில் ஆஜராகாததால் அவரை கைதுசெய்யப் பிடியாணை பிறப்பித்திருந்தது திருச்சி நீதிமன்றம்.

இதனை எதிர்த்து நடிகை குஷ்பு சார்பில் உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதில், அனைத்து நீதிமன்றங்களிலும் விசாரணைக்கு ஆஜராக இயலாது என்பதாலும், தொழில்நிமித்தம் வேறு இடங்களுக்கு செல்லவேண்டியுள்ளதாலும் திருச்சி நீதிமன்றத்தில் உள்ள வழக்கை ரத்துச்செய்து அங்கு ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் எனக் கோரியிருந்தார்.

இம்மனுவை ஏற்ற நீதிபதி, விசாரணைக்கு ஆஜராக விலக்கு அளிக்கக்கோரும் அவரது மனுவை ஏற்று திருச்சி நீதிமன்ற விசாரணைக்கு நான்கு வார இடைக்காலத் தடை விதித்தும் தீர்ப்பளித்தார். (க)

## தீபாவளி பண்டிகைக்கு பாப்பரசர் வாழ்த்து

வத்திக்கான், ஒக்.27

இந்துக்களின் பண்டிகையான தீபாவளியை வரவேற்றும், அதைக் கொண்டாடும் மக்களுக்கு வாழ்த்தும் பாப்பரசர் 16ஆவது பெனடிக்ற் தெரிவித்துள்ளார் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மதத்தலைவரான பாப்பரசர் 16ஆவது பெனடிக்ற் வத்திக்கானில் உள்ள தனது அலுவலகத்திலிருந்து வெளியிட்ட அறிக்கையில்,

அனைத்து மதத்தினரிடையேயும் நல்லிணக்கம் உருவாகவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரிட்டன் நாடாளுமன்றத்திலும், அமெரிக்க வெள்ளை மாளிகையிலும் தீபாவளிக் கொண்டாட்டங்கள் இடம் பெறவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# ஜப்பானில் அரச குடும்ப பெண்களுக்கு அரியணையேற இடமளிக்க கோரிக்கை

டோக்கியோ, ஒக். 27

ஜப்பானில் அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் அரியணையேற இடமளிக்க வேண்டும் என, ஜப்பானில் அரச பதவி தொடர்பாக ஆலோசனை வழங்கிவரும் நிபுணர் குழு பரிந்துரை செய்துள்ளது.

ஜப்பான் மன்னருக்கு இரண்டு மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். மகன்மார் இருவருக்கும் இதுவரை ஆண்வாரிசு இல்லாத காரணத்தால் இவர்களில் யார் அரியணை ஏறுவது என்பது தொடர்பில் சிக்கல் ஏற்பட்டது. இதனையடுத்து இவ்விவகாரம் நிபுணர்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நிபுணர்குழுவின் பரிந்துரைகளை அமுல் செய்வதற்கு அடுத்த ஆண்டு - சட்டம் ஒன்றை இயற்ற ஜப்பான் பிரதமர் திட்டமிட்டுள்ளார்.

பெண் ஒருவர் அரியணை ஏற அனுமதிக்க வேண்டும் என்பதற்கு பொதுமக்களின் பலமான ஆதரவு இருப்பதாகக் கருத்துக் கணிப்புகள் தெரிவித்துள்ளன. ஆனால், அரச சடங்குகளை ஆண் ஒருவரே இதுவரை நிறைவேற்றி வந்தார்.

பெண் அரியணை ஏற்பதை அரசிலுள்ள பலர் கடுமையாக எதிர்பார்கள் என்பதால் இது சிக்கலான ஒரு விடயம் எனச் செய்தியாளர்கள் தெரிவித்தனர். (க)

# குழந்தைகளிடம் எய்ட்ஸ் பரவலைத் தடுக்க யுனிசெவ் விழிப்புணர்வுப் பிரசாரம்

ஜெனீவா, ஒக்.27

ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நல நிதியமான யுனிசெவ், எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவ உலகளாவிய விழிப்புணர்வுப் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளது.

ஏனையவர்களுக்கு இந்த நோய் பரவாமல் தடுப்பதும் இப்பிரசாரத்தின் நோக்கமாகும். எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்தும் திட்டங்களில் குழந்தைகள் புறக்கணிக்கப்படுவதாக யுனிசெப் நிறுவனம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஒவ்வொரு நிமிடமும் உலகின் ஏதாவது ஒரு மூலையில் ஒரு குழந்தை எய்ட்ஸ் நோயால் இறக்கிறது என்றும், அதே சமயம் ஒவ்வொரு நிமிடமும் ஒரு குழந்தை எ.ஐ.வி. தொற்றால் பாதிக்கப்படுகிறது என்றும் அந்நிறுவனம் கூறுகிறது.

அதாவது, ஒரு நாளில் பதினைந்து வயதிற்குட்பட்ட ஆயிரத்து நானூறு பேர் எய்ட்ஸ் நோயால் இறக்கின்றனர்.

எய்ட்ஸ் நோய் ஒரு உலகப் பிரச்சினை. ஆனால், எய்ட்ஸ் நோயால் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் சர்வதேச அரங்குகளில் எதிரொலிக்காததால் உலக அளவில் எய்ட்ஸ் நோய்க்கு எதிரான செயற்றிட்டங்களில் குழந்தைகளின் பிரச்சினைகள் விடுபட்டு போய்விடுகின்றன என்று ஐ.நா. சபை கருதுகிறது என ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எய்ட்ஸ் நோய் பெரியவர்களுக்கு மட்டுமே வரும் நோய் என்ற கருத்தை தற்போது மேற்கொள்ளப்படும் பிரசார நடவடிக்கை மூலம் மாற்ற ஐக்கிய நாடுகள் சபை விரும்புகிறது எனவும் ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

## இந்தோனேஷியாவில் மண்சரிவு!

இந்தோனேஷியாவின் அஷே மாகாணத்திலுள்ள இரண்டு கிராமங்களில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 20 பேர்வரை உயிரிழந்துள்ளனர். மேலும் 300பேர் வரை காயமடைந்துள்ளனர்.

அஷே மாகாணத்திலுள்ள இரு கிராமங்களில் கடும் மழை காரணமாக பெரும் மண்சரிவு ஏற்பட்டது.

மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் தமது வீடுகளை இழந்துள்ளனர் எனவும் தெரியவருகிறது.

# 'அல்பா' சூறாவளியின் தாக்குதலுக்கு டொமினிக்கன் குடியரசில் 10 பேர் பலி!

போர்ட் பிரின்ஸ், ஒக். 27

'அல்பா' என்ற சூறாவளி ஹைதி, டொமினிகன் குடியரசு ஆகிய நாடுகளை கடுமையாகத் தாக்கியது. அதில் 10 பேர் உயிரிழந்தனர்.

'அல்பா' என்ற சூறாவளி கடந்த சனிக்கிழமை டொமினிகன் குடியரசில் பாரஹோனா அருகே கரை ஒதுங்கியது. அப்போது மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசியது. இதனால் அப்பகுதியில் கனமழை பெய்தது.

'அல்பா' சூறாவளி மேலும் வலுவடைந்த ஹைதி மற்றும் டொமினிகன் குடியரசு நாடுகளை கடந்த திங்கட்கிழமை தாக்கியது. இதில் இரு நாடுகளிலும் 10 பேர் உயிரிழந்தனர்.

நிலச்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக ஏராளமான வீடுகள் சேதமடைந்தன. இதில் சிக்கிய 24 பேரைக் காணவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனவே, உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. சேத மதிப்பைக் கணக்கிட முடியாமல் அதிகாரிகள் திணறுகிறார்கள். ஏற்கனவே 'வில்மா' சூறாவளியால் ஹைதி தீவு பாதிக்கப்பட்டிருந்தது. அங்கு 'வில்மா' சூறாவளிக்கு 12 பேர் பலியாகினர். இந்நிலையில் 'அல்பா' சூறாவளியாலும் ஹைதி தீவு பாதிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளையும் தாக்கிய பிறகு 'அல்பா' சூறாவளி வலுவிழந்துவிட்டது. அது அட்லாண்டிக் கடல் நோக்கி நகர்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## உலக அரங்கில்

## ஸ்பெயின் நகரங்களில் குண்டுவெடிப்புகள்!

மாட்ரிட், ஒக்.27

ஸ்பெயின் நாட்டின் நான்கு நகரங்களில் ஒரே நேரத்தில் குண்டுகள் வெடித்தன. கட்டடங்கள் சில சேதமடைந்தன. எவருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

ஸ்பெயினில் பொஸ்க் இன மக்கள் பெருமளவில் வாழும் நகரங்களில் இக்குண்டுகள் வெடித்தன. இதில் நீதிமன்றக் கட்டடம் ஒன்று சேதத்துக்குள்ளானது பொஸ்க் பகுதியைப் பிரித்து தனிநாடாக மாற்றக்கோரி 'இ.ரி.ஏ.' என்ற அமைப்பு ஆயுதப்போராட்டம் நடத்திவருகிறது.

இந்த அமைப்பே இக்குண்டு வெடிப்புகளுக்குக் காரணம் என ஸ்பெயின் அதிகாரிகள் தெரிவித்தனர். 1968ஆம் ஆண்டுமுதல் இந்த அமைப்பின் நடத்திய தாக்குதல்களில் 850 பேர்வரை உயிரிழந்துள்ளனர். (க)

# பி.பி.ஸி. நிறுவனத்தில் பாரிய மாற்றங்கள்

## 10 மொழி வானொலிச் சேவைகள் நிறுத்தம்

பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமான பி.பி.ஸி. நிறுவனம் மேற்கொண்டுள்ள பாரிய மாற்றங்களுக்கமைய வானொலியின் 10 மொழிச் சேவைகள் நிறுத்தப்படவுள்ளன.

பி.பி.ஸி நிறுவனம் தனது செய்திச் சேவைகளில் பெரியளவிலான மாற்றங்களை அறிவித்துள்ளது. ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய மொழிகளில் தொலைக்காட்சிச் செய்திச் சேவைகளை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளது. முதல் கட்டமாக அரபுத் தொலைக்காட்சிச் சேவை 2007 ஆம் ஆண்டு தொடங்கவுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய தொலைக்காட்சிச் சேவைகள் கூடுதலாக இணையத்தள சேவைக்கும் நிதி ஒதுக்கும் நோக்கில் பி.பி.ஸியில் உள்ள வானொலிச் சேவைகளில் உள்ள பத்து மொழிச் சேவைகள் நிறுத்தப்படவுள்ளன.

போலிஷ், க்ரோயேஷியன், கசக், கிரேக்கம், தாய், ஹங்கேரி, ஸ்லோபாக், ஸ்லோஷன், செக், பல்கேரி ஆகிய 10 மொழி வானொலிச் சேவைகளை நிறுத்தப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அன்ரன் ஜேசுதாஸ் - கலாஜோதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை மாணவனுமாகிய



**அ.நிக்ஷன் ஜோராம்**

இந்த ஆண்டு நடைபெற்ற புலமைப் பரீட்சையில் 149 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமைக்காகவும் இன்று தனது 10 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடுவதை முன்னிட்டும் பல்லாண்டு காலம் வாழ்ந்து பல வெற்றிகளைப் பெற வேண்டுமென்று மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவருக்கு ஊக்கமளித்த பெற்றோரையும் கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரையும் பாராட்டுகின்றோம்.

*சில்லாலை வடக்கு,*
*பண்டத்தரிப்பு.*

தாத்தா, சித்தப்பா,
அத்தை குடும்பத்தினர்.

(இ-45951)(42-15-45)


## நூலக நிதிக்காக 'இசைச் சங்கமம்'

யாழ்ப்பாணம்,ஒக்.27

இணுவில் பொது நூலகம் மற்றும் சன சமூகநிலையம் ஆகியவற்றின் அபிவிருத்தி நிதிக்காக நடத்தப்படும்.

'இசைச் சங்கமம்' நிகழ்ச்சி எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(ஒ-202)


**யாழ்.நகரில்**
**தீபாவளியை முன்னிட்டு**

என்றும் இல்லாத!

எங்கும் இல்லாத!

விலைக்கழிவில் !!!

*திருமணப் பட்டுப் புடைவைகள்
*சல்வார் கமிஸ் வகைகள் மற்றும்
* ஆடவர், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடைஅணிகள் இத்தனைக்கும்

கல்யாணப் பட்டுப்புடைவைகளின் கைராசி நிறுவனங்கள்

**நல்வி சில்க்ஸ்**
121/1,மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 5573.

**ராசி சில்க்ஸ்**
70,71A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P.: 5571.



**சுன்னாகம்**
**றோட்டறக்ட் கழக**
**அனுசரணையுடன்**

SERVICE Above Self

**2007 உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு! கணனி தகவல் தொழில்நுட்பப் பரீட்சைக்கு தயார்ப்படுத்தும் நோக்கில்...**

ait.tamil.com..
(opposit st.Antony's Church,Chunnakam.)
Intense Training Institution
(station Road, Mallakam.)

இணைந்து வழங்கும்
GIT மாணவர்களுக்கான இலவச
கணனிக் கருத்தரங்கு...

(42000)(26-16-45-42)

இடம் :- இராமநாதன் கல்லூரி மண்டபம், மருதனார்மடம்.
காலம் :- 27-10-2005 வியாழன் பி.ப. 3 மணி (பு.நே)

★ இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு அனுமதிக் கட்டணம் இலவசம்.



## திருமண மங்கள வாழ்த்து



இன்று (27.10.2005)
வியாழக்கிழமை இணுவில்
கந்தசுவாமி கோயில்
மணிமண்டபத்தில் இல்லற
வாழ்வில் இனிதே
இணையும்
கனவுகளைச் சுமந்த படி
காலமதை இனிதாக்க
இணைகின்ற தீபங்களே!
இனிப்பான ஜோடிகளே!
என்றென்றும் மகிழ்வுடனே
எண்ணமதை
சிறப்பாக்கி வளமுடன் வாழ
வாழ்த்துகின்றோம்
வஞ்சகமில்லா உம் நண்பர்கள்
நாம்!

திரு. திருமதி
பரமேஸ்வரன் தம்பதியரின்
ஏக புத்திரன்
**நாகபூஷணன்**

திரு. திருமதி
சியம்புநாதன் தம்பதியரின்
கனிஷ்ட புத்திரி
**சுகிர்தா**

நவக்கிரி,
புத்தூர்.

(42009)(42-15-45)

எல்லாளன் விளையாட்டுக்கழக
**நண்பர்கள்.**



FedEx Express FedEx Express FedEx Express FedEx Express FedEx Express FedEx Express FedEx Express FedEx Express FedEx Express FedEx Express FedEx Express

**வெளிநாட்டு அழைப்புகளுக்கு**



**4/-**

**இந்தியா 20/-**

எமது நிறுவனம் 3ஆம் ஆண்டில் காலடி பதிப்பதையிட்டு எமது வாடிக்கையாளர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், தீபத்திருநாளை முன்னிட்டு விசேட சலுகைகளை அனைத்துக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

உணவு, உடை, V.D.O பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருள்களை எந்த அளவினதானாலும் 5 வேலைநாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் இல்லங்களில் இருந்தவண்ணமே வெளிநாட்டு அழைப்புகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**சுவிஸ்லாந்துக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/=**

**லண்டனுக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/=**

**விரைவான பணப்பரிமாற்றத்திற்கு**

**WESTERN UNION®**
பணப் பரிமாற்றம்



நம்பகமான துரித சேவை **FedEx** Express

# திருமுருகன் கொம் நெற்

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக)

Tel - 021 222 7560 Fax - 021 222 7310

259, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835 Fax - 021 222 7836

36, செல்லப்பிள்ளையார் கட்டடம்,
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம்
166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 2027 Fax - 021 222 2993

வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.

WESTERN UNION பணப் பரிமாற்றம் (×10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரம் உயர நடவடிக்கை

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அவர்களுக்குத் தொழில் முயற்சிக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மருதங்கேணி, பருத்தித்துறை போன்ற பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகள் மற்றும் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளளோரின் நிலைமை ஆகியவற்றை 'ரவ்ரன்' அமைப்பின் பிரதான நிறைவேற்று அதிகாரி திருமதி ரோகிணி நாணயக்கார தலைமையில் நால்வர் அடங்கிய குழுவினர் நேரில் பார்வையிட்டனர்.

இவர்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை, மருதங்கேணி மக்கள் தங்கியுள்ள இடைத்தங்கல் முகாம்களிற்கு கடந்த திங்கட்கிழமை சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

இம்மக்களின் அபிவிருத்தியை மேம்படுத்தல், வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல் ஆகியன தொடர்பான கலந்துரையாடல் அன்றையதினம் யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் சுழற்சி முறைக் கடன் மூலம் சுயவேலைத் திட்டங்களை மேற்கொள்ள உதவி செய்தல், சிறுகைத் தொழில்களுக்கு வழிகாட்டுதல் தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

ஆழிப்பேரலையால் பாதிப்படைந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த சுய தொழிலுக்கான உதவிகள் வழங்குவதென இதன் போது முடிவுசெய்யப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், அழிப்பேரலை அனர்த்த மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தன் உட்படப் பலர் பங்குபற்றினர். (ஒ-204-202)

## மயிலணிப் பாடசாலைக்குப் பழைய மாணவி உதவி

சுன்னாகம், மயிலணி சைவ வித்தியாசாலையின் அபிவிருத்திக்காக அப்பாடசாலையின் பழைய மாணவி ஒருவர் ஒரு லட்சம் ரூபா நிதியை அன்பளிப்புச் செய்துள்ளார்.

கனடாவில் வசிக்கும் திருமதி தெட்சணாமூர்த்தி ரஜனி என்பவரே இப்பணத்தை வழங்கியுள்ளார்.

இப்பணம் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தின் சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பில் இடப்பட்டுள்ளது.

இப்பணத்தின் மூலம் கிடைக்கும் வட்டிப் பணம் பாடசாலையின் கல்வி அபிவிருத்திக்குப் பயன்படும் என்றும் -

தேவை ஏற்படின் கல்வித் திணைக்கள அனுமதியுடன் முழுத்தொகையையும் பயன்படுத்துவதெனவும் - பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர். (ஒ-152)

## புத்தகக் கண்காட்சி

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபை பொது நூலகத்தால் பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புத்திறன் ஆர்வத்தை மேம்படுத்தும் வகையில் போட்டிகள் நடத்தப்பட்டன.

இதேவேளை, புத்தக மற்றும் கண்காட்சிகள் இன்றும் நாளையும் முற்பகல் 10 மணிமுதல் மாலை 7 மணிவரை சாவகச்சேரி நகரசபை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ஒ-31)

## வாலிபர் சங்கம் அங்குரார்ப்பணம்

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய இளைஞர்களால் இந்து வாலிபர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சங்கத்தின் மூலம் இப்பிரதேச மாணவர் கல்வியை மேம்படுத்துதல், வறிய மாணவர்களுக்கு அறநெறிக் கல்வியை வழங்குதல், சமுதாய ஒற்றுமை, ஒழுக்கம் என்பவற்றைப் பேணுதல், கிராம அபிவிருத்தி போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-204-119)



கவிஞர் கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளையின் நினைவு அஞ்சலி நிகழ்வு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் கலாநிதி க.குணராசா (செங்கையாழியான்)தலைமையுரை நிகழ்த்துவதையும் அஞ்சலி உரை நிகழ்த்திய பிரமுகர்களையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பிரபா)

## மேலும் ஒரு தொகுதி விவசாயிகளுக்கு தூவல் நீர்பாசனப் பொறிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.27

ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிலையத்தின் நிதியுதவியுடன் இரண்டாம் கட்டமாக 94 விவசாயிகளுக்கு தூவல் நீர்ப்பாசனப் பொறிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் நோக்குடன் ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிலைய நிதியுதவியுடன் தூவல் நீர்ப்பாசனத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதற்கென 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைப்பயன்படுத்தி விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியமாகும், மிகுதி சுழற்சி முறைக்கடன் அடிப்படையிலும் தூவல் நீர்ப்பாசனப் பொறிகள் வழங்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக கடந்த ஜூன் மாதம் 10 கமநல சேவை நிலையப் பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 89 விவசாயிகளுக்குத் தூவல் நீர்ப்பாசனப் பொறிகள் வழங்கப்பட்டன.

விவசாயிகளுடன் கலந்துரையாடப்பட்டு இப் பொறிகளிலிருந்து பெறப்பட்ட பயன்களைக் கருத்திற்கொண்டு இரண்டாம் கட்டமாகவும் நீர்பாசனப் பொறிகள் வழங்க நீர்ப்பாசனப் பொறிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-204)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## கவிஞர் காரை. சுந்தரம்பிள்ளை அஞ்சலி நிகழ்வு

அமரர் கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளையின் அஞ்சலி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் முன்னாள் மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா (செங்கையாழியான்) தலைமையில் இடம்பெற்றது.

கிறிஸ்தவ இறையியல் கல்லூரி முதல்வர் பேராயர் சு.ஜெபநேசன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கவிஞர் சோ.பத்மநாதன், 'உதயன்' பிரதம ஆசிரியர் வ.கானமயில்நாதன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் வே.யுகபாலசிங் கம், மூத்த பத்திரிகையாளர் இ.சங்கர், கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை, நடனக்கலைஞர் வேல் ஆனந்தன் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

யாழ்.பல்கலைக்கழகப் பேராசியர் சி.சிவலிங்கராசா, கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி, த.ஜெயசீலன் ஆகியோர் அஞ்சலிக் கவிதை படித்தனர்.

இந்த நிகழ்வில் கவிஞர்கள், படைப்பாளிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு மறைந்த கவிஞருக்கு அஞ்சலி செலுத்தினர். (ஒ-7)

### மருதங்கேணிப் பிரதேசத்தில்

## கண்ணிவெடி அகற்றுவதில் தாமதம்; அதனால் வீடமைப்பில் பாதிப்பு!

யாழ்ப்பாணம்,ஒக்.27

கண்ணிவெடி அகற்றும் பணி முற்றுப்பெறாததால் மருதங்கேணிப் பிரதேசத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்புப் பணி தாமதமடைகிறது.

- இவ்வாறு சுனாமி மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தன் தெரிவித்தார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்புப் பணிகள் குறித்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிரந்தர வீடமைக்கும் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது. பருத்தித்துறையில் 565 வீடுகளினதும் மருதங்கேணியில் 66 வீடுகளினதும் கட்டுமானப்பணி நடைபெற்று வருகின்றது.

இதேவேளை மருதங்கேணிப் பிரதேசத்தில் 2 ஆயிரத்து 700 நிரந்தரவீடுகள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும். ஆயினும் 66 வீடுகள் மட்டுமே தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

ஏனையவர்களுக்கு அரச காணிகள் இனங்காணப்பட்டு வழங்கப்பட வேண்டிய தேவை இருந்தது. தற்போது காணிகள் இனங்காணப்பட்டு விட்டன. அவற்றைத் துப்புரவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

கண்ணிவெடியகற்றும் பணியை மனித நேய கண்ணிவெடியகற்றும் பிரிவு ஈடுபட்டு வருகின்றது.இப்பணி முற்றுப்பெற்றதும் வீடமைக்கும்பணி ஆரம்பிக்கப்படும் என்றார். (ஒ-202-204)

## மானிப்பாய் வைத்திய அதிகாரி பிரிவில் வார இறுதியில் புற்றுநோய் பரிசோதனை

வலி.தென்மேற்கு, ஒக்.27

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வாய்ப் புற்றுநோய் அறிகுறிகள் உள்ளனவா என்பதைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்படும் இலவச மருத்துவ பரிசோதனை 24 நிலையங்களில் எதிர்வரும் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை வலி.மேற்கு (சங்கானை) பிரதேச செயலகப் பிரிவில் இப் பரிசோதனை பின்வரும் இடங்களில் நடத்தப்படவுள்ளது.

முற்பகலில் சங்கானை அரசினர் வைத்தியசாலை, பண்ணாகம் ஆரம்ப சுகாதார நிலையம், வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகம் ,வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலை-

தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகம், சுழி புரம் ஐக்கிய சங்க பாடசாலை ஆகிய இடங் களிலும் -

பிற்பகலில் சங்கானை தேவாலய வீதி அ.மி.த.க. பாடசாலை ,பனிப்புலம் அம்பாள் சன சமூக நிலையம், வட்டுக்கோட்டை சங்கரத்தை மத்திய கல்லூரி, சுழிபுரம் பெரிய புலோ அண்ணா சன சமூக நிலையம், அராலி தெற்கு சரஸ்வதி வித்தியாசாலை ஆகிய இடங்களிலும் பரிசோதனை நடத்தப்படும் .

எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வலி.தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் -

முற்பகலில் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை,சுதுமலை குண்டடி சன சமூக நிலையம் ,இளவாலை அரசினர் மத்திய மருந்தகம் ,கட்டுடை சைவ வித்தியாசாலை, மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை, ஆனைக்கோட்டை முள்ளி ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய இடங்களிலும் -

பிற்பகலில் பிரான்பற்று ஆரம்ப சுகாதார நிலையம், சாவல்கட்டு ஆரம்ப சுகாதார நிலையம், பெரிய விளான் முன்பள்ளி, சண்டிலிப்பாய் வடக்கு அரசினர் த.க. பாடசாலை,மானிப்பாய் மெமோறியல் வீதி எலிம் கவுஸ் இல்லம், நவாலி வை.எம்.சி.ஏ. மண்டபம் ஆகிய இடங்களிலும் பரிசோதனை நடத்தப்படும். (ஒ-135)

## முள்ளி கிராமத்தில் மலசலகூட வசதி

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தின் ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவில் முள்ளிக் கிராமத்தில் வாழும் 12 குடும்பங்களுக்கு மலசலகூட வசதி செய்துகொடுக்கப்பட்டுள்ளது.

முள்ளி, மூன்றாம் கட்டையடி, சோமசுந்தரம் வீதி ஆகிய இடங்களில் உள்ள குடும்பங்களுக்கே மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

நீண்டகாலமாக இப்பகுதியில் உள்ள வறுமைக்கோட்டுக்குட்பட்ட பல குடும்பங்கள் மலசலகூட வசதியின்றி கஷ்டப்பட்டு வந்தன.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மற்றும் வெண்புறா நிறுவனம் ஆகியவை ஒன்றிணைந்து ஆனைக்கோட்டை விநாயகர் சன சமூக நிலையத்தின் அனுசரணையுடன் மலசலகூடங்களை அமைத்துக்கொடுத்துள்ளன. (ஒ-152)

ஒக்டோபர் – வாசிப்பு மாதம்
வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!
ஆசிரியர்களின் வாண்மை விருத்தியும்
ஆசிரியத் தொழிற் சங்கங்களும்
வாசியுங்கள்!
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
வருடச் சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு: இல.3, டொறிங்ரன் அவனியு, கொழும்பு 07. தொலைபேசி:011 2506272

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்



## விற்பனைக்கு

கிறேற்றன் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: வீனஸ் பாம், 79/12, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 0777 252478 (42004)

## காணி விற்பனைக்கு

யாழ்.நகரில் மானிப்பாய் வீதியில் K.K.S. வீதிச் சந்திக்கு அருகில் 2 பரப்புக் காணியும் 4200 சதுர அடி விஸ்தீரணமுள்ள கட்டடமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: குமார் அல்லது கலா T.P.: 011 2597183, 011 5364293. (சி-45692)

## வீடு விற்பனைக்கு

இல.975/17, வளன்புரம், கொழும்புத் துறையில் கிணற்றுடன் கூடிய 1½ பரப்புக் காணியில் உடன் குடியேறக்கூடிய நிலையிலுள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: செருபிம் பாக்கியலீலா, 41, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 3344. (41952)

## வீடும் வளவும் விற்பனைக்கு

K.K.S. வீதியில், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் பூநாறி மரத்தடிக்கும் இடையில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணியுடன் கூடிய சிறிய வீடு வளவு விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 3151569. (41918)

## தவறிவிட்டது

சுப்பிரமணியம் அரசலிங்கம் என்பவரது பிறப்புச் சான்றிதழ்கள், வங்கிப் புத்தகங்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை ஒன்று 24.10.2005 திங்கட்கிழமை முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அந்தோனி பெர்னாண்டோ, இல.15, இராசசிங்கம் வீதி, குருநகர் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (41976)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய்க்குற்றம் இல்லாத அரச உத்தியோகம் பார்க்கும் 1971 இல் பிறந்த, பட்டதாரிப் பெண்ணுக்கு தகுந்த நற்குடும்பத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. தொடர்புகளுக்கு: விளம்பர இல. 2729, மே/பா உதயன். (41933)

நாடு பூராகவும் இந்து, கிறிஸ்தவர்களில் டாக்டர், எஞ்ஜினியர், எக்கவுண்டன், விரிவுரையாளர், ஆசிரியை, அரச தனியார்துறை, வெளிநாடுகளில் கல்வி பயில்பவர்கள், வீட்டுப்பணியில் உள்ள மணமகள்களுக்கு அரச, தனியார், சுயதொழில், வெளிநாட்டில், குடியுரிமையுடைய மணமகன்கள் தேவை. தொடர்பு: சிவாலயா, சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனா வீதி, நல்லூர். T.P.: 0776528641 (மந்திரி அரண்மனை எதிரில்) (41992)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

"பாலர் பாடசாலை" மார்கழி 31 வரை அனுமதிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. தலைமை ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி,426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (42001)(42.32.34.19) 'ROYAL IS THE BEST'

## தீபாவளி மலிவு விற்பனை

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சுடிதார் மற்றீரியல்கள், சுடிதார், சாறிவகைகள், ஸ்கேட் & பிளவுஸ், T சேட் வகைகள் அனைத்திற்கும் தரச்சிறப்பில் முன்னனி பெற்ற ஒரே நிறுவனம்

**பபு கொமினிக்கேசன்**

இல.30, வளாக வீதி,
திருநெல்வேலி
(மக்கள் வங்கி அருகில்).
(41890) (42-16-17)



# கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்களான திரு.சோமநாதர் சிவராசா (நிர்வாக கிராம உத்தியோகத்தர்), திரு.சோமநாதர் கணநாதன் (வீடமைப்பு உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரான

## திருமதி சோமநாதர் இலட்சுமியம்மா

(தேவதானம், துன்னாலை வடக்கு, கரவெட்டி)

அவர்களின் மறைவு குறித்து துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலகம்,**
வலி.கிழக்கு, கோப்பாய்.

பிரதேச செயலரும்,
அனைத்து அலுவலர்களும்,
நலன்புரிச் சங்கம்.

(சி/45944) (32-34-19)



# யா/மகாஜனக் கல்லூரி-தெல்லிப்பழை

## ஜயரத்தினம் நினைவு தினமும் கனிட்ட பிரிவு பரிசளிப்பு விழாவும்

தலைவர்: **திரு.பொ.சுந்தரலிங்கம்** அவர்கள் (அதிபர்)
இடம்: **கல்லூரி மண்டபம்**
காலம்: **29.10.2005 சனிக்கிழமை முற்பகல் 9 மணி**

பிரதம விருந்தினர்: வைத்தியகலாநிதி ச.சிறிபவானந்தராஜா அவர்கள் (MBBS (Srilanka) போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)
நினைவுப் பேருரை: உயர்திரு.கி.குணாலசிங்கம் அவர்கள் (பிரதித் திட்டமிடற் பணிப்பாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்: உயர்திரு.ச.கைலாசநாதன் அவர்கள் (உதவிக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)
கௌரவ விருந்தினர் :
கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (J.P.) அவர்கள்
பரிசில் வழங்கல் : திருமதி சிவரஞ்சினி சிறிபவானந்தராஜா அவர்கள்
நன்றியுரை : திரு.வை.சிவராசா (செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(42003) (24-32-34-19) **- பாடசாலைச் சமூகம்.**

# ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்



வம்சாவளியாக அம்பாளின் அருள்கொண்டு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள **வி.நாகராஜ சுவாமிகள்** அவர்கள்

இவர் ஜாதகம், கைரேகை மூலமாக துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, மற்றும் வியாபார லட்சுமிகர விடயமான பொருத்தம், குடும்பப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கிறார். வெளிநாட்டுப் பயணம் மற்றும் எதிர்கால பலன்களை அறிவதற்கும் நாடுங்கள்.

★ எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் சுவாமிகளை சந்திக்கலாம்.

**பிள்ளையார் இன்**

அறை எண் 3, 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 077 9582596.
(42003) (32-34-19)

# அறிமுகமாகின்றது!

WWW.Callspeak.com

ஆகா! ஆகா!!

இன்ரநெற் Call - ரூபா 1.75 சதம் மட்டுமே

தொடர்புகளுக்கு:

**Arulcom**
No.1, Brown Road,
Jaffna.
T.P.: 222 3536

In Colombo 0777 365452

குறிப்பு: மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விஷேட கழிவு உண்டு.

(41981)(42.32.19.34)




உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஐப்பசித் திங்கள் 10ஆம் நாள் இன்று (27-10-2005) வியாழக்கிழமை காலை 7.35 மணிமுதல் 10.41 மணிவரையுள்ள மகம் நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபவேளையில்,

எமது புதல்வன்
திருநிறைசெல்வன்
**ஜெயரூபன் (ஜெயா)**
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புதல்வி
திருநிறைசெல்வி
**பிரகலா (கலா)**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருச்சி 620002 சிந்தாமணி, கரூர் பைபாஸ் றோட், "ஹோட்டல் மாயாஸ் திருமண மண்டபத்தில்" திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்: (சி/45945) (24-32-19-34))

திரு.சு.சுப்பிரமணியம்
திருமதி சறோஜினிதேவி தம்பதிகள்
இராச வீதி, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி, இலங்கை.

திரு.கா.சிவபாலன்
திருமதி [illegible] தம்பதிகள்
[illegible]
நீர்வேலி, இலங்கை.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தாமோதரம்பிள்ளை இரத்தினம்மா



"அருணகிரி", கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டவரான திருமதி தாமோதரம்பிள்ளை இரத்தினம்மா அவர்கள் நேற்று (26-10-2005) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் தாமோதரம்பிள்ளையின் (தபாலதிபர்) அன்பு மனைவியும் நடராசா செல்வராணி (கனடா), கணேசன் ஜெயராணி (M.L.T., சுலைமன் வைத்தியசாலை, கொழும்பு), திருநாவுக்கரசு புஸ்பராணி (லண்டன்), ஸ்ரீகாந்தன் (ஓய்வுபெற்ற ஆலை முகாமையாளர், கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம், வாழைச்சேனை), ஸ்ரீபாலா (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்), ஸ்ரீநேசா (ஓய்வுபெற்ற முகாமையாளர் H.N.B. வவுனியா தற்போது முகாமையாளர் சம்பத் வங்கி), ஸ்ரீரவீந்திரா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் நடராசா (ஓய்வுபெற்ற E.O. கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), கணேசன் (ஓய்வுபெற்ற M.L.T. யாழ். போதனா வைத்தியசாலை), திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற தீ தடுப்பு உத்தியோகத்தர், யா.மா.சபை), ஜெயலக்ஷ்மி, பிரேமரதி, விஸ்வரஞ்சினி, வத்சலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் அசோகன், அகிலா, கவிதா, நளினி, வாகீசன், வாதுலன், முகுந்தன், யாழினி, அனித்தா, சுமித்ரா, லாவண்யா, வாத்ஸல்யன், அர்ச்சனா, கௌசிகன், சஞ்சிகா, நிருபதன், கனிஷ்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அருவி துளிர், அருணி மீரா, மதுரன், விதுஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-10-2005) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் ஜயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

A-5, அன்டர்சன் தொடர்மாடி,
கொழும்பு - 05.
தொலைபேசி: 0112590698

தகவல்:
**பிள்ளைகள்.**

(41991) (24-32-34-19)

## விநாசித்தம்பி காசிப்பிள்ளை



சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட விநாசித்தம்பி காசிப்பிள்ளை அவர்கள் 25.10.2005 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நொத்தாரிஸ் விநாசித்தம்பி - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பையா - திருமேனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பூரணத்தின் அன்புக் கணவரும் யோகராசா (டினேஸ் அரிசி ஆலை, மன்னார்), வசந்தாதேவி (ஜேர்மனி), வாகீசன் (லண்டன்), அருட்செல்வி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செல்வராணி (ஆசிரியை, புனித வளனார் வித்தியாலயம், மன்னார்), சண்முகநாதன் (ஜேர்மனி), புஸ்பலதா (லண்டன்), பேரின்பதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, மனே[illegible]மணி, மங்களம், பொன்னுத்துரை (ஓய்வுபெற்ற அதிபர்), பால[illegible]கம் மற்றும் பாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), நடராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான பராசக்தி, பொன்னுச்சாமி, சோமசுந்தரம் மற்றும் பூமணி, திருநீலகண்டன், இலிங்கப்பிள்ளை, மகேஸ்வரி, இராசலிங்கம், கா[illegible]ந்சென்ற தெய்வேந்திரம் மற்றும் மகேஸ்வரி, பபா, இந்திரா ஆ[illegible]யோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற குழந்தை[illegible], விசாலாட்சி, புஸ்பராணி, காலஞ்சென்ற திருநாவுக்க[illegible], பராசக்தி, காலஞ்சென்றவர்களான கனகம்மா, இராசகோபாலபிள்ளை மற்றும் பரிமளாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தனஞ்ஜயன், தர்ஷிகன், அனுஷா, குணாளினி, காந்தசீலன், நிலானி, பபா, தனுசியா, தனுசங்கர், பிரவீண், நிஷாலினி, கிருஸ்ணி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(28.10.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சரவணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரவணை கிழக்கு,
வேலணை.
T.P.: 0777 820055

தகவல்:
**கா.யோகராசா**
**(மகன்).**

(41990)(32-34-19)

## ஆழ்வான் செல்லையா

(C.T.B.செல்லையா)
(முன்னாள் சாரதி, இலங்கை போக்குவரத்துச் சபை)



துன்னாலையைப் பிறப்பிடமாகவும் பளை வண்ணாங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வான் செல்லையா அவர்கள் 24-10-2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வான் - குஞ்சரி தம்பதியரின் அன்பு மகனும் செல்லையா பவளம் அவர்களின் அன்பு மனைவியும் பருமராணி, ராசகுமாரி, உதயம், கணேசலிங்கம் (சுவிஸ்), கலா, நங்கி, அசன், இதயராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான தங்கமணி, அரசன், செல்வராசா, பரமேஸ்வரன் மற்றும் இராசசிங்கம், கமலேஸ்வரன் (லண்டன்), ஜெயக்குமார் (கட்டார்), மாலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமானாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27-10-2005) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மலையான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வண்ணாங்கேணி,
பளை,

தகவல்:
**பேரப்பிள்ளைகள்.**

(41996)(26-32-34-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்



**திருமதி மேரி கலீஸ்ராசெல்வநாயகம்**
B.A(HONS)DIP.in.ED), M.ED.
(அதிபர்,பாஷையூர் சென். அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 24ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணிப் பட்டம் பெற்ற எமது அதிபரை வாழ்த்துவதோடு, அவரது தலைமையில் இன்று நடைபெறும் பாடசாலை பரிசளிப்பு விழாவும் சிறப்புற நடைபெற வாழ்த்துகிறோம்.

யா/பாஷையூர் புனித அந்தோனியார் R. C. மகளிர் வித்தியாலயம். (420[illegible]) (54-12-17) **பாடசாலைச் சமூகம்.**

## விழிநீர் சொரிய .....

தோற்றம் 01 * 05 * 1931



மறைவு 23 * 10 * 2005

### அமரர் க.சி. குகதாசன் M.Sc. (USA)

எங்களவன் நீ – எம்முடன்
இணைந்து உன் அறிவையும் ஆற்றலையும்
தந்தனை. பயன் பெற்றோம் நாம்.
விழிநீர் சொரிய அஞ்சலிக்கின்றோம் ஐயா.
அவன் தாள் அடைந்து அமரத்துவம் பெற தொழுகின்றோம்.

கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

அரசடி நண்பர்கள்

## கண்ணீர் அஞ்சலி



*சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபராகவும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற*

**அமரர்**
**சின்னையா குகதாசன்**

*அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

(சி-45957) (54-12-17)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 – 01 – 1932



மறைவு 26 – 10 – 1999

**அமரர் சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன்** (J.P.U.M)
(முன்னாள் தலைவர், வலி.வடக்கு பிரதேசசபை - மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம், யாழ்.பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்)

**நீங்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர உங்கள் ஆசிகளை வேண்டி நிற்கின்றேன்.**

மல்லாகம். (42033) (54-) திருமதி பா. ஸ்ரீபாஸ்கரன்

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ். மாவட்டத்தில் கம்பனி முகவர்களாகச் செயற்படும் வர்த்தகர்களுடன் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள கலந்துரையாடல் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள நிதித்துறையின் வணிக ஒன்றியக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள கம்பனி முகவர்களாகச் செயற்படும் சகல வர்த்தகர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கேட்டுள்ளது. (எ)

# வண. தம்மாலோக்க தேரர் ரணிலின் பக்கத்துக்கு ஆதரவு?

கொழும்பு, ஒக்.27

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு தனது ஆதரவை வழங்குவது என்பது குறித்து ஜாதிக ஹெல உறுமயவின் அதிருப்தியாளராகக் கருதப்படும் நாடாளுமன்ற உறுப்பினரான வண. உடுவே தம்மலோக்க தேரர் இன்று அறிவிக்கவுள்ளார்.

முன்னதாக நேற்றுக்காலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினார் வண. தம்மாலோக்க தேரர்.

அப்போது ஜனாதிபதித் தேர்தலின் போது தாம் கடைப்பிடிக்கவுள்ள கொள்கை குறித்து அவர்களிடம் நீண்ட விளக்கமளித்த தேரர், அதற்கான காரணங்களையும் சுட்டிக்காட்டினார்.

நேற்று மாலை 'உதயனுக்கு' க்குக் கருத்துத் தெரிவித்த வண. உடுவே தம்மாலோக்க தேரர், சரியான முறையில் தாம் முடி வொன்றை எடுத்திருக்கிறார் எனவும், இன்றைய தினம் அதனை உத்தியோகபூர்வமாகத் தாம் அறிவிப்பார் எனவும் கூறினார். (எ)

# ஹரிஸ் அணி இன்று மு. காங்கிரஸில்

கொழும்பு,ஒக்.27

தேசிய முஸ்லிம் காங்கிரஸ் இன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து கொள்ளவுள்ளது.


முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான தேசிய முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் எம்.பி. ஏ. அஸீஸ், செயலாளர் எச்.எம். எம்.ஹரிஸ் ஆகியோர் இன்று காங்கிரஸுடன் இணைந்து கொண்ட பின்னர் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் இணைந்து உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளனர் எனத் தெரிகிறது. (எ)


**ராஜா** யாழ்ப்பாணம்
கலை சிவாரர் சூர்யா, அஸின், நயன்தாரா நடித்த
**கஜினி**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 , 6.30 மட்டும்.
அடுத்த வெளியீடு: விக்ரம், அஸின், வடிவேல் நடித்த
**மஜா**

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடு 3 ஆவது ஜனத்திரள் வாரம்
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை** (சினிமா)
காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00

**மனோகரா** யாழ்ப்பாணம்
பார்த்தீபன், வடிவேலு, லட்சுமிராய் நடித்த
**குண்டக்க மண்டக்க**
28.10.05 முதல் யாழ். மாவட்டத்தில் முதல் முறையாக
DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்
சிலதினங்கள் மட்டும் காலை 8.00 மணி காட்சி காண்பிக்கப்படும்.
இளைய தளபதி விஜய் வெடிக்கும்
**சிவகாசி**
காட்சிநேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே.)
(சி-45593)


## கண்ணீர் அஞ்சலி



எமது தாயகத்தில் தாவரங்களின் தந்தையென
தனிச்சிறப்புப் பெற்றவரும் உயிரியல் ஆய்வாளரும்
கல்விச்சமூகத்தின் இமயமுமான

**அமரர்**
**சின்னையா குகதாசன்** (M.Sc.)

அவர்களின் அமரத்துவச் செய்திகேட்டு அதிர்ந்து போயுள்ளோம். இந்நிலையில் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், இவர் பாதம் பணிந்து இவர் பணி தொடர்வோமாக.

(சி-45960) (54-12-17) தமிழீழ [illegible], தமிழீழம்.

## மரண அறிவித்தல்கள்

### அருளானந்தம் வென்செஸ்லாஸ்
(தாளையடி ராசா)



தாளையடியைப் பிறப்பிடமாகவும் குருநகர் 2ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் வென்செஸ்லாஸ் (தாளையடி ராசா) அவர்கள் நேற்று (26.10.2005) புதன் கிழமை காலமானார்.

அன்னார் பச்சக்கிளியின் அன்புக் கணவரும் யூட்ஸ் நந்தன் (நோர்வே), யூடா-சதீஸ் (ஆசிரியர்), றோகினி, (பிரான்ஸ்), சுகந்தினி, ஷாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறிமலா (நோர்வே), பெலிஸ்ரன் (பிரான்ஸ்) ஜெமிலா, சுரேஸ் (சூரி போட்டோ) ஆகியோரின் அன்பு மாமனாரும் சரோன், ஜனனிக்கா (பிரான்ஸ்), ஜனுசன், ஜெனோசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2005) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3 மணியளவில் மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

*இல.7, 2ஆம் குறுக்குத் தெரு,*
*குருநகர்,*
*யாழ்ப்பாணம்.*
(42027) (54-12-17)
தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

### திருமதி ஆறுமுகம் நாகம்மா



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நாகம்மா 25.10.2005 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அப்பர் -சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராசா (புகையிலை வியாபாரி), சுப்பிரமணியம் இளைப்பாறிய தபால் ஊழியர் (தாடி மணியம்), அன்னமலர் (லண்டன்), கந்தசாமி (லண்டன்), குணரட்ணம் (லண்டன்), இராசமணி (குஞ்சக்கா), மல்லிகாதேவி (ஆஸ்திரேலியா), சுசிலாதேவி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும் பத்மாவதி- இராசநாயகி (பேபி), பவளநாயகி (லண்டன்), ரதி (லண்டன்), காலஞ்சென்ற அருளம்பலம் (இளைப்பாறிய தபால் ஊழியர்), சண்முகம் (இளைப்பாறிய தபால் ஊழியர்), மனோகரன் (ஆஸ்திரேலியா), ஆனந்தராசா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று (27.10.2005) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*G. P. S. றோட்,*
*கல்வியங்காடு.*
(42031) (54-12-17)
தகவல்:
**ஆறுமுகம் சுப்பிரமணியம் (மகன்)**

### திருமதி இராஜேஸ்வரி ஜெகநாதன் (கிளிஅக்கா)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வதிவிடமாகவும் தற்போது கந்தர் மடத்தில் வசித்தவருமான திருமதி இராஜேஸ்வரி ஜெகநாதன் (கிளிஅக்கா) அவர்கள் நேற்று (26.10.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 14, அம்மன் வீதி,*
*கந்தர்மடம்.*
*தொ. பே: 021-222 6864*
(42035) (54-12-17)
தகவல்:
**ஜெயவாணி கஜேந்திரன் (மகள்).**

### முருகேசு கனகரத்தினம்



சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல புகையிலை வியாபாரி முருகேசு கனகரத்தினம் (அண்ணையர்) நேற்று (26.10.2005) புதன்கிழமை காலமானார்.


அன்னார் சிவகாமிப் பிள்ளையின் அன்புக் கணவரும் தவநாயகி(மல்லிகா), இரவிகுலநாதன் (ரவி), இரவீந்திரன் (வலி.வடக்கு பிரதேச சபை ஊழியர்), இராகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரகுமார், மங்கையர்க்கரசி (மருத்துவ மாது, சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, தெல்லிப்பழை), இராசேந்திரம் (நாகலிங்கம் அன் சன்ஸ் எரிபொருள் நிரப்பு நிலையம், சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜமுகன் (B.A), கஜந்தன் (கல்வியியற் கல்லூரி, கோப்பாய்), கமல், கமலினி மற்றும் நிவேதிகா, துளசிகா, மோகனராஜ், டிலானி (நாகேஸ்வரி வித்தியாசாலை மாணவர்கள்), சோபினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.10.2005)வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருகேச பண்டிதர் வீதி,*
*சுன்னாகம் தெற்கு.*
(42033) (54-12-17)
தகவல்:
**க. இரவீந்திரன்**
**க. இரவிகுலநாதன்**

## கண்ணீர் அஞ்சலி



*கரவெட்டி விக்னேஸ்வராவின்*
கண்ணீர் அஞ்சலி
**அமரர் சி.குகதாசன்**
**(பழைய மாணவர்)**

*கரவையில் தோன்றிய காவிய நாயகனே!*
*கல்லூரி மாதாவின் புகழ் பூத்த மைந்தனே!*
*உயிரியல் துறையில் நுண்மாண் நுழை*
*- புலமையனே!*
*உங்கள் மறைவிற்காய் கல்லூரி மாதா*
*சிந்தும் கண்ணீர்ப் பூக்கள்.*

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினரின் துயரினை பகிர்வதுடன்,அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம்
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

(42024) (54-12-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான ஒப்பந்தத்தை விமர்சிக்கின்ற பிரதமர் அதை முறித்து யுத்தத்துக்குச் செல்லத் தயாரா?

## சவால் விடுக்கின்றார் ரணில்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தைப் புகழ்ந்து அதை வரவேற்றப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இப்போது அந்த ஒப்பந்தத்தை மோசமான முறையில் விமர்சிப்பது வேடிக்கையாக உள்ளது. அவ்வாறு விமர்சிக்கும் பிரதமர் முடிந்தால் அந்த உடன்படிக்கையைக் கிழித் தெறியுமாறு நான் பிரதமருக்கு பகிரங்கமாக சவால் விடுகிறேன்.

- இவ்வாறு பலப்பிட்டியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐ.தே.கவின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்கொண்டு உரையாற்றுகையிலேயே ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

பிரதமர் மஹிந்த ராஜப்க்ஷ ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படுவதற்குமுன் நான் புலிகளுடன் செய்த சமாதான ஒப்பந்தத்தை வரவேற்று இந்த ஒப்பந்தத்தால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன எனவும், அனைத்து மக்களும் நிம்மதியாக வாழக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் புகழ்ந்துத் தள்ளினார். ஆனால், அவர் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டு அவர் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் இணைந்ததிலிருந்து சமாதான ஒப்பந்தத்தை வெறுக்கத் தொடங்கியுள்ளார். அதை மிகவும் மோசமாக விமர்சித்துவருகின்றார்.

சமாதான ஒப்பந்தம் முக்கியம் அல்ல எனக் கருதும் பிரதமரால் இந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய முடியுமா? அவ்வாறு செய்து மீண்டும் ஒருமுறை யுத்தம் ஏற்படுவதை பிரதமர் விரும்புகிறாரா?

அப்படி அவர் விரும்பினால் பதினான்கு நாட்கள் முன்னறிவித்தலை புலிகளுக்குக் கொடுத்துவிட்டு, இந்த ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளலாம். அதற்கு அவருக்குத் தடை ஏதும் இல்லை. அவர் அதைத்தான் விரும்புகின்றார் என்றால் அதை அவர் செய்யமுடியும்.

தான் ஜனாதிபதியானால் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவேன் எனக் கூறிவரும் பிரத்மர் இப்போதைய சமாதான ஒப்பந்தத்தை வெறுப்பது ஏன்? உண்மையில் நிரந்தர சமாதானத்தை உருவாக்கும் எண்ணம் பிரதமருக்கில்லை. ஜே.வி.பியினரும், ஜாதிக ஹெல உறுமயவினரும் என்ன சொல்கிறார்களோ அவற்றை நடைமுறைப்படுத்துவதுதான் பிரதமரின் வேலை. அதற்கு மாறாக பிரதமரால் செயற்படமுடியாது. ஜே.வி.பியினரும் ஜாதிக ஹெல உறுமயவினரும் விரும்புவது யுத்தம் ஒன்றையே. அவர்களின் இந்த விருப்பத்தை நடைமுறைப்படுத்துவதுதான் பிரதமரின் கடமை.

ஆனால், நானோ சொல்வதைச் செய்பவன். செய்யமுடியாதவற்றைச் செய்வேன் என ஒரு போதும் வாக்குறுதியளிக்கமாட்டேன். சமாதானத்தை உருவாக்குவேன் என்றேன். அவ்வாறே செய்தேன்.

நான் மீண்டும் சொல்கிறேன் நான் ஜனாதிபதியானதும் நிச்சயம் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவேன். இந்நாட்டுப் பிரச்சினைக்குச் சரியான தீர்வை முன்வைப்பேன். அது எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வாக அமையும். எனவே, நிரந்தர சமாதானத்தை உருவாக்குவேன் எனக்கூறிக்கொண்டு யுத்தத்திற்குச் செல்ல முற்படும் பிரதமரை ஜனாதிபதியாக்க இந்நாட்டு மக்கள் ஒரு போதும் முன்வரக்கூடாது.

- இவ்வாறு ரணில் கூறினார். (எ-க)

## நடைபாதை வியாபாரிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநகரசபை ஆணையாளரின் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். இதனையடுத்து அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

அங்கு நின்ற மாநகரசபை ஊழியர்கள் வியாபாரிகளை வெளியில் அனுப்பி ஆணையாளர் அலுவலக நுழைவாயில் கதவை மூடினர். இதனால் அசம்பாவிதங்கள் தடுக்கப்பட்டன. பின்னர் வியாபாரிகள் சார்பில் இரு பிரதிநிதிகளை உள்ளே அழைத்து ஆணையாளர் கலந்துரையாடினார்.

யாழ். நகரில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு தம்மை அனுமதிக்குமாறு அவர்கள் கோரினர்.

அந்தக் கோரிக்கையை ஏற்பதற்கு ஆணையாளர் அடியோடு மறுத்துவிட்டார்.

எனினும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு சில தினங்கள் மட்டும் யாழ். முற்றவெளிப் பகுதியில் எதுவித கட்டணமும் செலுத்தாமல் நடைபாதை வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கையை மேற்கொள்ளலாம். எக்காரணம் கொண்டும் மின்சார நிலைய வீதிப் பகுதியில் நடைபாதைக் கடைகளை அனுமதிக்கமாட்டோம். மீறுவோருக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் ஆணையாளர். இதனையடுத்து நடைபாதை வியாபாரிகள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதேவேளை - இதுவரை மாநகரசபை ஊழியர்களால் அகற்றப்பட்ட பெயர்பலகைகளை, கடைகளின் உரிமையாளர்கள் அதற்குரிய தண்டப் பணத்தைச் செலுத்தி, இனிமேல் தாம் அவ்வாறு போக்குவரத்துக்கு இடைஞ்சலாக விளம்பரப்பலகைகளை அமைக்கமாட்டோம் என உத்தரவாதம் அளித்த பின்னர் பெற்றுச் செல்லலாம் - என்றும் ஆணையாளர் கூறினார். (ஐ-12)

## சோமாலியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி அவர் சோமாலியா செல்கையில் கிட்டத்தட்ட நான்கு மாதங்களுக்கு முன்னர் சோமாலிய கடல் கொள்ளையர்களால் கப்பல் கொள்ளையிடப்பட்டது. மகாலிங்கமும் கப்பல் பணியாளர்களும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவரை விடுவிக்க சுமார் ஒரு மாதத்திற்கும் அதிக காலம் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக நேற்று அவர் விடுவிக்கப்பட்டார்.

அதேவேளை, சோமாலியாவில் வைத்து கடல் கொள்ளையர்களால் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை காலியைச் சேர்ந்தவரான மற்றொரு கப்பல் கப்டன் இன்னும் விடுவிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரையும் விடுவிப்பதற்காக இலங்கை வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

சோமாலியாவின் ஊடாக கடல் வழி மார்க்கமாகப் பயணிப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் இலங்கை இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ- )

## மாணவர் எழுச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டில், மாணவர்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், உயர்பாதுகாப்பு வலயங்களுள் முடக்கப்பட்டுள்ள பாடசாலைகள், அண்மைக்காலமாக கல்விமான்கள் படுகொலை செய்யப்பட்டுவரும் சம்பவங்கள், ஆகிய விடயங்கள் தொடர்பாக கருத்துகள் முன்வைக்கப்படவுள்ளன என்று மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த மாநாட்டில் உயர்தர வகுப்பு மாணவர்கள் கலந்துகொண்டு தமது பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து அவற்றிற்குரிய தீர்வுகளை முன்னெடுக்கலாம் என்று தமிழ் மாணவர் ஒன்றிய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ஐ-12)

## தமிழர் தாயகத்தில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசங்களுக்கான தேர்தல் வாக்களிப்பு முன்னரும் நீதி, நியாயமாக நடத்தப்படவில்லை என்று சர்வதேசப் பார்வையாளர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இப்போதும் அப்பகுதி மக்களுக்கான தேர்தல் வாக்களிப்பு நியாயமாக நடத்தப்படும் என்பதற்கு உறுதிப்பாடு ஏதுமில்லை. ஆகவே, அப்பகுதிக்கென விசேட தேர்தல் ஏற்பாடுகளைச் செய்து வாக்களிப்பு நடத்த ஒழுங்குகள் செய்வதைத் தடை செய்து முதலாம் எதிர் மனுதாரரான தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட வேண்டும்.''

- என மனுதாரர் தமது மனுவில் கோரியிருந்தார்.

அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசத்து வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு என அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் விசேட கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுவதை ஆட்சேபித்தே இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்த மனுவில் கோரப்பட்டுள்ளவற்றை ஆட்சேபித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சார்பிலும், மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் சார்பிலும் இரண்டு இடையீட்டு மனுக்கள் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

✱ அரசுக் கட்டுப்பாடற்ற பகுதியில் பல லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். அவர்களின் வாக்குரிமையைப் பறிப்பதும், அவர்களை வாக்களிக்க விடாமல் தடுப்பதும் சட்ட முறையற்றது; நீதி, நியாயமற்றது. அத்தோடு நீதியான தேர்தல் முடிவுகளைப் பாதிக்கவல்லது.

✱ ஏற்கனவே இந்தப் பிரதேச மக்களின் வாக்களிப்பை மறுக்கும் விதத்தில், 2001 டிசெம்பர் பொதுத் தேர்தலின்போது எடுக்கப்பட்ட நடவடிக்கையை உயர் நீதிமன்றமே கண்டித்துள்ளது. அந்த மக்களின் வாக்குரிமை பேணப்பட வேண்டும் என அது தீர்ப்பளித்துள்ளது. அச்சமயம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச வாக்காளர்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்காக அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வர முயன்றபோது, அதற்கு அனுமதிக்காமல் அந்தப் பர்தைகளை மூடுவதற்கு உத்தரவிட்ட இராணுவத் தளபதிக்கு எதிராக, இரண்டரை லட்சம் ரூபா தண்டம் விதிக்கும் - மனித உரிமை மீறல் தொடர்பான - தீர்ப்பு ஒன்றை உயர் நீதிமன்றம் வழங்கியிருந்தது. இராணுவத் தளபதியின் செயற்பாட்டை அது கடுமையாகக் சாடியுமிருந்தது. எனவே, இந்த வாக்காளர்களின் உரிமையைப் பேணும் தனது முன்னைய தீர்ப்பையே உயர் நீதிமன்றம் இப்போதும் உறுதிப்படுத்த வேண்டும்.

-இவ்வாறு இடையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்த இரு தரப்பினரும் தத்தமது மனுக்களில் கோரியுள்ளனர்.

## வ பகு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தொலைபேசி அழைப்பின்படி இந்த இளைஞர்களை அவர்களது உறவினர்கள் தேடியபோதும் அவர்கள் குறித்து எந்த விவரமும் இன்னும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

உண்மையில் பொலீஸார் யாரேனும் இவர்களைக் கைதுசெய்தனரா அல்லது வேறு எவரும் இவர்களைக் கடத்தினரா என்பது குறித்து தெமட்டகொட பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (எ-க)

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலக அறைக்குப் பக்கத்தில் வெடித்துள்ளது. இதனால் அலுவலகக் கட்டடம் சேதமுற்றது. தெய்வாதீனமாக யாரும் பாதிக்கப்படவில்லை.

இதனையடுத்து அலுவலகம் இழுத்து மூடப்பட்டது. அலுவலகத்துக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும்வரை அதைத் திறக்க முடியாது என அலுவலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று தமிழ்த் தேசிய எழுச்சி விழா நடக்கின்றது. இது தொடர்பான எழுச்சி விழா அலுவலகம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்குப் பக்கத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கிரனேட்டை வீசியவர்கள் இருவர் அப்பகுதியிலிருந்து ஓடியதைத் தாங்கள் கண்டனர் என சிலர் தெரிவித்துள்ளனர். (எ-கு-ரி-9)

## வவுனியாவில் இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னியாவில் அனைத்துக் கடைகளும் மூடப்பட்டிருக்கும் என்றும் ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 27ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற தமிழ்த் தேசிய நீகழ்வில் வெளியிடப்பட்ட பிரகடனத்திற்கு ஆதரவு தெரிவித்து, தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெற்றன. அங்கெல்லாம் வவுனியாப் பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் பிரகடனங்கள் வெளியிடப்பட்டதுடன், விடுதலைப் புலிகளின் விஜயங்களை உத்தியோகபூர்வமாக வரவேற்பதில்லை என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

தொடர்ந்து நடந்துவந்த எழுச்சி நிகழ்வுகளின் வரிசையில் இறுதியானதாக இன்றைய நிகழ்வு இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். வவுனியாப் பிரகடனம் வெளியிடப்பட்ட மூன்றாம் மாத நிறைவு நாளில் அங்கேயே மீண்டும் இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் வவுனியா நகரம் முழுவதையும் சிவப்பு, மஞ்சள் கொடிகளினால் அலங்கரிக்குமாறு வவுனியா வணிகர் சங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்து முக்கிய வீதிகள் யாவும் அலங்கரிக்கப்பட்டு வருகின்றன. தேசியக் கொடி ஏற்றப்பட்டே நிகழ்வு ஆரம்பிக்கப்படும் என கண்காணிப்புக் குழுவினரிடம் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். இதன்போது படையினர் எந்த விதமான இடையூறுகளையும் ஏற்படுத்தக் கூடாது என்றும் ஏற்பாட்டுக்குழுவினர் கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

தாயகம், தேசியம், தன்னாட்சி என்பவற்றுக்கன ஈழத்தமிழரின் போராட்டத்தை ஆரம்பிக்குமாறு சர்வதேச சமூகத்தைக்கோரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வவுனியா பிரகடனம் கடந்த ஜூலை மாதம் 27ஆம் நாள் வெளியிடப்பட்டது.

அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் வடக்கு - கிழக்கில் ஐந்து மாவட்டங்களில் மக்கள் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த நிலையில் வவுனியா நகர சபை விளையாட்டரங்கில் இன்று வியாழக்கிழமை மாலை மூன்றுமணிக்கு இடம்பெறவுள்ள தேசிய எழுச்சிநாள் நிகழ்வுகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளன என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த எழுச்சி நிகழ்வானது, பிரகடனம் வெளியிடப்பட்ட மாவட்டத்தில் நடைபெறுவது, மாவட்டத்திற்கு மீண்டும் கிடைக்கும் பெருமை என்று எழுச்சிநாள் நிகழ்வுகளின் ஏற்பாட்டுக்குழுத் தலைவர் எஸ்.என்.ஜி.நாதன் தெரிவித்துள்ளார்.

அனைத்து மதத்தலைவர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், உயர்கல்விச் சமூகத்தினர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-8-9-ரி-164)

## சார்ள்ஸ் விஜேவர்த்தன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் விடுவிக்கப்பட்டார்.

இந்த வழக்கு நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சந்தேகநபரான வீரபாண்டியன் கோபி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு போதிய சாட்சிகள் கிடைக்காத காரணத்தினால் அவரை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு முன்னதாக சட்டமா அதிபர் சி.ஐ.டியினருக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

நேற்றைய விசாரணையின்போது சி.ஐ.டியினர் இதனை மன்றில் அறிவித்தனர். அதனையடுத்து சந்தேகநபரை விடுதலை செய்வதற்கான உத்தரவை கொழும்பு பிரதம நீதிவான் குசலா சரோஜினி வீரவர்தன பிறப்பித்தார்.

கடந்த ஒக்ரோபர் நான்காம் திகதி யாழ். இணுவிலில் நடந்த ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது அச்சமயம் யாழ். பொலீஸ் நிலைய அத்தியட்சகராக இருந்தவரான சார்ள்ஸ் விஜேவர்தன கடத்திக்கொலை செய்யப்பட்டார். இதுதொடர்பான சந்தேகத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினரான கோபியை பொலீஸாரும் படையினரும் யாழ்ப்பாணத்தில் அவரது வீட்டில் வைத்துக் கைதுசெய்தனர்.

இதன்பின்னர் விமானம் மூலம் கொழும்புக்கு அழைத்துவரப்பட்ட அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இவருக்கு எதிராக சாட்சியமளிப்பதற்காக நிறுத்தப்பட்ட 10 பொலீஸ் உத்தியோகத்தர்களும் இது தொடர்பாக நடத்தப்பட்ட மூன்று அடையாள அணிவகுப்புகளின்போதும் இவரை அடையாளம் காட்டவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கின் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஜனவரி ஆறாம் திகதி மன்றுக்கு அறிவிக்குமாறு நேற்றைய வழக்கு விசாரணையின் போது நீதிவான் சி.ஐ.டியினருக்கு உத்தரவிட்டார்.

விடுதலைப் புலிகள் உறுப்பினரான கோபியின் கைது குறித்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். இப்போது கோபி விடுவிக்கப்பட்டதை அடுத்து விடுதலைப் புலிகள் வசம் உள்ள 3 பொலீஸாரும் விடுவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-க-9-8-ரி)


**பயிலுநர் அல்லாத பட்டதாரிகள் செயற்குழு**

**அறிவித்தல்**

பட்டதாரி ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு தோற்றி நியமனம் கிடைக்கப் பெறாத பயிலுநர் அல்லாத பட்டதாரிகள் (மேல்மாகாணம், மத்திய மாகாணம், ஊவா, வடக்கு -கிழக்கு, தேசிய பாடசாலை ஏனையவை) பெற்ற புள்ளிகளின் நிழற்பிரதியுடன் நாளை காலை 7 மணிமுதல் 10 மணிக்குள் சமுகம் தரவும். அத்துடன், பொதுச் சேவைப் பரீட்சை எழுதியவர்களும் சமுகம் தந்து பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.

**பயிலுநர் அல்லாத பட்டதாரிகள்,**
**செயற்குழு.**

(42030)(30)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org